வெளியீடு 21-1-2008 Issued 21-1-2008

1280
27/08/08

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, அக்டோபர் 22, 2007—தொகுதி 38—எண் 2

Monday the 22nd October, 2007—Volume 38—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai-600 009

[Price Rs. 3.00

**22–10–2007**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. **வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 135-179

2. **தகவல் கோரல்—**

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு 179

திரு. சி. ஞானசேகரன் 179

(ஆ) கடலூர் சிப்காட் பகுதியில் குடிநீரில் கழிவுநீர் கலந்ததால் மர்ம நோய் 204,206-210

திரு. தி. வேல்முருகன் 206-210

*மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான் 209,210

(இ) கடலூர், தனியார் கிறித்தவ பள்ளி மாணவி மரணம் 204-206

திரு. தி. வேல்முருகன் 204,205

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 205-206

(ஈ) மேட்டூர் அணையின் உபரிநீர் கடலில் கலப்பதைத் தடுத்தல் 224-227

திரு. ஜி.கே. மணி 224-226

மாண்புமிகு திரு. துரைமுருகன் 226-227

பக்கங்கள்

**3. சிறப்புக் கவன ஈர்ப்பு—**

(அ) கோயம்புத்தூர், உக்கடம் பகுதியில் குடிசை மாற்று வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிந்தது—உயிர் இழந்தோர் மற்றும் காயமுற்றோர் குடும்பங்களுக்கு நிதியுதவி 180,190-203

திரு. விடியல் எஸ். சேகர் 180

திரு. கோவை தங்கம் 190-193

திரு. சி. கோவிந்தசாமி 193-195

திரு. கி. ஆறுமுகம் 195-197

திரு. வை. சிவபுண்ணியம் 197-199

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 199

திரு. கு. செல்வம் 200-201

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி 201-203

(ஆ) நெல் கொள்முதல் விலையை உயர்த்த வலியுறுத்துதல் 180-190

திரு. சி. ஞானசேகரன் 180-181

திரு. மு.க. பெரியசாமி 182

திரு. வே. மாரிமுத்து 183-184

திரு. சு. குணசேகரன் 185-186

திரு. கு. செல்வம் 186-187

மாண்புமிகு திரு. எ.வ. வேலு 187-190



பக்கங்கள்

**4. கவன ஈர்ப்பு—**

(அ) வாகன விபத்துகளால் ஏற்படும் இறப்பு 211-216

திரு. கி. ஆறுமுகம் 211,213-215

மாண்புமிகு திரு. கே.என். நேரு 211-213, 215-216

(ஆ) வால்பாறை, குடியிருப்புகள் மற்றும் கடைகள்மீது வன விலங்குகளின் தாக்குதல் 216-224

திரு. கோவை தங்கம் 216,220-221, 224

மாண்புமிகு திரு. என். செல்வராஜ் 216-220, 222-224

**5. அறிக்கைகள் அளித்தல்—**

(அ) பொது நிறுவனங்கள் குழு 227

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு 227

(இ) மனுக்கள் குழு 227

**6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு கிறித்தவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு, 2007 228-229

(ஆ) தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 229

(இ) சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 229-230

| | பக்கங்கள் |
|---|---|
| **6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** தொடர்ச்சி | |
| (ஈ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 230-231 |
| **7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** | 231-236 |
| (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2007 | |
| திரு. சி. ஞானசேகரன் | 231-234 |
| மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 231,235 |
| (ஆ) தமிழ்நாடு கிறித்தவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு, 2007 | 238-261 |
| *திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் | 238-244 |
| திரு. ஜி.கே. மணி | 244-249 |
| *மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 249 |
| செல்வி கே. பாலபாரதி | 249-252 |
| திரு. தி. இராமசாமி | 252-254 |
| திரு. டி. சுதர்சனம் | 254 |
| *திரு. எச். அப்துல் பாசித் | 254,255 |
| [illegible] கலைஞர் மு. கருணாநிதி | 238,256-261 |


228093
600 009


| | பக்கங்கள் |
|---|---|
| **7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** தொடர்ச்சி | |
| (இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 262-263 |
| மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 262-263 |
| (ஈ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 264-265 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 264-265 |
| (உ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 265-267 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 266,267 |
| (ஊ) தமிழ்நாடு கல்வி நிறுவனங்களில் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007 | 267-269 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 267-269 |
| (எ) தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 269-271 |
| மாண்புமிகு திரு. இ. பெரியசாமி | 269-271 |
| (ஏ) தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2007 | 271-278 |
| மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி | 271-272, 275-278 |
| திரு. சி. ஞானசேகரன் | 272-273 |
| திரு. ஜி.கே. மணி | 273-275 |
| திரு. என். நன்மாறன் | 275 |

பக்கங்கள்

7. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி**

(ஐ) தமிழ்நாடு நகர்–ஊர் அமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 — 278-280

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி — 278-280

(ஒ) தமிழ்நாடு நகர்–ஊர் அமைப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 — 280-282

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி — 280-282

(ஓ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 — 282-284

*மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா — 282-284

(ஔ) தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 — 284-286

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 284-286

(அஅ) சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 — 286-288

மாண்புமிகு திரு. துரைமுருகன் — 286-288

(அஆ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 — 288-290

மாண்புமிகு திரு. துரைமுருகன் — 289-290





பக்கங்கள்

8. **அரசினர் தீர்மானங்கள்—**

(அ) அலுவல் வரிசையில் மாற்றம் — 236

(ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் — 237

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் — 291-292

9. **அறிவிப்பு—**

தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.) — 262

10. **பேரவை மற்றும் மேலவையின் மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகளுக்குக் குடும்ப ஓய்வூதியம்** — 290-291

11. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 292-294

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 5, சர்வஜித் – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 அக்டோபர் 22, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்*
*எஞ்சாமை வேந்தற் கியல்பு."*

துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் அரசுக்குரிய தகுதிகளாகும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**21—**

### துணை மின் நிலையம்

***11847—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, சிட்லபாக்கம் பேரூராட்சியில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 அக்டோபர் 22

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) பெருகிவரும் மின் பளுவைக் கருத்திற்கொண்டு 11-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் சிட்லபாக்கம் பேரூராட்சியில் ஒரு 33/11 K.V. துணை மின் நிலையம் அமைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்லபாக்கம் பகுதியிலே துணை மின் நிலையம் அமைப்பதற்காக இடத்தை எல்லாம் தேர்வு செய்து, அந்தப் பேரூராட்சியைப் இருக்கின்ற, பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தமான இடத்திலே இடம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பகுதி வளர்ந்து வருகின்ற நகரப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் அமைத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு பெரும் துணையாக இருக்கும். ஆகவே, அதை அமைத்துத் தர வேண்டும் என்று அமைச்சரிடம் அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா அவர்களை வைத்துக் கொண்டுதான் தாம்பரம் தொகுதி, சிட்லபாக்கத்திற்கு அருகிலுள்ள மாடம்பாக்கத்திலே ஒரு 110/11 K.V. துணை மின் நிலையம் 5-9-2006 அன்று இயக்கி வைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர், தாம்பரம் தொகுதியில் மின் விநியோகம் தொடர்பான குறைகள் வெகுவாகக் குறைந்துள்ளன. மேலும், குரோம்பேட்டை, ராதா நகரில், 33/11 K.V. துணை மின் நிலையத்திற்கான கட்டுமானப் பணிகள் முடிவுற்று, இத்துணை மின் நிலையம் 4-5-2007 முதல் செயல்பட்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையிலேதான் சிட்லபாக்கத்தில் மின் பளு அதிகமாக இருக்குமானால் 11-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே மேற்கொள்ளப்படும் என்று நான் சொல்லியிருக்கின்றேன். இப்போது நடைபெ[illegible] ஐந்தாண்டுத் திட்டம்தான். முடிந்தால் அடுத்த [illegible] அரசாங்கம் முயற்சிக்கும்.

சென்னை-600 009



2007 அக்டோபர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு நான் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தாம்பரம் தொகுதி இன்றைக்குத் தகவல் தொழில்நுட்பப் பூங்காவிலே வளர்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், கல்லூரிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும் அங்கே அதிகமான மின் தேவைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக, மேற்கு தாம்பரம் பகுதி, முடிச்சூர் பகுதி, ஈஞ்சம்பாக்கம் பகுதி மற்றும் உத்தண்டி பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படுமா? வேளச்சேரி பகுதியிலே under ground cable அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது; அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தாம்பரம் நகரத்திலே நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்மூலமாக புதிய குடி தண்ணீர்த் திட்டம் துவக்கி வைக்கப்பட்டு, சற்றேறக்குறைய 36 கோடிக்கு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பாதாள சாக்கடைத் திட்டத்திற்கும் அனுமதி வழங்கக்கூடிய இந்த நாளிலே 45 கோடியிலே அந்தப் பணியும் நடைபெற இருக்கின்றது. இந்த இரண்டு பணிகளோடு தாம்பரம் நகரத்திற்கு under ground cable-ம் வந்தால், தாம்பரம் நகர மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். முக்கியமான ஒரு செய்தி; மேற்கு தாம்பரத்திலே ஒரு துணை மின் நிலையம் இருக்கின்றது. 1963 ஆம் ஆண்டு, 44 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட அந்தத் துணை மின் நிலையத்தில் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. அதேபோல, மேற்கு தாம்பரம், சானடோரியம் பகுதியிலே 1986-லே ஒரு துணை மின் நிலையம், 20 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டது. அதிலும் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. இந்தப் பணிகளை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் உடனடியாகச் செய்து தருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

(முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல 40 ஆண்டுகளுக்கு முன்னாலே நிறுவப்பட்ட துணை மின் நிலையமும்,

20 ஆண்டுகளுக்கு முன்னாலே நிறுவப்பட்ட துணை மின் நிலையமும் பழுதடைந்திருக்குமானால் இன்னும் ஒரு சில மாதங்களிலேயே, ஒன்று அவற்றைப் பழுதுபார்ப்பது, இல்லையென்றால் புதிதாக அந்தத் துணை மின் நிலையங்களை உருவாக்கித் தருவது என்று அரசு முடிவெடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார உற்பத்தியை அதிகரிப்பதற்கும், உற்பத்திச் செய்யப்பட்ட மின்சாரத்தை முறையாக வினியோகிப்பதற்கும் நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள் என்பதை நாங்கள் எல்லோரும் அறிவோம். சமீப காலமாக 10,000 transformers–மின்மாற்றிகளை அமைக்கின்ற பணி எல்லா இடங்களிலும் பரவலாக நடந்து வருகிறது. ஆனால் அதேநேரத்திலே, கடந்த வாரம் பத்திரிகைகளிலே ஒரு செய்தியைப் படிக்கின்றபோது தமிழக அரசு இரண்டு மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை விலைக்கு வாங்குவதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். பற்றாக்குறையான மின்சாரத்தை வெளி மாநிலத்தில் வாங்குகிற அதே நேரத்தில், தமிழ்நாட்டில் காற்றாலைமூலம் உற்பத்தியாகிற மின்சாரத்தை முறையாக வாங்குவதற்கான அடிப்படை வசதிகளை மின்சார வாரியம் ஏற்படுத்தவில்லை என்கிற தகவலும் நேற்று முன்தினம் பத்திரிகைகளிலே வெளிவந்திருக்கிறது. இதிலே எனது சட்டமன்றத் தொகுதியிலே காற்றாலைமூலம் மின்சாரத்தை உற்பத்திச் செய்கிற காற்றாலைகள் அதிகமாகச் செயல்பட்டு வருவதை நான் நேரிலே சென்று ஆய்வு செய்தபோது, அதிகமாகக் காற்று வீசுகின்ற காலங்களில், அதிகமாகக் காற்றாலைமூலம் மின்சாரம் உற்பத்திச் செய்யப்படுமோ அந்தக் காலங்களிலே அதிகப்படியாக உற்பத்தியாகிற மின்சாரத்தை உள்வாங்குவதற்கான கட்டமைப்பு வசதிகள் செய்யப்படாத காரணத்தினால் பல்வேறு காற்றாலைகளை காற்று அதிகமாக வீசுகின்ற நாட்களிலே இயக்கக்கூடாது என்று அதிகாரிகள் அந்தக் காற்றாலைகளை முடக்கிவிடுகிறார்கள். ஏனென்று சொன்னால், உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை வாங்குவதற்கான வசதிகள் அங்கே செய்யப்படவில்லை. காற்றாலைமூலம் வருகின்ற மின்சாரம் pollution இல்லாத, அதாவது மாசுபடுத்தாத மின்சாரம்; எந்தவிதமான இயற்கை இழப்பையும் செய்யாத மின்சாரம்; அந்த மின்சாரத்தை வாங்குவதற்குத் தேவையான அடிப்படைக் கட்டுமான



வசதிகளை, குறிப்பாக முப்பந்தல், ஆயக்குடி இன்னும் கோயம்புத்தூர் மாவட்டத்திலே இருக்கக்கூடிய உடுமலைப்பேட்டை போன்ற காற்றாலைமூலம் மின்சாரம் கிடைக்கின்ற இடங்களிலே அந்த மின்சாரத்தை உள்வாங்கி வினியோகம் செய்வதற்கென்றே தனியாக துணை மின் நிலையங்களை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய உங்கள்மூலம் ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் சொன்னதைப்போல, தமிழகத்திலே காற்றாலைகள் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தைப் பொறுத்தவரை சில இடங்களிலே சரியாக evacuation facilities இல்லாத காரணத்தினால், அப்படிப்பட்ட குறைகள் இருந்தன. ஒரு மாதத்திற்கு முன்னாலே காற்றாலைகள்மூலம் மின்சார உற்பத்திச் செய்கின்ற அதிபர்களையெல்லாம் அழைத்துப் பேசி, மின் உற்பத்தியாகின்ற இடங்களிலே அவர்களுக்குத் தேவையான, சரியான sub station–களை நிறுவி, அதை எடுத்து வினியோகிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. மறுபடியும் சில குறைகள் இருக்கின்றன என்று ஒரு வாரத்திற்கு முன்னாலே அவர்கள் தெரிவித்த காரணத்தால் மின் வாரியத் தலைவர், மின் வாரியத் துறைச் செயலாளர் மற்றும் உறுப்பினர்களைக் கூட்டி, அவர்களையும் அழைத்துப் பேசி அந்தக் குறைகளைப் போக்குவதற்கான நடவடிக்கைகள் முழுமையாக எடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 10 நாட்களிலே அந்தக் குறைகள் நிவர்த்திச் செய்யப்படும். ஆனால், இப்போதிருக்கிற பிரச்சினை என்னவென்றால், தமிழகத்திலே காற்றே வீசவில்லை. எப்பொழுதும் தென்மேற்குப் பருவக்காற்று வீசுகின்ற நேரத்திலே அதிகமான மின்சாரம் உற்பத்தியாகும். தென் மேற்குப் பருவக்காற்றிலிருந்து வட கிழக்குப் பருவக்காற்று வீசுகின்ற நேரத்திலே ஒரு 15 நாள் இடைவெளியில் காற்று இல்லாமல் இருக்கும். எனவே, காற்று இப்பொழுது வீசாத காரணத்தினாலே நமக்குக் கிடைத்துக் கொண்டிருந்த 1,600 மெகா வாட் மின்சாரத்திலே வெறும் 7 மெகா வாட் மின்சாரம்தான் கிடைத்துக்கொண்டிருக்கிறது. எனவே, வட கிழக்குப் பருவக்காற்று வீச ஆரம்பித்து முழுமையாகக் காற்றாலைகள் இயங்க ஆரம்பித்தால் உற்பத்தியாகின்ற மின்சாரம் முழுவதையும் பயன்படுத்துவதற்கு மின் வாரியம் உரிய நடவடிக்கை எடுக்கும்.

[2007 அக்டோபர் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கடுமையான மின்வெட்டு என்பது இன்றைக்கு தவிர்க்கமுடியாமல் இருந்து வருகிறது. திருப்பூர் மாதிரி இருக்கிற தொழில் நகரங்களில் இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை இடைவெளி விட்டு மின்சாரம் தொடர்ச்சியாக நிறுத்தப்படுகிறது. இரவு நேரங்களிலேகூட மின்சாரம் நிறுத்தப்படுவதால் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகிற ஒரு நிலைமை இருக்கிறது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சில தினங்களிலே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்று நம்பிக்கையோடு தெரிவித்தார்கள். ஆனால், அந்த நம்பிக்கை காற்றோடு இணைந்ததாக இருக்கிறது. ஆகவே, காற்று வீசவில்லையென்றால் இந்தப் பிரச்சினை தொடருகிற நிலைமை இருக்கிற காரணத்தினால் ஏற்கெனவே பத்திரிகைகளில் வந்ததைப்போல மின்சாரம் உபரியாக உள்ள மாநிலங்களிலிருந்து நம்முடைய பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்காக மின்சாரம் வாங்குகிற அந்தச் செய்தி சரிதானா? அப்படியானால், எவ்வளவு யூனிட் மின்சாரம் வெளி மாநிலங்களிலிருந்து வாங்கப்பட்டு, தமிழ்நாட்டின் பற்றாக்குறையை ஈடுகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புவதோடு, குறைந்தபட்சம் இரவு நேரங்களில் மின்சாரம் நிறுத்துவதைத் தவிர்ப்பதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் தெரிவித்ததைப்போல காற்று வீசுவது நின்றுவிட்ட காரணத்தால், காற்றாலைகள்மூலம் நமக்குக் கிடைக்கின்ற மின்சாரம் இப்போது கிடைக்கவில்லை. நாம் 1,500 மெகா வாட் மின்சாரத்தை வேறு மாநிலங்களுக்கு விற்றுக்கொண்டிருந்தோம். Surplus State–ஆக இருந்தோம். மகாராஷ்டிரா, பஞ்சாப் போன்ற மாநிலங்களுக்குக் கடந்த மாதம் வரையிலே விற்றுக்கொண்டிருந்தோம். இந்த மாதம் காற்றாலைகள்மூலம் கிடைக்கின்ற மின்சாரம் குறைந்துவிட்ட



2007 அக்டோபர் 22]

காரணத்தினால், முதல் தடவையாக மேற்கு வங்காளத்திலிருந்து 500 மெகா வாட் மின்சாரத்தை இப்போது வாங்கிக் கொண்டிருக்கின்றோம். எந்தப் பிரச்சினையும் இல்லாத அளவிற்கு எங்கே உபரியாக மின்சாரம் இப்போது இருக்கிறதோ, அங்கேயிருந்து வாங்கி நம்முடைய பயனீட்டாளர்களுக்கு மின்சாரம் முறையாக வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்திலே மின் துறையின் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம் இல்லாமல் இருந்தது. இதற்காக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் நேரடியாகத் தொடர்பு கொண்டு, அங்கே ஒரு கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தை நிறுவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். என்னுடைய வேண்டுதலுக்குத் துணையாக உங்களுக்குத் துணையாக இருக்கின்ற இந்த அவையின் துணைத் தலைவர் அவர்களும் அதற்குப் பரிந்துரை செய்தார்கள். எங்களுடைய கோரிக்கையை ஏற்று நாமக்கல் மாவட்டத்திற்கு மின் துறையின் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தை அங்கே ஏற்படுத்தித் தந்தமைக்காக இந்த அரசுக்கும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தினுடைய தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நமது அரசு அளிக்கின்ற வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் முதல், இலவசமாக வழங்கப்படுகின்ற, 'One hut one light' என்ற திட்டத்தின்கீழ் குடிசைகளுக்கு அளிக்கப்படுகின்ற மின்சாரம் வரை தேவை நாளுக்கு நாள் அதிகரித்துவருகிற வேளையிலே, 63 K.V. திறன் கொண்ட டிரான்ஸ்பார்மர்களை, on demand கணக்கெடுப்பு இல்லாமல் நேரடியாக 100 K.V.–ஆக மாற்றுவதற்கு அரசு முயற்சிக்குமா? ஏற்கெனவே 10,000 டிரான்ஸ்பார்மர்கள் வாங்குவதற்கு அரசு ஒப்பந்தப்புள்ளிமூலம் கேட்டிருக்கின்ற நிலையில் எத்தனை டிரான்ஸ்பார்மர்கள் இதுவரை வாங்கப்பட்டிருக்கின்றன; அவையெல்லாம் நிறுவப்பட்டுவிட்டனவா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

[2007 அக்டோபர் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தினுடைய பொன் விழா ஆண்டு நிறைவையொட்டி முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியிலேயே, வாங்கப்பட்ட 10,000 டிரான்ஸ்பார்மர்கள் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைந்தது 200 டிரான்ஸ்பார்மர்களிலிருந்து 300 டிரான்ஸ்பார்மர்கள் வரையிலே வழங்கியிருக்கின்றோம். இன்னமும் 500 டிரான்ஸ்பார்மர்கள் தமிழக மின் வாரியத்தின் கையிருப்பில் இருக்கின்றன. இதுவும் போதாது என்று எதிர்காலத்திற்கு மேலும் 4,000 டிரான்ஸ்பார்மர்கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் எந்தக் கேள்வி கேட்டாலும், பதில் சொல்கிறார் என்பதால் நீங்கள் எல்லோரும் கையைத் தூக்கிக்கொண்டே இருக்கிறீர்கள். மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாமல் நிறையக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜான் ஜோசப்.

**திரு. ஞா. ஜான் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம், நடைக்காவு, கருங்கல், மற்றும் சேரமங்கலம் என்கின்ற நான்கு பகுதிகளில் நான்கு துணை மின் நிலையங்கள் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டு பல மாதங்கள் ஆகின்றன. கடந்த மானியக் கோரிக்கையிலும் நான் இந்த விஷயத்தை வலியுறுத்தினேன். ஆனாலும் அந்தப் பணிகளைத் துவக்குவதில் எந்தவிதமான முன்னேற்றமும் தென்படவில்லை. தினம்தினம் மின்வெட்டையும், மின்னழுத்தக் குறைவையும் சந்திக்கக்கூடிய அந்த மாவட்டத்தினுடைய மின் தேவையை நிவர்த்தி செய்யக்கூடிய அளவில், இந்தத் துணை மின் நிலையங்களுக்கான பணியினை விரைவுபடுத்துவதுடன், அதைச் சீக்கிரமாக முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.



2007 அக்டோபர் 22]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நான்கு இடங்களிலேயும், துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு மின்சார வாரியம் நிதி ஒதுக்கிவிட்டது. கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கிற பிரச்சினை, துணை மின் நிலையங்களை அமைக்க வேண்டுமென்று சொன்னால், அங்கே நிலம் கையகப்படுத்துவதிலே மிகவும் காலதாமதமாகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கேயிருக்கக்கூடிய பொறியாளர்களோடு தொடர்பு கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒத்துழைப்போடு தேவையான அளவிற்கு, குறைந்தபட்சம் ஒரு துணை மின் நிலையம் அமைக்க, ஐந்து ஏக்கர் நிலத்தை வாங்கிக் கொடுப்பார்களேயானால், நான்கு மாதங்களுக்குள்ளாக புதிய துணை மின் நிலையங்கள் அமைத்துத் தரப்படும். அதற்கான முயற்சியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மின் வாரியம் சம்பந்தமாக நீண்டநெடிய விளக்கங்களை, பல்வேறு கேள்விகளுக்குப் பதிலாக அளித்து வருகிறார்கள். மின் உற்பத்திக்கும், மின் விநியோகத்திற்கும் மூலகாரணமாக இருந்து செயல்படக்கூடியவர்கள், மின் துறைப் பணியாளர்கள். அங்கே தற்காலிகமாகப் பணியாற்றிவரக்கூடியவர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று பல்வேறு தொழிற்சங்கங்களிலிருந்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை மின் நிலையம் அமைப்பதுதான் மூலக்கேள்வி.

**திரு. ஜி.கே. மணி:** அந்தத் துணை மின் நிலையத்திற்கு மூலகாரணம், அந்தப் பணியாளர்கள். ஆகவே, இதையும் சேர்த்துக்கொள்ளலாம். மூலக்கேள்விக்கு சம்பந்தம் இல்லையென்றாலும் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள் என்று நீங்களே சொன்னீர்கள்; அதற்காகத்தான். ஆகவே, மூலகாரணமாக இருக்கிற பணியாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று. அரசியல் கட்சிகளிடத்திலிருந்து, தொழிற்சங்கங்களிடத்திலிருந்து வந்த கோரிக்கையை ஏற்று, அமைச்சர் அவர்கள் படிப்படியாக நிரந்தரப்படுத்தி வருவது, வரவேற்கக்கூடியது; பாராட்டுகிறோம்.

[2007 அக்டோபர் 22

எல்லாத் தொழிற் சங்கங்களும் பாராட்டுகின்றன. இப்படிப் பாராட்டுகிற அதேவேளையிலேதான், நிரந்தரப்படுத்தக்கூடிய நிலையில் பணியாற்றாத தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துகிறார்கள் என்ற குறை, எல்லாத் தொழிற்சங்கங்களிடத்திலும் மேலோங்கி நிற்கிறது. உதாரணத்திற்கு, ஓர் ஒப்பந்தக்காரரிடம் பணியாற்றுகிறார்கள் என்று சொன்னால், அவர்கள் பணியாற்றிய பிறகு, சான்று வாங்கி நிரந்தரப்படுத்தலாம். அப்படி நிரந்தரப்படுத்துவதற்குக் காரணமாக இருக்கிற அந்தப் பணியாளர்கள், மின்சார வாரியத்திலே பணியாற்றாமல், ஏதோ ஓர் ஒப்பந்தக்காரரிடமிருந்து ஒரு சான்று பெற்று, அதைக் கொடுத்தவுடனே அதிகாரிகள் அதை ஏற்றுக்கொண்டு, அவர்கள் உதவியாளர்களாக, helper-களாக பணியமர்த்தப்படுகிறார்கள். அப்படிப் பணியமர்த்தப்பட்டவர்கள் சில மாதங்கள் கழித்து, அங்கே பணியாற்றியவர்களாகக் கருதப்பட்டு, அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படுகிறது. உதாரணத்திற்கு, ஒரு பொறியாளருடைய மனைவி B.E. படித்தவர். அவர் அங்கே பணியாற்றவேயில்லை. அவர் பணியாற்றாமலேயே ஒரு சான்று பெற்று, அங்கு உதவியாளராகப் பணியமர்த்தப்பட்டு, ஆறு மாத காலத்திற்குள், அவர் பொறியாளர். இப்படி ஒரு பொறியாளர் குடும்பத்தில் இருந்து 8 பேர் பொறியாளர்களாக வந்திருக்கிறார்கள்; மகள், மருமகன், மகன் என்று குடும்பத்தில் 8 பேர். இதற்கு நான் அமைச்சரைக் குறை சொல்லவில்லை; அரசைக் குறை சொல்லவில்லை. கீழேயிருக்கக்கூடிய பொறியாளர்கள், ஆயிரக்கணக்கானவர்களை ஏமாற்றிக்கொண்டிக்கிறார்கள். இப்படி, ஏமாற்றுவதாலே, இப்படி பணியாற்றிக்கொண்டிருக்கிற தற்காலிகப் பணியாளர்கள், 'எங்களுக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்படுகிறது, நாங்கள் பணியாற்றியும் பலன் இல்லாமல் போகிறது' என்ற குறையை இப்பொழுது உரக்கச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசும், இந்தக் குறையைக் களைவதற்கு, ஒரு தனிக் குழுவை அமைத்து, ஆய்வு செய்வார்களா, அந்தக் குறையைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள், ஒரு குற்றச்சாட்டை இங்கே சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையில்



2007 அக்டோபர் 22]

ஆட்சியிலே இருந்தபோது முதன்முதலிலே, விநியோகப் பிரிவிலே இருக்கக்கூடிய ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தபோது, அவர்களை அடையாளம் தெரிந்துகொள்வதற்காக, யார் யார் அந்தத் துறையிலே ஒப்பந்தக்காரர்களாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்பதற்கு, ஒரு பட்டியல் தயார் செய்யப்பட்டு, ஆயிரம் ரூபாய் போனஸ் வழங்குவது என்று முடிவெடுக்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டிலேயிருந்து, யார் யார் ஆயிரம் ரூபாய் போனஸ் பெற்று வருகிறார்களோ, அவர்களில்தான் இப்பொழுது 21,600 பேரை நிரந்தரம் செய்வது என்று முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்து, இப்பொழுது 6,000 பேருக்கு உத்தரவு பிறப்பித்திருக்கின்றோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, 2000 ஆம் ஆண்டில் ஆயிரம் ரூபாய் போனஸ் பெறாமல், அதற்குப் பிறகு யாரையாவது, அந்தப் பட்டியலிலே சேர்த்திருப்பார்களேயானால், அவர்களை மட்டுமல்ல, அப்படிச் சேர்த்தவர்கள்மீதும் கடுமையான நடவடிக்கையை இந்த அரசாங்கம் நிச்சயம் எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9–50

**23—**

**பணிமனை**

***30749—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலையில் போக்குவரத்துப் பணிமனை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னிமலையில் போக்குவரத்துக் கழக பணிமனை தொடங்க 3.00 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. போக்குவரத்துக் கழகத்தின் நிதி நிலைமைக்கு ஏற்ப விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, இயக்குநர் குழுவின் அனுமதி கிடைத்த பின்னர் கட்டட வேலைகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய நல்ல அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 1995 ஆம் ஆண்டு 2.40 ஏக்கரும், 2000 ஆம் ஆண்டு 60.60 ஏக்கரும் எடுக்கப்பட்டது. அந்த நில உரிமையாளர்கள் தங்களுக்குத் தொகை குறைவாக உள்ளது என்று நீதிமன்றத்திலே தொடர்ந்த வழக்கு நிலுவையிலுள்ளதாகவும் தெரிவிக்கிறார்கள். சென்னிமலையிலிருந்து பெருந்துறைக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், பத்து கிலோ மீட்டருக்கு மேல் வருகிறது. சென்னிமலையிலிருந்து காங்கேயம் செல்லவேண்டுமென்று சொன்னால் 13—லிருந்து 15 கிலோ மீட்டர் வருகிறது. சென்னிமலையிலே இருக்கிற பஸ்கள் யூனியன் அலுவலகத்திலே நிறுத்தப்பட்டு வருகின்றன. இதனாலே fuel waste ஆகிறது. எனவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு என்னென்ன ஊருக்கு பஸ் வேண்டும், என்னென்ன கிராமங்களுக்கு பஸ் வேண்டும் என்று சொல்லுங்கள் தம்பி, செய்கிறேன் என்று அள்ளித் தருகிற அமைச்சர் அவர்கள், நிலுவையில் இருக்கிற அந்த வழக்குகளையெல்லாம் விரைவிலே தீர்த்து, சென்னிமலையிலே பணிமனை அமைவதற்கு விரைவான நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை போக்குவரத்துக் கழகம் இட்டத்தட்ட இந்த ஓராண்டு காலத்திற்கு முன்பு என்ன நிலையில் இருந்தது என்பதை நீங்களெல்லாம் நன்றாக அறிவீர்கள். இந்த 15 மாத காலத்தில் கோவை போக்குவரத்துக் கழகத்திற்கு மட்டும் 600 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு, இயக்கப்பட்டு வருகின்றன. இப்பொழுதுதான் cash loss என்பதை நிறுத்தி, தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளக்கூடிய



அளவிற்கு அது வளர்ந்திருக்கிறது. அதனால், கடந்த 10 ஆண்டு காலத்திற்கு முன்பு நிலம் ஆர்ஜிதப்படுத்தப்பட்டிருந்தாலும்கூட, அதற்குப் போதிய நிதி வசதி இல்லாத நிலை இருந்தது. இப்பொழுது போக்குவரத்துக் கழகத்தில் ஓரளவிற்கு நிதி வசதி இருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை இந்த ஆண்டு நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். இந்த ஆண்டு அந்தப் பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நல்ல அறிவிப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் போக்குவரத்து நெரிசல் மிகவும் அதிகமாக இருக்கிறது. ஏற்கெனவே, நான் பல தடவை நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் நாகர்கோவில் செட்டிக்குளம் சந்திப்பில் போக்குவரத்துத் துறைக்குத் தேவையான அளவிற்கு நல்ல இடம் இருக்கிறது; அங்கே ஒரு பணிமனை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவர்களும் தருவதாக பல தடவை உறுதி தந்துகொண்டிருக்கிறார்கள். தற்சமயம் இருக்கக்கூடிய போக்குவரத்துப் பணிமனையில் நெரிசல் அதிகமாக இருப்பதால் சரியாக பஸ் விட முடியவில்லை, வேலை செய்ய முடியவில்லை என்று அதிகாரிகளே சொல்கிறார்கள். எனவே, தயவுசெய்து, நாகர்கோவில் நகரில் தற்சமயம் இருக்கக்கூடிய நிலையைக் கருதி, உடனடியாகப் போக்குவரத்துப் பணிமனை ஏற்படுத்தித் தர ஏற்பாடு செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற ஏழு போக்குவரத்துக் கழகங்களில், மதுரை போக்குவரத்துக் கழகம்தான் மிகவும் மோசமான நிதிநிலையிலே இருக்கின்ற போக்குவரத்துக் கழகமாக இன்றளவும் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிலே ஒரு புதிய பணிமனை கட்ட

வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் செலவு செய்யக்கூடிய அளவிற்கு நிதி நிலை இல்லை. இருந்தாலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலிலே இடம் கிடைப்பது என்பது மிக அரிது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிகாரிகளோடு ஆய்வு செய்து என்ன செய்யமுடியும்; அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்று ஆராய்ந்து, வரும் ஆண்டில் அதற்கு முன்னுரிமை தரலாம் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கோட்டம், நாகர்கோவில் மண்டலம், திசையன்விளையில் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்ற பணிமனையினைப் பேரூராட்சிக்குச் சொந்தமான இடத்தில் அமைத்துத் தருவதாக உறுதியளித்திருக்கிறார்கள். அந்த இடத்தில் புதிய பணிமனை அமைத்துத் தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திசையன்விளை, வள்ளியூர் ஆகிய இரண்டு பணிமனைகளிலும் கிட்டத்தட்ட 70–க்கும் மேற்பட்ட பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எல்லாப் பேருந்துகளும் 1996 ஆம் ஆண்டு நம்முடைய முதல்வர் அவர்கள் நான்காவது முறையாக முதல்வரான பின்பு கொடுக்கப்பட்ட பேருந்துகள். இதுவரை பல பேருந்துகள் புதிதாகக் கொடுக்கப்பட்டும் இந்த இரண்டு பணிமனைகளுக்கும் ஒரு பேருந்துகூட வரவில்லை. ஆகவே, அங்கே பழுதடைந்த மிக மோசமான நிலையில் ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் தருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 9–55*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திசையன்விளை பகுதியிலே புதிய பணிமனை அமைப்பதற்காகப் பேரூராட்சியிலே இடம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மதுரை போக்குவரத்துக் கழகத்தின்மூலமாக புதிய பணிமனை தொடங்குவது என்பது, நிதிநிலை காரணமாக கொஞ்சம் தாமதமாகிக் கொண்டிருக்கின்றது.



நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறோம். அனைவருக்கும் தருவது போல, மதுரை போக்குவரத்துக் கழகத்திற்கும், 300 புதிய பேருந்துகள் தரப்பட்டிருக்கின்றன. அஃதன்னியில் தனி நேர்வாக அதற்கு 250 புதிய பேருந்துகளை இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். ஆக, மதுரை போக்குவரத்துக் கழகத்திற்கு மட்டும் இந்த ஆண்டு 550 புதிய பேருந்துகள் தரப்பட்டிருக்கின்றன. ஆனால் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களைக்காட்டிலும் மிகப் பெரிய போக்குவரத்துக் கழகமாக 3,600 பேருந்துகளை இயக்குகின்ற போக்குவரத்துக் கழகமாக அது இயங்கிக் கொண்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 10, 12 ஆண்டு காலம் தொடர்ந்து இயங்குகின்ற பேருந்துகள் எல்லாம் அங்குதான் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தனி நேர்வாக, எப்படி சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்குத் தனியாக 1,000 புதிய பேருந்துகளைத் தந்திருக்கிறார்களோ, அதைப்போல மதுரைப் போக்குவரத்துக் கழகத்திற்கும் கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு இசைவு தந்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் சொன்னது போல, இந்த ஆண்டே அந்தப் பகுதிகளில் குறிப்பிட்ட புதிய பேருந்துகள் விடப்படும்; தொடர்ந்து வரும் ஆண்டுகளிலே முழுமையாக பழைய பேருந்துகள் எல்லாம் மாற்றப்பட்டு, புது பேருந்துகளாகத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான ஆலங்குடியில் பணிமனை அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தி, அந்த மக்களால் 15 ஆண்டுகளுக்கு முன்னாலே இடம் தரப்பட்டும் இதுவரை அங்கே பணிமனை அமைக்கப்படவில்லை. சென்ற கூட்டத்தொடரில் அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். அதற்கான எந்த நடவடிக்கையும் இதுவரை இல்லை என்பதைத் தெரிவித்து, உடனடியாக ஆலங்குடியில் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா? அதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 அக்டோபர் 22

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய பணிமனை அமைக்க வேண்டுமென்றும் தங்கள் பகுதியில் புதிய பேருந்துகளை வழித் தடங்களிலே இயக்க வேண்டுமென்றும் கேட்டார்கள். நேற்றைக்குக்கூட அவர்களுடைய தொகுதியிலே புதிய வழித்தடத்திலே அவரே அந்தப் பேருந்துகளை இயக்கியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். பத்திரிகையில் பார்த்தேன். தொடர்ந்து ஆலங்குடி பகுதியிலே புதிய பணிமனை இந்த ஆண்டு அமைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியின் தலைமையிடமான திருமயத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு பணிமனை அமைத்திட முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புவதோடு, சமீபத்தில், புதுக்கோட்டையிலிருந்து மதுரைக்குச் சென்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் என்னுடைய திருமயம் தொகுதி பேருந்து நிலையத்தினை சீரமைப்பதற்குக் கூடுதல் நிதி வேண்டுமென்று பேருந்து நிலையத்திலே அவர்களிடம் நானும், பொதுமக்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலமாகப் பேருந்து நிலையத்தைச் சீரமைப்பதற்கு ரூ.12,20,000—ஐ ஒதுக்கித் தந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள எனது திருப்போரூர் தொகுதிக்கு சென்னை மாநகரப் பேருந்துகளை அதிக அளவில் இயக்கி பொது மக்கள் மற்றும் தொகுதி மக்களின் கடந்த 15 ஆண்டு காலக் கோரிக்கையினை நிறைவேற்றிய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் மாவட்ட அமைச்சர் அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய



2007 அக்டோபர் 22]

திருப்போரூர் தொகுதியில் வசிக்கும் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் வசிக்கும் சிறுதாவூர் ஊராட்சி, மானாமதி வரை சென்னை மாநகரப் போக்குவரத்தினை நீட்டித்துத் தர வேண்டும். காரணம், கடந்த அண்ணா தி.மு.க. ஆட்சியில், முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது சிறுதாவூர் ஊராட்சி மற்றும் தொகுதி மக்கள் இந்தக் கோரிக்கையை வைத்தும் நிறைவேற்றாத காரணத்தால், தாங்கள் தங்கள் ஆட்சியில் சிறுதாவூர் ஊராட்சி, மானாமதி வரை போக்குவரத்தை நீட்டித்துத் தருவீர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள் ஐந்தாவது முறையாக பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு பல்வேறு சீர்திருத்தங்கள் போக்குவரத்துத் துறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளுக்கு சென்னை மாநகரத்திலிருந்து நேரடியாகப் பேருந்து வசதிகள் இல்லாமல் இருந்ததை, 40 கிலோ மீட்டர் வரை இயங்கிவந்த பேருந்துகளையெல்லாம் 50 கிலோ மீட்டர் வரை இயக்கலாம் என்று அனுமதி தந்து, அப்படி அனுமதி தந்ததன் காரணமாக, அவருடைய பகுதியான கோவளம் பகுதிக்கு தாம்பரத்திலிருந்து பேருந்தே இல்லாமல் இருந்த நிலைமையில், இன்றைக்கு இணைப்புத் தந்திருக்கிறார்கள். சிறுதாவூர் பகுதிக்கும் பேருந்து விட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது அந்த 50 கிலோ மீட்டருக்குள் இருக்குமானால் நிச்சயமாக அதைப் பற்றியும் பரிசீலிக்கலாம்.

முற்பகல் 10–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்தால் என்னுடைய தொகுதியி தொழுதூர் என்ற பணிமனை அகற்றப்பட்டுவிட்டது. அங்கே புதி பேருந்து நிலையம் கட்டித் தரப்படுமா, பழுதாகி இருக்கின்ற பழை பேருந்துகளை எடுத்துவிட்டு புதிய பேருந்துகள் விடப்படுமா என் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2007 அக்டோபர் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழுதூரிலுள்ள ஸ்ரீராமநல்லூர் என்ற ஊரிலிருந்து ஊராட்சி மன்றத் தலைவர் அவர்கள் வந்தார்கள். வந்திருந்து, ஏற்கெனவே நமது உள்ளாட்சித் துறைக்குச் சொந்தமாக இருந்த பேருந்து நிலையம் எடுக்கப்பட்டுவிட்டதால், இடம் பற்றாக்குறையாக இருக்கிறது; எனவே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திடம் இருக்கின்ற அந்த இடம் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். இந்தப் பேருந்து நிலைய விரிவாக்கம் வருகின்றபோது, அந்த இடத்தைக்கூட நாங்கள் அவர்களுக்குத் தருவதாக உறுதியளித்திருக்கிறோம்; விரைவுப் போக்குவரத்துக் கழகத்திலிருந்து. அதனால் உள்ளாட்சித் துறையின்மூலமாக நடவடிக்கை எடுக்கின்றபோது விரைவு போக்குவரத்துக் கழகத்திலிருந்து இடத்தைப் பேருந்து நிலையத்திற்குத் தந்து நல்ல பேருந்து நிலையம் அமைய எங்கள் துறை ஒத்துழைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூன்று நாட்களாகக் கையை உயர்த்தி, இன்றைக்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நமது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றபொழுது நான் வைத்த கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொடுத்த நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். நான் கேட்டபொழுது ஆத்தூருக்கும் பழனிக்கும், ஆத்தூருக்கும் பெங்களூருக்கும், ஆத்தூரிலிருந்து சென்னைக்கும் புதிய பேருந்துகளை இயக்கிக் கொடுத்தீர்கள். அதேபோல ஆத்தூரிலிருந்து திருப்பதி செல்வதற்கு ஒரு புதிய பேருந்தை இயக்க வேண்டும் என இந்த நேரத்திலே அமைச்சரைக் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல ஆத்தூர் தொகுதியில் Brake Inspector Office–க்காக இடம் வாங்கப்பட்டு 3 வருடங்கள் ஆகின்றன. அதிலே இதுவரைக்கும் கட்டடம் கட்டப்படவில்லை. அதையும் அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்க வேண்டும். நேற்றைக்கு நீங்கள் விட்ட Ultra Deluxe வண்டியில் நான் சென்னை வந்தபொழுதுதான் அந்த வண்டியினுடைய சுகத்தைப்பற்றித்



2007 அக்டோபர் 22]

தெரிந்துகொள்ள முடிந்தது. அதற்காகவும் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 10, 12 ஆண்டு காலமாக அண்டை மாநிலங்களோடு Inter State Permit ஒப்பந்தம் என்பது ஏற்படாமல் இருந்தது; ஏற்பட்டு பாதியிலேயே நின்றது. பாண்டிச்சேரியோடு கிட்டத்தட்ட 10, 15 ஆண்டு காலம்; ஆந்திராவோடு 7 ஆண்டு காலம்; கர்நாடக மாநிலத்தோடு 12 ஆண்டு காலம்; கேரள மாநிலத்தோடு 10, 12 ஆண்டு காலம்; இப்பொழுது இந்த 4 மாநிலங்களோடும் செய்யப்பட்ட அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது கிட்டத்தட்ட முடிகின்ற நிலையிலே இருக்கின்றது. பாண்டிச்சேரியோடு ஒப்பந்தம் முடிந்துவிட்டது. கர்நாடக மாநிலத்தில் அவர்களும் ஒத்துக்கொண்டார்கள், நாமும் ஒத்துக்கொண்டோம்; அரசாணை வெளியிட இருக்கிறோம். ஆந்திராவோடு 5 ஆண்டு காலத்திற்கு முன்பு ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கே அரசாணையை இப்பொழுதுதான் நாம் வெளியிட்டிருக்கிறோம். அப்படி வருகின்றபோது ஆந்திர மாநிலத்தினுடைய அந்த Inter State Permit ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகுதான் இங்கிருந்து புதிதாகப் பேருந்து விடுவதற்கு உரிய வாய்ப்பு இருக்கும். இல்லையென்றால் இங்கு ஒரு வரி கட்ட வேண்டும், அங்கு ஒரு வரி கட்ட வேண்டும். அதனால் பேருந்து இலாபகரமாக இயங்காது. அதனால் அது வந்தவுடன் அந்தப் பேருந்துகள் விடப்படும் என்று ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். அது நிச்சயமாக இயக்கப்படும். ஏனென்றால் அண்டை மாநிலங்களுக்கு நாம் புதிதாக கிட்டத்தட்ட 400 புதிய வழித்தடங்களிலே பேருந்துகள் விட இருக்கிறோம். அந்த அளவிற்கு ஒப்பந்தம் வந்திருக்கிறது. கர்நாடக மாநிலத்தோடு 50 ஆயிரம் கிலோ மீட்டர் வரைக்கும் நாம் ஓட்டலாம் என்றும், கேரள மாநிலத்தோடு 5 ஆயிரம் கிலோ மீட்டர் ஓட்டலாம் என்றும், நம்முடைய பாண்டிச்சேரி மாநிலத்தோடு அவர்கள் 150 பேருந்துகள் ஓட்டினால் நாம் 400 பேருந்துகள் ஓட்டலாம் என்று, இப்படியெல்லாம் ஒப்பந்தங்கள் வந்திருக்கின்றன. அதனால், ஆந்திராவோடு ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு திருப்பதிக்கும் பேருந்து விடப்படும். நமது Home Transport அந்தப் போக்குவரத்துத் துறையின் சார்பாக R.T.O. அலுவலகம், யூனிட் அலுவலகம் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதுவரை நம்முடைய தமிழகத்தில் அது

[2007 அக்டோபர் 22

ஏற்பட்ட நாளிலிருந்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகுதான் ஒவ்வொரு ஆண்டும் 5 புதிய அலுவலகங்களைத் திறந்துகொண்டிருக்கிறோம். கடந்த ஆண்டு 5, அதற்கு முந்தைய ஆண்டு 5 என்று புதிய கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. வருடந்தோறும் 3 R.T.O. அலுவலகங்களுக்கும், 5 யூனிட் அலுவலகங்களுக்கும் கட்டடங்கள் கட்டப்பட்டுக்கொண்டு வருகின்றன. தொடர்ந்து ஆத்தூர் பகுதியின் தேவையை அறிந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று அதற்கும் முன்னுரிமை வழங்கலாம்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**24—**

**கட்டட வசதி**

***16819—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் சார் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.



2007 அக்டோபர் 22]

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகுடஞ்சாவடியில் சார் பதிவாளர் அலுவலகம் 4–5–1970 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த அலுவலகம் 4–5–1970 முதல் 30–4–1988 வரை தொடர் வண்டித் துறைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வந்தது. 1–5–1988 முதல் இன்றுவரை வாடகைக் கட்டடத்தின் மேல் மாடியில் இயங்கி வருகின்றது. இந்தக் கட்டடத்திற்கு மாதம் ஒன்றுக்கு வாடகை ரூ.2,100 கொடுக்கப்படுகிறது. இந்தச் சார் பதிவாளர் அலுவலகத்தில் 27 கிராமங்களுக்குச் சொந்தமான நிலங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இந்தச் சார் பதிவாளர் அலுவலகத்தினால் அரசுக்கு வரக்கூடிய வருமானம், முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணமாக 2004 ஆம் ஆண்டு மட்டும் 1,67,35,972 ரூபாயும், 2005 ஆம் ஆண்டு 1,96,16,332 ரூபாயும், 2006 ஆம் ஆண்டு 2,42,91,385 ரூபாயும், இந்த ஆண்டு 2007 ஆம் ஆண்டு இதுவரை மூன்றரை கோடி ரூபாய்க்கு மேலாகவும் வருமானம் இருக்கின்றது. இவ்வளவு வருமானம் இருக்கின்ற இந்தச் சார் பதிவாளர் அலுவலகம் பாதை வசதி சரியாக இல்லாத ஓர் இடத்தில் இயங்குகின்ற காரணத்தினால் அங்கே பதிவு செய்ய வருகின்றவர்கள் வாகனங்களை நிறுத்துவதற்கு இட வசதி இல்லை. அப்படி வாகனங்களை நிறுத்தினாலும், அந்தப் பகுதியில் யாரும் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. உழைப்பவர்களுக்கு உரிய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேளுங்கள். (குறுக்கீடு) பெரிய debate நடத்தாதீர்கள். கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. வை. காவேரி:** இவ்வளவு வருமானம் இருக்கிற இந்தச் சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் இல்லை என்று அறிவிப்பு வருகின்றபோது நான் என்ன மாற்றாந்தாய்ப் பிள்ளையா என்று நினைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகின்றது. ஆகவே, கட்டாயம் அமைச்சர் அவர்கள் என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய

கோரிக்கையை விளம்பரப்படுத்துவதற்காகவே இந்த நேரத்தில் கேட்கின்றார் என்று நினைக்கின்றேன். அது வேண்டுமென்று கேட்டிருந்தால், கடந்த ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தலைவர் கலைஞர் அவர்கள் 15 கட்டடங்கள் கட்டுவதற்கு நிதியினை அளித்தார்கள். இந்த ஆண்டு 20 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய இடத்தில் கட்டடங்கள் கட்டுவதற்கு நிதியை ஒதுக்கித் தந்தார்கள். அப்போது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கையை வைத்திருந்தால் இந்த நிதிநிலை அறிக்கையிலேயே நாங்கள் பரிசீலித்து இருப்போம். இப்போது நிதியில்லாத காரணத்தாலே வருகிற ஆண்டுகளில், தேவைக்கேற்ப, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** வரும் ஆண்டில் செய்து கொடுப்பேன் என்று உறுதி கொடுத்த அமைச்சருக்கு நன்றி கூறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

**திரு. அ. சின்னசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதி, பேரணாம்பட்டில் துணைப் பதிவாளர் அலுவலகம் நீண்ட நாட்களாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அங்கே புதிதாக கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா? அமைச்சர் அவர்கள் அங்கே புதிய கட்டடம் கட்ட ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, வருகின்ற நிதிநிலை அறிக்கையில் தலைவர் கலைஞருடைய தாராள மனப்பான்மையைக் கணக்கில்கொண்டு கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.



**25—**

## காட்சிக் கோபுரம்

***23173—திரு. எஸ். ஜெயபால்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, முட்டம் சுற்றுலா மையத்தில் காட்சிக் கோபுரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குளச்சல் தொகுதி, முட்டம் சுற்றுலா மையத்தில் காட்சிக் கோபுரம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதும் தற்போது துறையின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி கடற்கரையைப் போன்று அழகிய கடற்கரையைக் கொண்ட சுற்றுலா மையமாக முட்டம் கடற்கரை திகழ்ந்து வருகின்றது. தினந்தோறும் நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் அந்த இடத்திற்கு வருகை தந்துகொண்டிருக்கின்றார்கள். இந்தச் சுற்றுலாப் பகுதியை மேலும் வனப்புடையதாக, அழகுடையதாக மாற்றினால், இன்னும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் அங்கே வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்தப் பகுதியிலே ஒரு காட்சிக் கோபுரத்தை அமைத்து, அந்தக் காட்சிக் கோபுரத்திலிருந்து கடற்கரையைப் பார்க்கின்றபோது, மேற்குப் பகுதியிலிருந்து ஏறத்தாழ 10 கி.மீ. தூரத்திலும், கிழக்குப் பகுதியிலிருந்து ஏறத்தாழ 10 கி.மீ. தூரத்திலும் அந்தக் கடற்கரை அழகாகத் தோன்றுவதைப் பார்க்க முடியும். எனவே, சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கின்ற விதத்திலே, முட்டம் பகுதியிலே ஒரு காட்சிக் கோபுரத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மேலும், இந்த மாவட்டம், சுற்றுலாத் துறை அமைச்சருடைய சொந்த மாவட்டம் என்பதால், அதிக அக்கறை எடுத்து, முட்டம் கடற்கரையிலே ஒரு காட்சிக் கோபுரத்தை அமைத்துத் தருவார்கள் என்று நான் நம்புகின்றேன்.

[2007 அக்டோபர் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுத்தான் முட்டம் பகுதியில் மத்திய, மாநில அரசின் உதவியோடு ஒரு கோடி ரூபாய்க்கு நடைபாதை, பாலம், குடில்கள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. காட்சிக் கோபுரத்தைப் பொறுத்தவரையிலே, அப்பகுதியில்—சுமார் 30 கி.மீ. தூரத்தில் கன்னியாகுமரி இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியில்—ஏற்கெனவே நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் காட்சிக் கோபுரம் உருவாக்கப்பட்டு, மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. தேவையில்லை என்று துறை கருதிய காரணத்தினால், அதைத் தற்போது செயல்படுத்துவதற்கு முடியாத நிலை இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை வருகின்ற நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று கூறிய அமைச்சரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதோடு என்னுடைய தொகுதியைச் சேர்ந்த தெக்குறிச்சியில் அமைந்திருக்கின்ற கடற்கரை, மெரினா கடற்கரையைப் போன்று அழகுமிக்க கடற்கரையாக இருந்துகொண்டிருக்கின்றது. அங்கேயும் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றார்கள். எனவே, சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற விதத்திலே, தமிழக சுற்றுலாத் துறையின்மூலமாகச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காகச் சில அம்சங்களை அங்கேயும் ஏற்படுத்தித் தர இயலுமா என்பதையும் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெக்குறிச்சி கடற்கரைப் பகுதியிலே, சுற்றுலாத் துறையின் சார்பாக மத்திய மாநில அரசின் நிதியுதவியோடு பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் என்னென்ன பணிகள் நிறைவேற்றப்பட வேண்டுமோ அவற்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், அவற்றையும் நிறைவேற்றித் தரத் துறை தயாராக இருக்கிறது.



2007 அக்டோபர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன்.

**திரு. கோ. ஐயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அடுத்து, மெரினா கடற்கரையைப் போன்று அதிக மணற்பரப்பில் உள்ள கடலூர் வெள்ளிக் கடற்கரை, கடலூர் தொகுதிக்கு ஒரே பொழுதுபோக்கு இடமாக அமைந்திருக்கின்றது. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சரவர்கள் கோடை விழாவிற்கு வருகின்றபோது அதை நேரடியாகக் காண்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்றார்கள். எனவே, கடலூரிலுள்ள வெள்ளிக் கடற்கரையை அழகுபடுத்தும் விதமாகவும், கடலூர் மக்களின் பல ஆண்டுக்காலக் கோரிக்கையை ஏற்கும்விதமாகவும், கடலூரில் அதிக தொழிற்சாலைகள் இருப்பதாலும், பல வெளிநாட்டினர் வந்து செல்கின்ற இடமாக கடலூர் இருப்பதாலும், வெள்ளிக் கடற்கரை இருக்கின்ற காரணத்தினாலும், அங்கே தங்கும் விடுதியும், உணவு விடுதியும் அமைப்பதற்கு மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டபடி, கடலூர் மாவட்டத்தில் வெள்ளிக் கடற்கரைப் பகுதியில் இந்தத் துறைக்குச் சொந்தமான இடங்கள் இல்லை. இடங்கள் இருந்தால் நிச்சயமாக உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலும், உலக நாடுகளிலும் சுற்றுலா என்பது இன்றைக்கு மிக முக்கியமான ஒரு துறையாக மாறி, அதன்மூலமாக அந்த அரசுகளுக்கு கோடிக்கணக்கான ரூபாய் அந்நியச் செலாவணியாக, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மூலமாகவும், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள்

மூலமாகவும், கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், இந்தத் துறையின்மூலமாக தமிழகத்தின் முக்கியமான பகுதிகளிலே சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தவேண்டும்.

*முற்பகல் 10–15*

பக்கத்து மாநிலமான கர்நாடகா மாநிலத்தில் இருக்கின்ற பிருந்தாவன் கார்டனில் நீரைக்கொண்டு dancing system கொண்டுவந்து அதன்மூலமாக பல இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற ஒரு திட்டம் இருக்கிறது. இதுபோன்ற புது மாதிரியான திட்டங்களைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தி சுற்றுலாவை மேம்படுத்த வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஒப்புதலைப்பெற்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப்பெற்று துறையின் செயலாளர் அவர்கள் வெளிநாடுகளுக்கெல்லாம் சென்றுவந்து இந்தச் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான ஆய்வுத் திட்டத்தைத் தயாரித்தார்கள். அந்தத் திட்டம் தற்போது எந்த நிலையில் இருக்கிறது? நான்கூட அரசின் உறுதிமொழிக் குழுவின் சார்பாக திருவண்ணாமலை மாவட்டத்திற்குச் சென்றிருந்தபோது மாவட்ட ஆட்சித் தலைவர், தெற்கு ஆசியாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய dancing system கொண்டு வருவதற்கு அரசுக்குப் பரிந்துரை செய்திருப்பதாகவும், ஒருகோடி ரூபாய் நிதி கேட்டிருப்பதாகவும் தெரிவித்தார். இதுபோன்ற சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கு நம்முடைய அரசு விரிவான திட்டம் தயாரித்து இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இந்தத் துறையை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பல்வேறு பணிகளின் அடிப்படையில் இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வெளிநாட்டுப் பயணிகளைப் பொறுத்தமட்டில் சுமார் 14 இலட்சம் பேரும், உள்நாட்டுப் பயணிகளைப் பொறுத்தமட்டில் சுமார் 4 கோடி பேரும் தமிழகத்திற்கு வந்து செல்கிறார்கள். எனவே, இந்தத் துறையின் பல்வேறு





பணிகள் மேம்படுத்தப்பட்ட காரணத்தால், அதிகமான பணிகள் நடைபெற்ற காரணத்தால், அதிகமான பயணிகள் தமிழகத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். இந்தியாவைப் பொறுத்தமட்டில் இந்தத் துறையில் தமிழகம் இப்போது மூன்றாவது மாநிலமாக விளங்குவதற்குக் காரணம் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய அறிவுரையை ஏற்று வெளிநாடுகளுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை நம்முடைய மாநிலத்திலும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தத் துறை பல்வேறு பணிகளை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளையும் கருத்திலே கொண்டு, பல்வேறு பணிகள் நடைபெற்றுகொண்டிருக்கின்றன. முதல் கட்டமாக, வண்டலூரில் Butterfly Park அமைப்பதற்கு விரைவில் அரசாணை வெளியிடப்பட உள்ளது. அதேபோல், வண்டலூரில் Night Safari என்ற இரவு கானக சுற்றுலாத் திட்டமும் தொடங்க சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இரண்டாண்டு கால அவகாசம் கேட்டிருக்கிறார்கள். அதற்கான அடிப்படைப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதுபோன்று பல்வேறு பணிகள் நம் மாநிலத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணங்களும் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் மாரியம்மன் தெப்பக்குளம் அருகில் அருள்மிகு மரகதவள்ளி முக்தீஸ்வரர் கோயில் என்ற ஒரு கோயில் உள்ளது. அது அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் வருகிறது. அந்தக் கோயிலில் உள்ள சிவலிங்கத்தின் மீது குறிப்பிட்ட காலங்களில் சூரிய வெளிச்சம் படும். சூரிய பகவானே நேரடியாக வந்து வழிபடுகிறார் என்ற ஐதீகம் உள்ளது. ஆனால், வட மாநிலங்களில்தான் சூரிய கோயில், சூரிய சாஸ்திரம் எல்லாம் இருக்கிறது என்பதைவிட தென்னகத்திலும் குறிப்பாக தமிழகத்திலும் இப்படி ஒரு பிரபலமான ஆலயம் உள்ளது என்பதை சுற்றுலாத் துறை விளம்பரப்படுத்த முன்வருமா? அதை சுற்றுலா கையேட்டில் இணைத்து குறிப்பிட்ட தேதிக்கு முன்பாகவே அங்கே தரிசிக்க வருகின்றவர்களை ஊக்கப்படுத்த துறை முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2007 அக்டோபர் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை வரவேற்கத்தக்கது. மதுரையைப் பொறுத்தமட்டில் மதுரை மீனாட்சியம்மன் கோயிலை விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிறோம். வருங்காலத்தில் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று, இதுபோன்ற பிரசித்தி பெறாத இடங்களையும் மக்களுக்குத் தெரியப்படுத்தக்கூடிய முயற்சிகளில் இந்தத் துறை ஈடுபடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**26—**

**வாழைப்பழம் கொள்முதல்**

***6297—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் சிறுமலையில் உற்பத்தியாகும் மலை வாழைப்பழங்களை பழனி பஞ்சாமிர்தம் தயாரிப்பதற்குக் கொள்முதல் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பழனி பஞ்சாமிர்தத்திற்குத் தேவையான மலைவாழைப்பழம் ஆண்டு முழுவதும் கிடைப்பது அரிது என்பதாலும் ஒப்பந்த முறையில் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாலும், திருக்கோயிலே மலைவாழைப்பழங்களை நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.



2007 அக்டோபர் 22]

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியில் தயாரிக்கப்படக்கூடிய பஞ்சாமிர்தம் என்பது அபிசேகப் பொருளாகவும், பிரசாதமாகவும், குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை பல மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும்கூட இன்றைக்குப் பயன்படுத்தி வருகிறார்கள். இத்தகைய பஞ்சாமிர்தம் என்பது பாதுகாப்பாகத் தயாரிக்கப்பட வேண்டியிருக்கிறது. அனைத்து வாழைப் பழங்களிலும் அதைத் தயாரிக்க முடியாது. விருபாட்சி மலைகளிலே விளைந்த பழங்களிலிருந்துதான் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பஞ்சாமிர்தம் என்பது தயாரிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் சிறுமலை போன்ற மலையில் உற்பத்தியாகக்கூடிய பழங்கள் பயன்படுத்தப்பட்டன. சமீபத்தில் இந்தப் பஞ்சாமிர்தத்திற்கு எந்தப் பழம் வேண்டுமானாலும் டெண்டர் முறைப்படி எது விலை குறைவாகக் கிடைக்கிறதோ அது பயன்படுத்தப்படுகிறது. ஆகவே இது food poison போன்றவற்றிற்கு வழிவகுக்கும். பஞ்சாமிர்தம் போன்ற பொருட்கள் மிகத் தரமாகத் தயாரிக்கப்பட வேண்டும். ஆகவே, திண்டுக்கல் சிறுமலையில் விளையக்கூடிய அந்த வாழைப்பழங்களை, அதற்கான விதிமுறைகளைத் தளர்த்தி உரிய முறையிலே நேரடியாகக் கொள்முதல் செய்வதற்கு அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்கிற அந்த மலை வாழைப்பழம் 12 மாதங்களிலும் சீராகக் கிடைப்பதில்லை. குறிப்பாக நவம்பர், டிசம்பர், ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் அந்தப் பழ உற்பத்தி மிகவும் குறைந்திருக்கும். ஆகவே, அந்தக் காலக் கட்டங்களில் அதற்கு மாற்று ஏற்பாடாக குடகுமலைப் பழங்களும், கற்பூரவல்லிப் பழங்களும் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பொதுவாக அந்தச் சிறுமலைப் பழங்களை விவசாயிகள் உற்பத்தி செய்வதை இப்பொழுது காலச் சூழ்நிலை காரணமாக தவிர்த்து வருகிறார்கள். ஆகவேதான் இந்த நிலைமையை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. மேலும் உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல நேரடியாக அந்தச் சிறுமலைப் பழங்களைக் கொள்முதல் செய்ய இயலாததற்குக் காரணம் ஆண்டுக்கு ஒரு விலை நிர்ணயம் செய்யப்பட்டு ஒப்பந்த முறையிலே

கோரப்பட்டது. ஏற்கெனவே விவசாயிகள் ஒருங்கிணைந்து அமைக்கப்பட்ட பட்டிவீரன்பட்டி பழ உற்பத்தியாளர்கள் சங்கம் கடந்த ஆண்டு ஒப்பந்தப்புள்ளி ஏலத்திலே கலந்து கொண்டு அதிலே அவர்கள் சப்ளை செய்து வந்தார்கள். ஆனால் நடைபெற்ற இந்தப் பசலி 14, 17-க்குக் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் மேற்படி பட்டிவீரன்பட்டி பழ உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் கலந்துகொள்ள இயலவில்லை. ஆகவே தனியார்கள் மூன்று பேர்மூலம், சிறுமலைப் பழத்திற்கு கிலோ ஒன்றிற்கு 18 ரூபாய் 70 பைசாவிற்கு வி. சிவக்குமார் என்பவரும், குடகுமலை பழத்திற்கு கிலோ ஒன்றிற்கு 13 ரூபாய் 4 பைசாவிற்கு எஸ். முத்துச்சாமி என்பவரும், கற்பூரவல்லிப் பழத்திற்கு கிலோ ஒன்றிற்கு 6 ரூபாய் 90 பைசாவிற்கு சிவக்குமார் என்பவரும் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகளின்மூலமாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே உறுப்பினர் கோருகிற அளவுக்கு தற்போது உள்ள இந்த நடைமுறையில் மாற்றங்கள் செய்ய வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால் உண்மையான, எதார்த்தமான நிலைமை என்பது அங்கு வேறாக இருக்கிறது. அறநிலையத் துறை சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கக்கூடிய பதில்களை இன்னமும் எதார்த்தத்தோடு, உண்மையோடு ஒப்பிடுவதற்கு நீங்கள் முன்வர வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். ஏனென்றால் இப்போது சிறுமலையில் உற்பத்தியாகக்கூடிய அனைத்துப் பழங்களையும் ரிலையன்ஸ் கம்பெனி கொள்முதல் செய்கிறது. ஆகவே, பன்னாட்டுக் கம்பெனிகளான வால்-மார்ட், ரிலையன்ஸ் போன்ற கம்பெனிகள் மலைப் பழங்களைக் கொள்முதல் செய்ய இப்பொழுது உள்ளே வந்துவிட்டார்கள். நம்முடைய பழனி திருக்கோயிலுக்குத் தேவையான பழங்களை இப்பொழுதாவது நீங்கள் விவசாயிகளிடம் கொள்முதல் செய்ய ஏதாவது ஒரு ஏற்பாடு செய்யவில்லை என்று சொன்னால், எதிர்காலத்தில் எந்தப் பழமும் அறநிலையத் துறைக்குக் கிடைக்காது. ஆகவே, இந்தக் கால அவகாசத்தைப் பயன்படுத்தி நமது துறை சார்பாக அரசு மீண்டும் ஒரு முறை பரிசிலனை செய்து நல்ல நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும், மீண்டும் அதே வினாவை எழுப்புகிறார்கள். நானும் அதே பதிலைச் சொல்ல வேண்டியதிருக்கிறது. ஆண்டு முழுவதும் சீரான பழ சப்ளை கிடைப்பதில்லை. உற்பத்தியும் இருப்பதில்லை. ஆகவே, அவ்வப்போது விலைகளை மாற்றி வாங்குவதற்கும் அந்தச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப செய்வதற்கும் அது ஒரு தனியார் நிறுவனம் அல்ல. ஆகவேதான் ஆண்டுக்கு ஒரு முறை டெண்டர்கள் ஒளிவுமறைவற்ற முறையில் கோரப்படுகிறது. அந்த அடிப்படையில்தான் இப்பொழுதும் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களோடு நேரிலே கலந்து பேசிகூட, அதற்கென்று அறங்காவலர் குழுவும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்களிடத்திலும் சட்டமன்ற உறுப்பினரைப் பேச வைத்து தேவையான வழிமுறைகளைக் கண்டறிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

**திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலிலுள்ள மூலவருக்குத் திருக்கோயிலில் தயாரிக்கும் பஞ்சாமிர்தத்தைக் கொண்டே அபிஷேகம் செய்யப்படுகிறது. அந்த அபிஷேகம் செய்யப்பட்ட பொருட்கள் தேவஸ்தானத்தால் விற்பனை செய்யப்படுகின்றன. அதேபோன்று மலையின் மேலே தனியாரும் அபிஷேகப் பொருட்களை விற்பனை செய்து வருகின்றார்கள். ஆகவே, அந்தத் தனியார்களைத் தவிர்த்தால் நிருவாகத்திற்கு அதிக இலாபமும் கிடைக்கும். மக்களுக்கு குழப்பமான சூழ்நிலையும் உருவாகாது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோன்று, மாண்புமிகு முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள் தலைமையிலே அமைந்த அரசின் முதல் நிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பழனி, கொடைக்கானல் ரோப் கார் திட்டத்தை அறிவித்தார்கள். அது எந்த நிலையில் உள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, மலையின் மேலே தனியார் பிரசாதங்கள் விற்பதற்கு அனுமதிக்கப்பட்டு இருப்பது இப்போது புதிதான ஒன்றல்ல. கடந்த காலங்களில் நடைமுறையில் இருந்த ஒன்றுதான். அதேநேரத்தில் துறையின் சார்பிலே, திருக்கோயிலின் சார்பிலே அங்கே உற்பத்திச் செய்யப்படுகின்ற பஞ்சாமிர்த்தத்திற்குப் புதிய, நவீன முறையிலே இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டு இருப்பதோடு புதிதாகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அப்படி முடியும் தருவாயில், அங்கே உற்பத்தி தொடங்குகின்ற நேரத்தில், தேவைக்கேற்ப பஞ்சாமிர்தத்தை அங்கே உற்பத்தி செய்ய முடியுமானால் எதிர்காலத்தில் தனியாரை அங்கிருந்து அகற்றுவது பற்றி யோசிக்கலாம். அதுவரை இம்முறை தொடரும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரோப் கார் திட்டத்தைப் பற்றிக் கேட்டிருக்கின்றார்கள். அதைச் சுற்றுலாத் துறையோடு இணைந்து செய்வதா என்பதைப் பற்றி ஆய்வறிக்கைகள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, உறுப்பினர் அவர்கள் பிறகு அந்த விவரங்களைத் தெரிந்துகொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன் கேட்கிறார் என்றால், அவர் தொகுதியில் உள்ள திருக்கோயில். அவர் கோயில் விவரத்தைக் கேட்கிறார். நீங்கள் என்ன, பலாப்பழத்தைப் பற்றிக் கேட்கப் போகிறீர்களா?

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கனிகளில் ஒன்றாக இருக்கின்ற, இந்தியாவிலேயே, உலகத்திலேயே மிகத் தலைசிறந்த இனிப்புக்குப் பெயர்போன எங்கள் பண்ருட்டி பலாவையும், அதேபோல் முக்கனிகளில் இன்னொன்றாக இருக்கின்ற மாங்கனியையும் சேர்த்து மா, பலா, வாழையையும் சேர்த்து, நம்முடைய அரசு பஞ்சாமிர்தம் தயாரிப்பதற்கு ஈடுபடுமா? எதிர்வரும் காலங்களில் நம்முடைய அறநிலையத் துறை அதற்காகச் சிந்தித்து இந்த முக்கனிகளையும் கொண்டு பஞ்சாமிர்தம் தயார் செய்வதற்கு. இனிப்பான சுவை மிக்க பஞ்சாமிர்தத்தைப் பக்தர்களுக்கு





வழங்குவதற்கு துறை நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, பலாப்பழமும் ஆண்டு முழுவதும் கிடைப்பதில்லை. ஆகவே, இப்போது வாக்குறுதியாகக் கொடுத்துவிட்டு, பிறகு பழம் கிடைக்காத நேரத்தில் அதை எங்கே பெறுவது என்பது சிக்கலாக ஆகிவிடும். ஆகவே, இப்போது நடைமுறையில் உள்ள அந்த முறைகளே பின்பற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**27—**

**அங்கன்வாடி மையம்**

***6750—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெற்கு வள்ளியூர், தெற்குத் தெருவில் அங்கன்வாடி மையம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தெற்கு வள்ளியூர், தெற்குத் தெருவில் வாடகைக் கட்டடத்தில் செயல்படும் குழந்தைகள் மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக இடம் தேர்வு செய்யப்பட்டு கட்டடம் கட்டுவதற்கான வரைபடம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது குறித்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரிடம் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டு, D.R.D.A. இந்த நிதியாண்டிற்குள் தொகையை

ஒதுக்கீடு செய்வதாக உறுதி அளித்துள்ளார். மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினருக்கு உடனே சொந்தக் கட்டடம் தேவை என்றால் உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்கான தொகையை வழங்கலாம் எனத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராதாபுரம் வட்டம், தெற்கு வள்ளியூர், தெற்குத் தெரு என்பது காமராஜர் நகர் என்று அழைக்கப்படுகின்ற அந்த இடத்திற்குப் புதிதாக அங்கன்வாடி மையம் அமைக்கப்படுமா என்பதுதான் கேள்வியே தவிர, கட்டடம் கட்டப்படுமா என்பது கேள்வியேயல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அங்கன்வாடி, ஊருக்குத்தான் அமைப்பார்களே தவிர, தெருவிற்குத் தெரு அமைக்கமாட்டார்கள்.

**திரு. மு. அப்பாவு:** அது தெருவல்ல. தெற்குத் தெரு என்று அழைக்கப்படுகிறது. பெரிய ஊர். தெற்குத் தெரு என்றால் காமராஜர் நகர் என்று பெயர். ஆகவே, அந்த இடத்திற்குப் புதிதாக அங்கன்வாடி மையம் அமைத்துத் தரப்படுமா என்று கேட்பதோடு, தமிழகத்தில் புதிதாக ஓர் அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டும் என்றால், அங்கே குழந்தைகள் எத்தனை பேர் இருக்க வேண்டும், மக்கள் தொகை எவ்வளவு இருக்க வேண்டும்; எந்த அடிப்படையில் அது ஒதுக்கப்படுகிறது, அவ்வாறு தமிழ்நாட்டில் இதுவரை எத்தனை மையங்கள் இருக்கின்றன, இன்னும் எத்தனை தகுதியான மையங்கள் உருவாக்குவதற்குத் தகுதியான இடங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது முதல்வர் அவர்கள் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தவுடன் முதன் முறையாக இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக இன்றைக்கு தமிழகத்தில் மட்டும் 45,729 அங்கன்வாடி குழந்தைகள் மையங்கள் உள்ளன. கடந்த 1½ வருட காலத்தில் மட்டும் 7,200 புதிய குழந்தைகள் மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.



கடந்த வாரம்கூட திருநெல்வேலி மாவட்டத்தில் 113 மையங்கள் தொடங்கப்பட்டு உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** கண்டிப்பாக 25 குழந்தைகள் இருந்தால், 3 கிலோ மீட்டருக்குள் பெரிய அங்கன்வாடி குழந்தைகள் மையங்களும், ஒரு மையிலுக்குள் 5 குழந்தைகள் இருந்தால்கூட குழந்தைகள் மையங்கள் தொடங்கப்பட வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதற்கேற்றவாறு தமிழக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 கிலோ மீட்டர் தூரம் 25 குழந்தைகள், 1 கிலோ மீட்டர் தூரம் 5 குழந்தைகள் என்ற விகிதாச்சாரத்தில் இதே தெற்கு வள்ளியூரில் ஒரு மையமும், அதுபோல் இருக்கன்துறை பஞ்சாயத்திலே பெரியகுளம் என்ற இடத்திலும், கோட்டைக் கருங்குளம் பஞ்சாயத்திலே முத்தம்மாள்புரம் என்ற கிராமத்திலும், குமாரபுரம் பஞ்சாயத்திலே உபகாரமாதா குடியிருப்பு, நாளந்துளா, ராஜீவ் காந்தி நகர் ஆகிய இடங்களிலும் புதிய மையங்களை அமைத்துத் தர அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** கண்டிப்பாக அரசு முன்வரும். ஏனென்றால் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி எந்தச் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியாயினும் தேவையிருந்தால், விதிகளுக்கு உட்பட்டு இருந்தால் 3 மாதத்திற்குள் மையங்கள் திறக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. நிச்சயமாக அரசு முன்வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

[2007 அக்டோபர் 22

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், எனது காவேரிப்பட்டினம் தொகுதியில் உள்ள பல கிராமங்களில் அங்கன்வாடி மையம் அமைக்க ஏதுவாக இருந்தும் இதுநாள் வரை அங்கன்வாடி மையத்தை மாவட்ட நிருவாகம் அமைக்காமல் இருந்து வருகிறது. எனவே, எனது தொகுதியில் அங்கன்வாடி மையம் அமைக்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** நான் ஏற்கெனவே இதற்குண்டான பதிலை மிக விரிவாகக் கூறிவிட்டேன். நிச்சயமாக எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் கோரிக்கை வைத்தால் குழந்தைகள் மையம் உடனே தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *28*, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**28—**

## நிலம் கையகப்படுத்துதல்

***19456—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஆதி திராவிட உயர்நிலைப் பள்ளிக்குத் தேவையான நிலத்தை கையகப்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டம், காரைமேடு கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கும், விளையாட்டு மைதானம் அமைப்பதற்கும் மற்றும் பாதை வசதி ஏற்படுத்தித் தருவதற்கும் தேவையான நிலத்தைக் கையகப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2007 அக்டோபர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, காரைமேடு அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளி சமீபத்தில்தான் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது. அங்கே இரண்டு வகுப்பறைகளும், ஒரு அறிவியல் ஆய்வுக்கூடமும் மட்டுமே உள்ளன. பள்ளி வகுப்பறைகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கான நிலம் இல்லாத காரணத்தினால் நிலம் கையகப்படுத்துவதனுடைய அவசியம் கருதி இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது. எப்போது, எவ்வளவு நிலத்தை அரசு கையகப்படுத்த இருக்கிறது, எப்போது பணி முடிவடையும்? அப்படியானால் பள்ளி மாணவ, மாணவிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் பயன்படுகிற விதத்தில் கூடுதலாக ஒரு வகுப்பறை கட்டடமும், ஒரு கழிப்பறைக் கட்டடமும் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பள்ளிக்கு *22–6–2007* அன்று நில எடுப்புச் சட்டம் *1978*–ன்படி விளையாட்டு மைதானத்திற்கு *0.35* எக்டேர் நிலமும் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு *0.09* எக்டேர் நிலமும், பாதை வசதிக்கு *0.04* எக்டேர் நிலமும் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டது. நிலத்தின் உரிமையாளர் வழக்கறிஞர்மூலமாக ஆட்சேபணை தெரிவிப்பதால் மாற்று இடம் எடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விரைவாகச் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் நகரத்திலே ஏறக்குறைய *5000* ஆதி திராவிடர் நலத் துறையைச் சார்ந்த குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு *25* ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்ட வீட்டுமனைகள் தவிர வேறு இடமே இல்லை. ஏறக்குறைய *3000* குடும்பங்கள் இன்றும்

[2007 அக்டோபர் 22

வீட்டுமனை இல்லாமல் 2, 3 குடும்பங்களாக ஒரே வீட்டிற்குள் வாழவேண்டிய அவல நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இது குறித்து சம்பந்தப்பட்ட துறையினுடைய அமைச்சருக்கும், எங்கள் மாவட்ட ஆட்சியருக்கும் — பட்டு வளர்ச்சித் துறையின் சார்பாக 16 ஏக்கர் நிலம் பக்கத்தில் இருக்கிறது. அந்த நிலத்தைக் கையகப்படுத்தி ஆதி திராவிட மக்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று — மனு அளித்துள்ளேன். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், அந்த நிலத்தை இந்தக் காலகட்டத்திலே கையகப்படுத்தி, வீட்டுமனை அற்றவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பே இல்லை. அவர்கள் கேட்பது வேறு; சப்ஜெக்டே வேறு. அமைச்சர், பதில் சொல்கிறீர்களா?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடத்தைக் கையகப்படுத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அரசு நிர்ணயித்த விலைக்கு ஏற்ப அந்த இடம் சரிவரும் என்று சொன்னால், வாய்ப்பு இருக்கும்பட்சத்தில் அந்த நிலத்தைக் கையகப்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் ஜி.டி.ஆர். ஸ்கூல்–உண்டு உறைவிடப் பள்ளிகள், மலைவாசி மக்களுக்காக உருவாக்கப்பட்டவை. அந்தப் பள்ளிகளில் போதுமான விளையாட்டு மைதானங்கள் கிடையாது. குறிப்பாக அரவேறு பகுதியில் உள்ள நடுநிலைப் பள்ளிக்கும், கருக்கியூரில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கும் — இந்த இரண்டு பள்ளிகளுக்கும் — தேவையான விளையாட்டு மைதானங்களுக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கி, இடம் வழங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2007 அக்டோபர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் இட வசதி இருக்கும் என்று சொன்னார் என்றால், அந்த இடத்தைக் கையகப்படுத்தி விளையாட்டு மைதானம் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்.

**திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அச்சரப்பாக்கம் தொகுதியில், அச்சரப்பாக்கத்தில் உள்ள ஆதி திராவிடர் மாணவர்களுடைய விடுதி மிகவும் பழுதடைந்து, இடிந்து விடுகிற சூழ்நிலையில் இருக்கிறது. இதை அதிகாரிகளுடைய கவனத்திற்கு நான் உடனடியாக எடுத்துச் சென்றும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அது இடிந்தால் மிகப் பெரிய விபத்தினை விளைவிக்கும் என்ற காரணத்தால், ஒன்று, அந்த ஆதி திராவிட மாணவர்களுடைய விடுதியை உடனடியாகப் புதுப்பிக்க வேண்டும் அல்லது மாணவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய அளவுக்கு உடனடியாக இடத்தையாவது மாற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டும். இதனை அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை நேரடியாக என் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தால்கூட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். இவர்கள் தற்போதுதான் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்கள். உடனடியாக அந்த விடுதி மராமத்து செய்யப்படும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 அக்டோபர் 22

**29—**

## மீன் உலர் தளம்

***14116—திரு. மு.க. பெரியசாமி:**

*மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, மாணிக்கபங்கு ஊராட்சி, பெருமாள்பேட்டை கிராமத்தில் மீன் உலர் தளம் அமைத்திட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், பூம்புகார் சட்டப் பேரவைத் தொகுதியில் உள்ள பெருமாள்பேட்டை மீனவர் கிராமம் சுனாமியால் பாதிக்கப்பட்டமைக்காக சிநேகா என்ற தொண்டு நிறுவனம், அந்தக் கிராமத்திற்கு இரண்டு மீன் உலர் தளங்களை 3,894 சதுர அடி பரப்பளவில் அமைத்துக் கொடுத்துள்ளது. இம்மீன் உலர் தளம் தற்போது பயன்பாட்டில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 டிசம்பரில் தமிழகமே மிகவும் கதி கலங்கக்கூடிய அளவுக்கு ஆழிப்பேரலை ஏற்பட்டது. அந்த ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிரந்தரக் குடியிருப்புகளை நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சீரிய பல்வேறு திட்டங்களால் தொண்டு நிறுவனங்கள் நிரந்தரக் குடியிருப்பு, குடிநீர், மின் இணைப்பு போன்ற வசதிகளைச் செய்து கொடுத்திருக்கின்றன. அந்தப் பாதிப்பினால் வங்கக் கடலிலும் மீன்வளம் குன்றியிருக்கிறது. அப்படிக் குன்றியிருக்கிற அந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிற மீனவ மக்களுக்கு – தமிழகத்திலேயே அதிகம் பாதித்த மாவட்டம் நாகை மாவட்டம் – இப்போது விசைப் படகுகளுக்கு .1,500 லிட்டர் மண்ணெண்ணெய்யும், சிறு நாரிழைப் படகுகளுக்கு மாதம் 250 லிட்டர் மண்ணெண்ணெய்யும் வழங்கப்படுகிறது. அதை மாதா மாதம்தான் பெற வேண்டும் என்ற



2007 அக்டோபர் 22]

நிலை இருக்கிறது. அதை எப்போது வேண்டுமானாலும் பெறுவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? மேலும், பூம்புகார் மீன்பிடித் துறைமுகம் கட்டுவது தொடர்பாக, கடந்த சட்டமன்றப் பேரவையில், ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன, அது முடிந்தவுடன் பணிகள் முடுக்கிவிடப்படும் என்று சொன்னார்கள். அந்தப் பணியின் முன்னேற்றம் எந்த அளவில் இருக்கிறது எனத் தங்கள் வாயிலாக நமது அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன். மேலும், கடந்த வாரம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூபாய் 110 கோடிக்கு அந்த மீனவர்களுக்கு மிதி வண்டி, உயிர் காப்பு உடை, டார்ச் லைட் மற்றும் ஹாட் பேக் போன்றவற்றை வழங்கியிருக்கிறார்கள். அந்த மிதி வண்டிகளெல்லாம் துருப்பிடித்து அங்கே இருக்கின்றன. அவற்றையெல்லாம் எப்போது வழங்குவார்கள் என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமிப் பேரழிவு கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள் ஏற்பட்டு, கடற்கரையில் வாழ்கின்ற மீனவப் பெருமக்களும் மற்றவர்களும் உயிரையும் உடைமைகளையும் பறிகொடுத்துப் பரிதவித்த நேரத்தில், அன்றைக்கு ஆட்சியிலேயிருந்தவர்கள் சரியாகக் கவனம் செலுத்தாத காரணத்தால், பெரிய கஷ்டத்தை மீனவ மக்கள் அனுபவித்து வந்தது நாடு அறிந்த ஒன்றுதான். அதற்குப் பிறகு, நம்முடைய வரலாற்று முதல்வர், ஐயா கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, மீனவ மக்களுக்குப் பல சலுகைகளை, அவர்களுக்கு மறு வாழ்வினை அளிக்கின்ற வகையிலே வாரி வழங்கிவருவதை இந்த நாடு அறிந்துகொண்டிருக்கிறது. அந்த வகையிலே, குறிப்பாக, சுனாமியால் பாதிக்கப்பட்ட நம்முடைய நாகை மாவட்ட மக்களுக்குப் பல்வேறு சலுகைகளை அரசு வாரி வழங்கி வருகிறது. அதிலும், குறிப்பாக, வீடுகளை இழந்த மீனவ மக்களுக்கு இந்த ஆண்டு மிகச் சிறப்பான முறையிலே தொண்டு நிறுவனங்கள் மூலமாகக் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளைப் பற்றியும், கட்டி முடிக்கப்படாமல் இருக்கின்ற வீடுகளையும் அரசே தன்னுடைய பொறுப்பில் எடுத்து, வீடுகளைக் கட்டித் தந்துகொண்டிருப்பதையும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

அவர்களும் நானும் சென்று கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு தரங்கம்பாடி என்கின்ற மீனவ கிராமத்தில் கட்டப்பட்டிருந்த வீடுகளைத் திறந்து வைத்தோம். அந்த வகையிலே, இன்றைக்குத் தொடர்ந்து வீடுகள் கட்டுகின்ற பணி தமிழ்நாடு கடற்கரை முழுவதும் நடந்துகொண்டிருக்கின்றது. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 110 கோடி ரூபாய் பொருட்கள் நம்முடைய முதல்வர் அவர்களுடைய திருக்கரங்களால் கடந்த வாரத்தில் வழங்கப்பட்டு, வருகின்ற 28 ஆம் தேதியிலேயிருந்து தமிழகம் எங்கும் வழங்கப்படவிருக்கிறது என்பதனை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) அதேபோல, நம்முடைய உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்த பூம்புகார் மீன்பிடித் துறைமுகம் கட்டுவதற்கான அந்தப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. ஆய்வு முடிந்தவுடன், உடனடியாக அந்தப் பணி நடைமுறைக்கு வரும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடித் துறைமுகத்தினுடைய பணியை விரைந்து முடிக்க உறுதிமொழி அளித்திருக்கிற அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**30—**

## கட்டடம்

***35119—திரு. பெ. கண்ணன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமாக அடிமனை இல்லாததால் புதிய கட்டடம் கட்ட வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தாரமங்கலம் தொகுதி, அமரகுந்திப் பகுதியில் இருக்கக்கூடிய E.D. 47 பால் உற்பத்தியாளர் சங்கம் 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பால் சொசைட்டிக்கு இன்னும் கட்டடம் இல்லை. இதுவரை அந்தச் சங்கத்தில் 200 லிட்டர் பால் வந்தும், நான் பல முறை இந்தச் சபையில் இந்தக் கட்டடம் கட்டுவதற்குக் கேட்டும், இன்னும் அதைக் கொடுக்காத நிலை உள்ளது. இந்தப் பால் உற்பத்தியாளர் சங்கத்தில் வருடத்திற்கு 50,000 ரூபாய் இலாபம் வந்தும் இன்னும் கட்டிக் கொடுக்காத நிலை உள்ளது. இந்த நிலையில், நாங்கள் அந்த நிலத்தை வாங்கிக் கொடுத்தால், உடனடியாக இந்தத் துறை அமைச்சர் அவர்கள் கட்டிக்கொடுக்க முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் உள்ள E.D. 47 அமரகுந்தி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் 31-10-1985 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1-11-1985 முதல் பணி தொடங்கப்பட்டு நாளது தேதியில் 946 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. தற்போது இச்சங்கத்தில் 41 உறுப்பினர்கள் பால் ஊற்றி வருகிறார்கள். நாள் ஒன்றுக்கு சராசரியாக 191 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இச்சங்கத்திற்குச் சொந்தமான அடிமனை ஏதும் இல்லை. மேலும் 2005—2006-ன் தணிக்கையின்படி ரூ.34,504.93 பைசா குவிந்த நட்டத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, தாரமங்கலம்

[2007 அக்டோபர் 22

தொகுதி, அமரகுந்தி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு தற்போது வாய்ப்பு இல்லாவிட்டாலும்கூட, அதற்கான நிலத்தினை நமது சட்டமன்ற உறுப்பினர் மூலமாக வாங்கிக் கொடுத்தால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து கட்டினால் அதற்குச் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாக அறிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) காயத்ரி தேவி, (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். எங்கள் பகுதியில் பல இடங்கள் இதேபோல் இருக்கின்றன. அனைத்துக்கும் எங்களுடைய நிதியிலிருந்தே கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், எங்களுக்கு இன்னும் ஒரு கோடி ரூபாய் அதிகமாகக் கொடுத்தால் நாங்களே இப்படிப்பட்ட இடங்களையெல்லாம் தேர்வு செய்து கொடுத்துவிடுகிறோம். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று சொல்லி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் பாலகங்களில் விற்கப்படும் பால், நெய் போன்ற பொருட்களின் விலை திடீர் என்று 70 விழுக்காடு கூடியிருக்கிறது. இந்த விலையைக் குறைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலில் இருந்து தயாரிக்கப்படும் உப பொருட்களான பால்கோவா மற்றும் இதர பொருட்கள் எல்லாம் மற்ற



2007 அக்டோபர் 22]

கம்பெனிகளுடைய விலையைவிடக் குறைவாகத்தான் விற்கப்படுகின்றன. இன்னும் சொல்லப்போனால், மற்ற கம்பெனிகளில் இருக்கக்கூடிய தரத்தைவிட உயர்ந்த தரத்தில் இந்தப் பொருட்கள் இருக்கின்றன. இப்போதுள்ள காலச் சூழ்நிலைக்கேற்ப விலையேற்றம் அதிகமாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல் 70 சதவிகிதம் உயர்த்தப்படவில்லை. மற்ற கம்பெனிகளைவிட குறைவான விலையிலேயே விற்கப்படுகின்றன என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு).

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Agenda–வில் கொடுத்தது பின்னர் எடுக்கப்படும். முதலில் சிறப்பு நேர்வாக...(குறுக்கீடு) என்ன சொல்கிறீர்கள்? என்ன விஷயம்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே விடுதலைப் புலிகளுக்கு இங்கிருந்து சில ஆயுதங்கள் கடத்தப்படுவதாக வந்திருக்கக்கூடிய செய்தியைப் பற்றியும், அதனால் கைது செய்யப்பட்ட நபர் குறித்தும் நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம். அதை இப்போது எடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்புறம் சொல்லுங்கள். உட்காருங்கள். அடுத்தது.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) கோயம்புத்தூர், உக்கடம் பகுதியில் குடிசை மாற்று வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிந்தது - உயிர் இழந்தோர் மற்றும் காயமுற்றோர் குடும்பங்களுக்கு நிதியுதவி

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் குடிசை மாற்று வாரிய வீடுகள் இடிந்து, அதனால் *13 உயிர்கள் பலியானது குறித்து. . .*

### (ஆ) நெல் கொள்முதல் விலையை உயர்த்த வலியுறுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மத்திய அரசு நெல் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயிக்காததால் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வை. சிவபுண்ணியம், திரு. சு. குணசேகரன், திரு. தி. இராமசாமி, திருமதி பி. பத்மாவதி, திரு. எஸ். இராசசேகரன், திரு. கே. உலகநாதன் ஆகியோர் விதி 56—ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். அதேபோன்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. ஞானசேகரன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக திரு. சி. கோவிந்தசாமி, திரு. வே. மாரிமுத்து ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. மு.க. பெரியசாமி ஆகியோரும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாக திரு. கு. செல்வம் அவர்களும் விதி 55—ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்து இருக்கிறார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்துச் சுருக்கமாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். திரு. சி. ஞானசேகரன்.

*முற்பகல் 10—50*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நெல் உற்பத்திச் செய்யக்கூடிய விவசாயிகள் இன்று மிகவும் சிரமத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். குவிண்டாலுக்கு உற்பத்திச் செலவே இன்று நெல்லுக்கு ஆயிரம் ரூபாய்க்குமேல் வருகிறது. ஒரு நாளைக்கு ஒரு ஆளுக்கு 80 ரூபாய் கூலி கொடுத்து அவர்கள் பயிரிட ஆரம்பித்தால் அந்த ஆயிரம் ரூபாய்க்கு மேலேகூடப் போய்க்





கொண்டிருக்கிறது. இப்பொழுது தமிழக அரசு ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்று விற்பனை செய்யக்கூடிய நிலை வந்த பிறகு பார்த்தோம் என்று சொன்னால், நெல் அறுப்பதற்கு ஆளே வர மறுக்கிறார்கள். கூலி 80 ரூபாய் கொடுத்தால் வருகிறோம், நெல்லை எங்களுக்குப் பகுதிக் கூலியாகக் கொடுத்தால் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று இன்று கூலி ஆட்கள் தர்ணா செய்கிற காரணத்தினாலே, கூலி ஆட்களே கிடைக்காமல் நெல் உற்பத்திச் செய்யக்கூடிய விவசாயிகள் பெரும் ஏமாற்றத்திற்கும், பெரிய நஷ்டத்திற்கும் ஆளாகி இருக்கிறார்கள். ** அதேபோல, கரும்பு விவசாயிகளை எடுத்துக்கொண்டாலும்கூட ஒரு டன்னுக்கு 1,500 ரூபாய்க்கு மேலே உற்பத்திச் செலவு ஆகிறது. இப்படி விவசாயிகளுடைய நிலை இருக்கிறபோது தமிழக அரசு இதைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்து, மத்திய அரசு கொடுக்கக்கூடிய support price குறைவாக இருந்தாலும்கூட அதற்கு நீங்கள் பணத்தைக் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கவேண்டும். குவிண்டாலுக்கு ஆயிரம் என்றாவது கொடுத்தால்தான் தமிழக விவசாயிகள் இனி வாழமுடியும். அவர்களுடைய வாழ்வில் ஒளி ஏற்றமுடியும். அவர்கள் நம்பிக்கையோடு தங்களுடைய வாழ்க்கைச் சக்கரத்தை உருட்ட முடியும். ** ஆகவே, நம்முடைய மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள்; இன்று அவை முன்னவராக இருக்கக்கூடியவர்கள் நிதியைத் தாராளமாக இதற்காக ஒதுக்கீடு செய்து, நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சருக்கும், உணவுத் துறை அமைச்சருக்கும் எடுத்துச் சொல்லி, இதை எப்படியாவது மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டுபோய் ஒரு குவிண்டாலுக்குக் குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாய் நெல்லுக்குக் கொடுத்தால்தான் இனி விவசாயிகள் தமிழகத்திலே வாழ முடியும். அப்படி அவர்கள் வாழக்கூடிய சூழலை இந்த அரசு உருவாக்குமா என்று நான் தங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (மணியடிக்கப்பெற்றது) மத்திய அரசு...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய நிலையில் விவசாயம் என்பது தொடர்ந்து அதிக வேலைவாய்ப்புகளைத் தமிழகத்திலே மட்டுமல்ல இந்தியா பூராவும் கொடுக்கக்கூடிய தொழில். கடந்த 10 ஆண்டுகளாக விவசாய உற்பத்தியில் 0.1 சதவீதம்கூட முன்னேற்றம் இல்லை. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 7,000 கோடி ரூபாய்க்கு மேலாகக் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்து விவசாயிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால், அந்த விவசாயிகள் இப்போது பாதுகாக்கப்படுகிறார்களா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது. இன்று தஞ்சை மாவட்டம் நெல் உற்பத்தியைப் பிரதானமாகக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட அந்த மாவட்டத்தில் இன்று வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின்கீழ் வேலைக்குப் போய்விடுகிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போல 80 ரூபாய் இல்லை; நாங்கள் 150 ரூபாய் வரை கூலி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்போதுகூட ஆள் கிடைப்பது கிடையாது. ஆறு முறை மேட்டூர் அணையில் நீர் நிரம்பி இருக்கிறது. ஆனால், ஆழ்துளைக் கிணறுகளை வைத்துத்தான் இப்போதும் அங்கே விவசாயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோல, வேளாண் இடுபொருட்களான உரம், பூச்சிக்கொல்லி போன்ற பொருள்கள் தாராளமாகக் கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட பல்வேறு இன்னல்களுக்கிடையிலே இந்த விவசாயத் தொழிலை மேற்கொண்டுள்ள தமிழகத்தினுடைய உணவுக் களஞ்சியமாக இருந்த தஞ்சை மாவட்டம் இன்று தத்தளித்துக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட இந்த நிலையைப் போக்குவதற்கு குறைந்தபட்சம் குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாயாவது கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால்தான் விவசாயிகள் தங்களுடைய தொழிலிலே ஈடுபடுவார்கள். ஆனால், விவசாயத் தொழிலை விட்டுவிட்டு அவர்கள் வேறு தொழில் தேடி நகரங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை இன்றைக்கு இருக்கிறது. செறிவாக மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிற அந்த மாவட்டத்தில், இன்று பல்வேறு வகைகளில் விவசாயம் பாதிக்கப்பட்டு, அவர்களுடைய வாழ்க்கை கேள்விக்குறியாகி இருக்கிறது. கடந்த கால ஆட்சியிலே எலிக் கறி சாப்பிடுதல், தற்கொலை இப்படிப் பல்வேறு சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்பது தங்களுக்குத் தெரியும். ஆகவே, இப்படிப்பட்ட நிலைகளை நாம் போக்க வேண்டுமானால் ஒரு குவிண்டாலுக்குக் குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாயாவது வழங்குவதற்கு நமது அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து, அதற்கான திட்டங்களை அரசு தீட்ட வேண்டுமென்று கேட்டு, இந்த அரசின் கவனத்தினை ஈர்த்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.





முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் பேசும்போது " என்று சொல்லியிருக்கின்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லினுடைய ஆதார விலையை ஆயிரம் ரூபாய் அளவுக்கு உயர்த்த வேண்டும் எனத் தமிழக அரசு மைய அரசை வலியுறுத்த வேண்டுமென நாங்கள் வலியுறுத்துகிறோம். கடந்த 10 ஆண்டு காலமாக, இந்தியாவில் வேளாண்மைத் துறை என்பது மிகப் பெரிய நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. கடந்த மாதம் இந்திய நாட்டினுடைய நிதி அமைச்சர் அவர்கள் பெங்களூரு நகரத்திலே பேட்டியளிக்கிறபோது, வேளாண் துறை என்பது மிகச் சிக்கலான சூழ்நிலையில் இன்றைக்கு நிற்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழகத்தினுடைய 11–வது ஐந்தாண்டு திட்டக் குழு அறிக்கையும் அதைத்தான் குறிப்பிடுகிறது. தமிழகத்தினுடைய வேளாண் துறை நெருக்கடியிலே இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், விவசாயிகளுக்குத் தேவையான அளவிற்கு கூட்டுறவு வங்கிகளிலே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே கடன் வசதி என்பது கிடைக்கவில்லை. விவசாயிகள் வாங்குகிற இடுபொருட்களினுடைய விலை தாறுமாறாக உயர்ந்திருக்கிறது. ஆனால் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருளுக்கு உரிய விலை கிடைக்காத காரணத்தினாலே, விவசாயிகள் கந்துவட்டிக்காரர்களிடம் கடன் பெற்று, விவசாயம் செய்கிற ஒரு சூழல் இன்றைக்கு உருவாகியிருக்கிறது. எனவே, விவசாயம் என்பது இன்றைக்கு ஒரு இலாபகரமான தொழில் அல்ல என்கிற ஒரு நிலைக்கு விவசாயிகள் வந்திருக்கிறார்கள். எனவேதான் வேளாண் விஞ்ஞானி திரு. சுவாமிநாதன் அவர்களுடைய குழு பரிந்துரைத்த பல்வேறு நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டிய தேவையும், அவசியமும் இன்றைக்கு உருவாகியிருக்கிறது. 4 சதவிகித வட்டியில் விவசாயிகள் கோருகிற, தேவையான அளவிற்குக் கடன் வசதியை, கூட்டுறவு வங்கிகளும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும் வழங்க வேண்டுமெனப் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு இடுபொருட்கள் மானிய விலையில் வழங்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், விவசாயிகள்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையைத் தீர்மானிக்க வேண்டுமென்று திரு. சுவாமிநாதன் குழுவின் அறிக்கை குறிப்பிடுகிறது. ** எனவே, வேளாண் துறையைப் பாதுகாக்க வேண்டுமென்று சொன்னால், விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கு உரிய தொகை வழங்கப்பட வேண்டும்; கட்டுப்படியான விலை கிடைக்கப்பெற வேண்டும்.

இன்றைக்கு மைய அரசு கோதுமையினுடைய ஆதார விலையை ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. எனவே நெல்லுக்கு ஆயிரம் ரூபாய் என்பது குறைவாக இருந்தாலும்—மைய அரசு நெல்லுக்கு ஆதார விலையை குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் என்பதைத் தீர்மானித்தால்தான் விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய நட்டம் குறைவாக இருக்கும். எனவே, மைய அரசு நெல்லுக்கு ஆதார விலையை, குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்பதை நமது தமிழக அரசு உரிய முறையிலே வலியுறுத்த வேண்டும். எங்களுடைய மாவட்டத்திலேயே கீழ்வேலூர் என்கிற ஒரு பகுதிக்கு அருகில் ஏறத்தாழ 272 ஏக்கர் நிலத்தை இந்த ஆண்டு தரிசாகப் போட்டிருக்கிறார்கள். இதுபற்றி விவசாயிகளிடம் நாங்கள் கேட்கிறபோது 'நாங்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்காத காரணத்தினாலே நிலத்தைத் தரிசாகப் போட்டிருக்கிறோம்' என்று சொல்கிறார்கள். இதனால் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய 500–க்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் இன்றைக்கு வேலை இல்லாத சூழ்நிலையில் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலையானது விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை உத்தரவாதப்படுத்துவதற்கும், உத்தரவாதம் அளிக்கும் என்கிற வகையில் மைய அரசு குவிண்டால் நெல்லுக்கு ஆயிரம் ரூபாய் என்பதை ஆதார விலையாகத் தீர்மானிக்க வேண்டும் என நான் சார்ந்திருக்கக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்தி, மாநில அரசு இதை வலியுறுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குவிண்டால் நெல்லுக்கு ஆயிரம் ரூபாய் கொள்முதல் விலை அறிவிக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு குறைந்த செலவில் உற்பத்தியாகும் கோதுமைக்கு, குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் விலை அறிவித்துள்ளது. அதேசமயம், நெல்லுக்கு ஆண்டுக்காண்டு உற்பத்திச் செலவு கூடி வருகிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் நெல் உற்பத்தி செய்வதற்கு சராசரியாக ரூபாய் பத்தாயிரத்திற்கு மேல் செலவாகிறது. மேலும் அதிக தண்ணீர் பராமரிப்பு தேவைப்படும் நெல் சாகுபடியில் உறுதியான விளைச்சலை எதிர்பார்க்க முடியவில்லை. பூச்சித் தாக்குதல் மற்றும் இயற்கைச்சூழல் காரணமாக நிலையான உற்பத்தியையும் எதிர்பார்க்க முடியாத நிலையில் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ஆயிரம் ரூபாய் என மத்திய அரசு விலையை அறிவிக்க நடவடிக்கை வேண்டும். ஏற்கெனவே நெல் சாகுபடி விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாமல், விவசாயிகள் நெல் சாகுபடியில் ஆர்வம் காட்டாத நிலையில் விலை ஏற்றத்தாழ்வினால் நெல் உற்பத்தி பாதிப்படைந்து அரிசிப் பற்றாக்குறை ஏற்படும். அதனால் தென் மாநில மற்றும் தமிழக மக்களின் ஒட்டுமொத்த நலனைக் கணக்கில் எடுத்து, மத்திய அரசு குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் அறிவிக்க வேண்டும். மத்திய அரசால் நியமிக்கப்பட்ட திரு. எம்.எஸ். சுவாமிநாதன் குழுவினுடைய அறிக்கையை அமல்படுத்தி விவசாயிகளுடைய நலனைப் பாதுகாக்க வேண்டும். 11–வது ஐந்தாண்டுத் திட்டக் குழுவில், இந்திய நாடு முழுவதும் விவசாயிகள் மிகப் பெரிய பாதிப்பு அடைந்திருக்கிறார்கள்; 1.92 சதவீத வளர்ச்சி ஏற்பட்டிருப்பது நாட்டினுடைய மக்கள்தொகையில் 70 விழுக்காடு சார்ந்திருக்கிற விவசாயிகளுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாக நாட்டினுடைய பிரதமர் மன்மோகன் சிங் அவர்களே சுட்டிக்காட்டி, விவசாய உற்பத்தி என்பது 4 சதவீதம் குறைந்தபட்சம் உருவாக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதேசமயத்தில் அதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்களா என்று சொன்னால், நடைமுறையில் இல்லை என்பதை நாம் கவலையோடு பார்க்க வேண்டும்.

இன்றைக்குப் பல்வேறு சிரமங்களுக்கும் இயற்கை இடர்ப்பாடுகளுக்கும் இடையிலே விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளின் எல்லாப் பொருட்களுக்கும் விலை கட்டுப்படி இல்லாத ஒரு சூழ்நிலையில், நெல் என்பது இன்னும் மிகக் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே, நெல்லுக்கு, குவிண்டாலுக்கு

ஆயிரம் ரூபாய் விலை என்பது விவசாயிகளுக்கு மட்டுமல்ல; தென் மாநிலத்திலே இருக்கக்கூடிய ஒட்டுமொத்த மக்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினை என்பதைப் பார்க்க வேண்டும். தென் மாநிலங்களில் இருக்கக்கூடிய மக்கள் அரிசியை முக்கிய உணவாக ஏற்றிருக்கிற நேரத்தில், நெல்லுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லையென்று சொன்னால், அரிசி உற்பத்தி என்பது மிகவும் பாதிப்படைந்து, மக்களுடைய உணவுத் தேவைக்கு மிகப் பெரிய அபாயம் ஏற்படக்கூடிய ஒரு சூழல் இருக்கிறது. எனவே, மத்திய அரசு உடனடியாகக் குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் விலை என்று அறிவிக்கிற நடவடிக்கையை எடுக்க வேண்டும். இன்னும் கூடுதலாகச் சொல்லவேண்டுமானால், மத்திய அரசு கையிலே வைத்திருக்கிற நெல்லுக்கு விலை நிர்ணயிக்கிற குழுவிலே தமிழக விவசாயிகளுடைய பிரதிநிதிகளும், தமிழக அரசினுடைய பிரதிநிதிகளும் இடம் பெற வேண்டும். அவர்களுடைய ஆலோசனையின் அடிப்படையில் ஆண்டுக்காண்டு உற்பத்திச் செலவை கணக்கிட்டு, நெல்லுக்கு விலையை அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, நமது தமிழக முதல்வர் அவர்கள் உறுதியாக அவசரமாக, மத்திய அரசை வலியுறுத்தி இந்த ஆண்டே ஆயிரம் ரூபாயைக் குவிண்டாலுக்கு வாங்கித் தர வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக விவசாயிகள் வறட்சியிலும், வெள்ளத்திலும் சிக்கிக்கொள்ளும் பேரபாயம் ஒரு பக்கம் இருந்தாலும், இன்னொரு பக்கம் அதைப் பயிர் செய்து அறுவடை செய்யும்போது ஆட்கள் கிடைக்காமல் திணறுகின்ற காட்சியையும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த வேளையிலே கடந்த சில தினங்களுக்கு முன்பு, மத்திய வேளாண்மைத் துறை அமைச்சகம் கோதுமைக்கு, குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் விலையை நிர்ணயித்திருக்கிறது. ஆனால், நெல்லுக்கோ விலை எதையும் முடிவு செய்யாமல், அப்படியே கிடப்பில் விட்டிருக்கிறது. தமிழக ஏழையெளிய விவசாயிகளுக்கு இப்படியொரு நம்பகமற்றத்தன்மையை இந்தச் செய்தி ஏற்படுத்தியிருக்கிறது. தமிழக விவசாயிகள் வயிற்றில் பாலை வார்த்த நம்முடைய முத்தமிழறிஞர், கலைஞர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், கடன் சுமையிலிருந்த நம்முடைய விவசாயிகளைக் காப்பாற்றி, ஒளிவிளக்கை ஏற்றி வைத்திருக்கிறார்கள்.



முற்பகல் 11–05

அதேபோன்று, மத்திய அரசை வலியுறுத்தி நம்முடைய சட்டப் பேரவையிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும். ஒரு குவிண்டாலுக்குக் குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாயை நிர்ணயிக்கும்விதமாக, நாம் ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசை வலியுறுத்தினால், இந்தத் தமிழக அரசை நம்பியிருக்கின்ற ஏழையெளிய விவசாயிகளுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படும் என்று கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இது சிறப்புக் கவன ஈர்ப்பு. (குறுக்கீடு)

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெல் கொள்முதல் விலையை நிர்ணயிப்பதற்கு இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். இதற்குப் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சராக இருக்கின்ற நான்கூட ஒரு விவசாயிதான்; நான்கூட நெல் உற்பத்தி செய்பவன்தான். எனவே, இந்த உணர்வு என்பது தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுக்கு நிரம்ப இருக்கின்ற காரணத்தினால்தான், ஏற்கெனவே சொல்லியதைப்போல, விவசாயப் பெருங்குடி மக்களுடைய சுமைகளைத் தீர்க்க வேண்டும்; அவர்கள் பாதுகாப்பாக..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து அவர்கள் பேசும்போது, ** என்று சொன்னார்கள். அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** விவசாயிகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், இங்கே உறுப்பினர் திரு. கு. செல்வம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 7 ஆயிரம் கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கிறது தலைவர் கலைஞருடைய அரசு.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதோடுமட்டுமல்ல; இங்கே நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், சென்ற முறை இருந்த அரசாங்கத்திலே, எலிக் கறி சாப்பிட்ட நிலை இருந்ததையெல்லாம் சொன்னார்கள். அதையெல்லாம் உணர்ந்த காரணத்தினால்தான், நெல் உற்பத்தி செய்யப்படுகின்ற காவிரி போன்ற டெல்டா பகுதிகளிலே உள்ள மக்கள் பட்டினியாக இருந்துவிடக்கூடாது என்கிற ஒட்டுமொத்த உணர்வு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சருக்கு இருந்த காரணத்தினால்தான், தமிழ்நாடு முழுவதும், இன்றைக்கு ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்கிற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அதிலேகூட, காவிரி டெல்டா பகுதிகள் என்று சொல்லப்படுகிற நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சி போன்ற பகுதிகளுடைய off-take, அரிசியினுடைய நுகர்வு என்பது 95 சதவிகிதத்திற்கு மேல் இருந்து கொண்டிருக்கிறது. நான்கூட ஆய்வுக்குப் போகிறபோது, இது நெல் விளைகிற பகுதி ஆயிற்றே! இந்தப் பகுதியிலே 95 சதவிகிதத்திற்கு மேல் நுகர்வு இருக்கிறதே என்று கேட்கிறபோது, அங்கேயிருக்கிற விவசாயிகள் எல்லாம், நெல்லை நேரடிக் கொள்முதல் நிலையங்களிலே விற்றுவிட்டு, நேரடியாக நல்ல அரிசியைப் போடுகிறார்கள் என்கிற காரணத்தினால், நுகர்வோர் அங்குதான் சென்று அரிசியை வாங்குகிறார்கள். ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்பதால் இங்கு வாங்குகிறார்கள் என்று சொன்னார்கள். நுகர்வு என்பதுகூட, அரிசி வாங்குவது என்பதுகூட, காவிரி டெல்டா பகுதிகளிலே 95 சதவிகிதத்திற்கு மேல் இருக்கிறது. எனவே, அந்தப் பகுதிகளில் இருப்பவர்கள் எல்லாம், தமிழ்நாட்டில் இருப்பவர்கள் எல்லாம், எலிக் கறி சாப்பிட்டு விடக் கூடாது என்பதிலே உறுதியாக இருக்கிற இந்த அரசாங்கம், எளியோர்களுக்கு வயிறார உணவு வழங்குவதற்கு பொறுப்பேற்றிருக்கிறது.

அதே நேரத்திலே, இங்கே இந்த விலையைப்பற்றிச் சொன்னார்கள்; உங்களுக்கே தெரியும். ஏற்கெனவே தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்பதற்கு முன்னால், ஊக்கத் தொகைகூட இல்லாமல் மிகக் குறைந்த விலையில்தான் இருந்தது. முதன்முதலாக பொறுப்பேற்றவுடனே, சென்ற 2006–2007–லே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து, மத்திய அரசாங்கத்திடம் பேசி, 40 ரூபாய் ஊக்கத் தொகையை விவசாயிகளுக்காக வாங்கித் தந்தார்கள்.



அதன்மூலமாக, சென்ற ஆண்டு, 650 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டு, விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்டது. சென்ற ஆண்டில் பார்க்கும்போது, 16.08 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு நாங்கள் கொள்முதல் செய்தோம். நான் சென்ற மாதம்கூடச் சென்று, அவர்களிடத்திலே ஆய்வு செய்து, ஆங்காங்கே கொள்முதல் நிலையங்களிலே இந்த ஆண்டிற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம்.

அதேநேரத்திலே, இந்த ஆண்டு, மேற்கொண்டு ஊக்கத் தொகை தரவேண்டும் என்று முடிவு செய்து, மத்திய அரசைப் பொறுத்தளவிற்கு, ரூ.675 என்று விலையை நிர்ணயம் செய்தார்கள். இது போதாது என்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நேரடியாகக் கடிதம் எழுதினார்கள். அதன்பின்பு என்னை நேரடியாகச் சென்று மத்திய அமைச்சரை அமைச்சரைச் சந்திக்கச் சொன்னார்கள். நான் மத்திய அமைச்சரை 9–10–2007 அன்று நேரடியாகச் சந்தித்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25–9–2007 அன்று ஊக்கத் தொகை தேவை என்று நேரடியாகக் கடிதம் எழுதினார்கள்.

முற்பகல் 11–10

என்னை நேரடியாக 9–10–2007 அன்று அனுப்பினார்கள். நான் நேரடியாக மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. சரத் பவார் அவர்களைச் சந்தித்துப் பேசி, அன்று மாலையே 50 ரூபாய் ஊக்கத் தொகை இந்த ஆண்டுக்கு அறிவித்தார்கள். அதன்மூலமாக இன்றைக்கு விவசாயிகளுக்குக் கிட்டத்தட்ட 725 ரூபாய் விலை கிடைக்கிறது. ஆனால், இது போதுமா என்று கேட்டால், விவசாயிகளுடைய உணர்வையெல்லாம் புரிந்துகொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால்—1–10–2007–லேதான் கோதுமைக்கு விலையை 1,000 ரூபாய் என்று நிர்ணயம் செய்தார்கள்; அதை அறிந்த முதலமைச்சர் அவர்களால்—உடனடியாக, அவசரமாக அரசின் சார்பாக கோதுமைக்கு எப்படி 1,000 ரூபாய் கொடுக்கிறோமோ அதேபோல தமிழக விவசாயிகளுக்கும் 1,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று 17–10–2007–லே மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுவிட்டது. இப்பொழுது மத்திய அரசாங்கத்திடம் நாங்களும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். விவசாயிகளுடைய உணர்வைப் புரிந்துகொண்டு தலைவர் கலைஞர் அவர்களுடைய உந்துசக்தியாக இருக்கிற இந்தத் துறை நேரடியாக மத்திய அரசாங்கத்தைத் தொடர்பு

[திரு. எ.வ. வேலு] [2007 அக்டோபர் 22

கொண்டு கேட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, தமிழக விவசாயிகள் விரும்புகிற அளவு எங்களுடைய முயற்சி தொடர்ந்து நடைபெறும். அதைப் பெற்றுத் தருவதற்கு வேண்டிய முயற்சியை இந்த அரசாங்கம் எடுக்கும் என்று கூறி, இந்த அளவிலே என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**திரு. கோவை தங்கம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**(அ) கோயம்புத்தூர், உக்கடம் பகுதியில் குடிசை மாற்று வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிந்தது - உயிர் இழந்தோர் மற்றும் காயமுற்றோர் குடும்பங்களுக்கு நிதியுதவி**—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுங்கள் சார். கோவை, உக்கடம் பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய அடுக்குமாடிக் குடியிருப்பு இடிந்து விழுந்ததில் 13 பேர் இறந்தது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. சுதர்சனம், திரு. சி. ஞானசேகரன், திரு. கோவை தங்கம், திரு. விடியல் எஸ். சேகர், திரு. சி. கோவிந்தசாமி, செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. சு. குணசேகரன், திரு. எஸ். இராசசேகரன், திரு. கு. செல்வம் ஆகியோர் பேரவை விதி 56—ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் விதி 55—ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 19 ஆம் தேதியன்று, கோவையிலே மிகப்பெரும் துயரமான சம்பவம் நடைபெற்றிருக்கிறது. 13 பேர்கள் இறந்திருக்கின்றார்கள். 20 பேர்கள் காயமடைந்திருக்கின்றார்கள். இந்தச் சம்பவத்திற்கு 6 மாதத்திற்கு முன்பாகவே மாண்புமிகு வீட்டு வசதித் துறையினுடைய அமைச்சர் திரு. சுப. தங்கவேலன் அவர்களும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிசாமி அவர்களும், அங்கே வந்து "அந்த வீடுகள் மிகவும் ஆபத்தாக இருக்கின்றன. எனவே அந்த வீடுகளைக் காலி செய்ய வேண்டும்" என்று மிகவும் வற்புறுத்தி, நோட்டீஸ் கொடுத்திருந்தார்கள். ஆனாலும், பல முறை அரசு அதிகாரிகள் வற்புறுத்தியும்கூட அங்கு வீடுகளைக்



2007 அக்டோபர் 22] [திரு. கோவை தங்கம்]

காலி செய்வதற்குக் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. ஆகவே, இந்தத் துயரச் சம்பவம் நடந்துவிட்டது. சம்பவம் நடந்த அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்களின் உத்தரவின்பேரில், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், ஊரகத் தொழில் துறை அமைச்சர் அண்ணன் திரு. பொங்கலூர் பழனிசாமி அவர்களும் அந்த இடத்திற்கு வந்து, மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறி, அந்த இடத்திலிருந்து அவர்களை அப்புறப்படுத்துவதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்கும் மிகுந்த நடவடிக்கை எடுத்தார்கள்.

அதேபோல, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாநகராட்சியினுடைய கமிஷனர் அவர்களும், மாநகர காவல் துறை அதிகாரி அவர்களும் சம்பவம் நடப்பதற்கு முன்பாகவே, 4 மணியளவிலே அங்கே இருந்துகொண்டு ஒலிப்பெருக்கி வைத்து "இந்த வீடுகள் அபாயத்தில் இருக்கின்றன; வீடுகள் விழப் போகின்றன; குடியிருக்கிற மக்களெல்லாம் வெளியே வாருங்கள், வாருங்கள்" என்று சொல்லி ஆட்டோவிலே காவல் துறையினரும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாநகராட்சி கமிஷனர் அவர்களும் மிகப்பெரும் முயற்சியினைத் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் சொல்லப்போனால், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், தி.மு.க—வினுடைய மூத்த தலைவர் திரு. மு. ராமநாதன் அவர்களும், மண்டலத் தலைவர் திரு. பாரி அவர்களும் 4—00 மணியிலேயிருந்து அங்கே இருந்துகொண்டு மக்களைக் கீழே வரவேண்டுமென்று வற்புறுத்தியபோது, மக்கள் அந்த வீட்டுக்கு உள்ளே இருக்கின்ற பொருட்களைக் கீழே கொண்டு வரவேண்டும் என்பதற்காகவும், அந்தப் பொருட்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவும் காலதாமதம் செய்துவிட்டார்கள். அதன் விளைவு, மிகப்பெரிய துயரச் சம்பவம் ஏற்பட்டுவிட்டது. அரசு மிகுந்த பெருமுயற்சி எடுத்து அன்று நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால், உயிர்ச்சேதங்கள் இன்னும் அதிகமாகி இருக்கும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்கள், உடனடியாக இறந்தவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டதற்காக கோவை மக்களின் சார்பாகவும், காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகவும் என்னுடைய பாராட்டுதலையும், நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–15*

அதே சமயத்தில், காயமடைந்தவர்களுக்கு 25,000 ரூபாய் வழங்கியிருக்கின்றார்கள். அதுவும் உரிய தொகை என்பதையும்

தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், அங்கே இருக்கின்ற ஏழையெளிய கூலித் தொழிலாள மக்கள், வீடுகளை இழந்து இருக்கிறார்கள். மாற்று வீடு வேண்டுமென்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்கள் 5,000 ரூபாய் தந்திருக்கின்றார்கள். அந்த 5,000 ரூபாயைக்கொண்டு மாநகராட்சியிலே வீடு பிடித்துக் குடி போவது மிகவும் கஷ்டம். ஆகவே, அந்த 5,000 ரூபாயை உயர்த்தி, கூடுதலாக உதவித் தொகை வழங்கினால்தான் அங்கே வாடகை கொடுத்துக் குடியிருப்பதற்கு உதவியாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்கள், வீடு மாற்றி, அவர்கள் வாடகை கொடுத்துக் குடியிருப்பதற்கு அந்த 5,000 ரூபாய் என்பதை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல என்னுடைய வால்பாறை தொகுதியில் கடந்த 2–10–2007 அன்று வசந்தாமணி மற்றும் அவருடைய குழந்தை, இரண்டு பேரும் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டு, இறந்துவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், உக்கடம் சம்பவம் குறித்து மட்டும்தான் இங்கே பேச வேண்டும். அது தவிர, மற்ற சப்ஜெக்டுக்குப் போகாதீர்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்கள் பெரும் உதவி செய்திருக்கின்றார்கள். இந்தச் சம்பவம் நடந்த அன்று காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நாங்கள் அந்த ஏழை மக்களுக்கு உடனடியாக உதவி செய்வதற்கு முன்வந்து மாநகராட்சிக் கமிஷனரிடம் 30,000 ரூபாய் கொடுத்து உதவினோம். மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளரும், ஊரகத் தொழில் துறை அமைச்சருமான அண்ணன் திரு. பொங்கலூர் பழனிசாமி அவர்கள் இரண்டு இலட்ச ரூபாயைக் கொடுத்து உதவினார்கள். ஆனால், மாநகரில் நடந்த சம்பவத்திற்கு அண்ணா தி.மு.க.வினுடைய எம்.எல்.ஏ.க்களோ, அண்ணா தி.மு.க.வோ யாரும் உதவி செய்ய முன்வரவில்லை. ஆனால், உள்ளாட்சித் துறையின் செயலாளர் திரு. தீனபந்து அவர்களும், வீட்டு வசதித் துறை அதிகாரிகளும், குடிசை மாற்று வாரிய அதிகாரிகள் திரு. செல்லமுத்து அவர்களும், திரு. இராமையா அவர்களும், எல்லோரும் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் ஐயா அவர்கள் உத்தரவின்பேரில் அங்கே வந்து மிகப் பெரிய முயற்சி எடுத்து உதவி புரிந்தார்கள். அதனால் மக்கள் இப்போது பதட்டம் இல்லாமல் அமைதியாக இருக்கின்றார்கள். அரசு எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பெரும் நன்றியையும்



பாராட்டுதலையும் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை உக்கடம் பகுதியில் குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான அடுக்குமாடி வீடு இடிந்து தரைமட்டமாகி அதிலே இருந்தவர்களும், வெளியே இருந்து பொருள்களை எடுக்க உதவி செய்யச் சென்றவர்களுமாக 13 பேர் கோரமான முறையில் அந்த விபத்திலே மரணம் அடைந்திருக்கிறார்கள். இந்தச் செய்தியை அறிந்தவுடன் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு அமைச்சர் பெருமக்களையும், அரசு உயர் அதிகாரிகளையும் அங்கே அனுப்பி வைத்து உரிய நடவடிக்கை எடுத்திருப்பதோடு, உதவித் தொகையாக, இறந்தவர்களுக்கு இரண்டு இலட்ச ரூபாயும், காயம் அடைந்தவர்களுக்கு 25,000 ரூபாயும், வீடுகளைக் காலி செய்து வெளியே செல்லக்கூடியவர்களுக்கு 5,000 ரூபாயும் உதவித் தொகைகளாக அறிவித்து, வழங்கியிருக்கிறார்கள். வரவேற்கத்தக்க ஒரு நல்ல உதவி என்ற முறையில் இதைக் குறிப்பிடுவதோடு இந்த உதவித் தொகைகளைச் சற்றுக் கூடுதலாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். அவர்கள் முழுக்க முழுக்க மிகச் சாதாரண ஏழைக் குடும்பங்களாக இருக்கின்ற காரணத்தினாலே, அதைச் சற்று உயர்த்திக் கொடுப்பதோடு, படுகாயம் அடைந்தவர்கள் அரசாங்க மருத்துவமனையிலே ஒரு பகுதியினரும் தனியார் மருத்துவமனையிலே சிலரும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களுடைய சிகிச்சைக்கான மருத்துவ உதவிகளைச் செய்து கொடுப்பது அவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்ற வகையில் அரசு அதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு, கோவை நகரத்தில் உக்கடம் பகுதி, காமராஜபுரம், சித்தாபுதூர், செம்பட்டி காலனி போன்ற பகுதிகளில் நம்முடைய குடிசை மாற்று வாரியம் மற்றும் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கட்டப்பட்ட வீடுகளில் சற்றேறக்குறைய 680 குடும்பங்கள் குடியிருந்து வருகின்றனர். கடந்த 20 ஆம் தேதி காலை, விபத்து நடந்த மறுநாள், நானும் அந்தப் பகுதிகளுக்கெல்லாம் சென்று பார்த்தேன். அடிபட்டவர்களையும், இறந்தவர்களையெல்லாம் பார்த்துவிட்டு அங்கிருந்தவர்களுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வந்தோம். ஆகவே, காமராஜபுரம், சித்தாபுதூர், செம்பட்டி காலனி போன்ற பகுதிகளில் இருக்கின்ற வீடுகளும் இடிந்து விழுகின்ற நிலையில் இதே

ஆபத்தான நிலையிலேதான் இன்றைக்கும் இருக்கின்றன. தமிழகம் முழுவதும் 30, 35 ஆண்டுகளுக்கு முன்பாக வீட்டு வசதி வாரியத்தின்மூலமாகவும், குடிசை மாற்று வாரியத்தின்மூலமாகவும் கட்டப்பட்டிருக்கின்ற வீடுகள் பல இடங்களிலே மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்திருக்கின்றன. போதுமான பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, இந்தக் கோவை சம்பவத்தை ஓர் எச்சரிக்கை மணியாக எடுத்துக்கொண்டு, மாநிலம் முழுவதும் இருக்கிற இதுபோன்ற பழுதடைந்து, வலுவிழந்து, பலவீனமாக இருக்கின்ற கட்டடங்களை, கட்டட வல்லுநர் குழு ஒன்றை அமைத்து, தமிழக அரசின் சார்பாக ஆய்வு செய்து, முன்னெச்சரிக்கையாக, விபத்துகள் நடப்பதற்கு முன்னாலேயே, அவற்றை அகற்றுவதற்குரிய ஒரு நல்ல முடிவை மேற்கொள்வதற்கு, 30, 35 ஆண்டுகளுக்கு மேலான வீடுகளை ஆய்வு செய்வதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–20*

கோவை, உக்கடம் பகுதியிலே, 24 வீடுகளைக் கொண்ட ஒரு block முழுவதும் தரைமட்டமாகியிருக்கிறது. அதையொட்டியுள்ள பகுதிகளையும் காலி செய்து வருகிறார்கள். அந்தப் பகுதி மக்களிடத்திலே விசாரிக்கிறபோது, "ஏற்கெனவே அரசின் சார்பாக, வாரியத்தின்மூலமாக, அந்த இடம் வலுவிழந்துவிட்டது; எந்த நேரத்திலும் விபத்து நேரலாம்; ஆகவே, நீங்கள் வெளியே செல்ல வேண்டும்" என்று அறிவுறுத்தியபோது, "ஏன் அங்கிருந்து பொதுமக்கள் வெளியேறவில்லை" என்று கேட்கிறபோது, "எங்களுக்கு வேறு எந்தவிதமான மாற்று ஏற்பாடுகளும் இல்லை; அதோடு, அந்த இடத்தைக் காலிசெய்துவிட்டு நாங்கள் வெளியே சென்றால், புதிதாகக் கட்டப்படுகிற வீடுகளிலே, எங்களுக்கு மீண்டும் இடம் கிடைப்பதற்கான எந்த உத்தரவாதமும் வழங்கப்படாத ஒரு சூழ்நிலையில், நாங்கள் எதை நம்பி வெளியே செல்வது என்ற நிலையிலேதான், அங்கேயே தொடரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது" என்று அந்த மக்கள் தெரிவித்தார்கள். இன்றைக்கு விபத்து நடந்தவுடனே இந்த வேலைகள் வேகமாக நடைபெறுகின்றன. பொதுமக்களும் காலி செய்கிறார்கள். ஆகவே, அங்கே குடியிருப்பவர்களுடைய பட்டியலைத் தயாரித்து, புதிதாகக் கட்டுகிற வீடுகளில், அவர்களை மீண்டும் குடியமர்த்துகின்ற வாய்ப்பை உருவாக்கக்கூடிய வகையில், ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இவர்கள் தற்போது, பள்ளிக்கூடங்களிலும், திருமண மண்டபங்களிலும் தங்கியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு





வெளியிலே ஒரு மாற்று ஏற்பாடு செய்யவேண்டும். கொஞ்சம் பேர் தனியாகப் போய்விடுவார்கள். வாய்ப்பேயில்லாதவர்களுக்கு ஏதாவது சில முகாம்கள் அமைக்கப்பட்டு, கொஞ்ச காலம் அவர்கள் அங்கே தங்குவதற்குரிய ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இந்த விபத்து ஒரு கோரமான விபத்து. ஆகவே, இந்த விபத்து நடந்திருப்பதைக் கவனத்தில் கொண்டு, மற்ற இடங்களையும் ஆய்வு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோன்று, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கட்டடங்களையும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு அதைப் பார்த்த பிறகு, பெரும் கவலையாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் பணிவோடு கொண்டுவர விரும்புவது, திருப்பூரிலே செயல்படுகிற மாவட்ட அரசு மருத்துவமனை, இன்றைக்கு உக்கடம் பகுதி வீட்டு வசதி வாரியக் கட்டடத்தைப் போன்ற நிலையிலேதான் காட்சியளிக்கிறது. நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை அழைத்துச் சென்று நேரில் அதைக் காட்டினேன். ஒரு விபத்து நடந்த நேரத்தில், அங்கே வருகை தந்த நான்கு, ஐந்து அமைச்சர்கள், எங்களுடைய மாவட்ட அமைச்சர், உணவுத் துறை அமைச்சர், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், இவர்களெல்லாம் பார்வையிட்டார்கள். அதேபோல, உறுதிமொழிக் குழு அங்கே வந்தபோது, அதைப் பார்த்தது. அங்கே சுவர்களெல்லாம் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தச் சுவர்களெல்லாம் வளைந்து, நெளிந்து நிற்கின்றன. எந்த நேரத்தில் விபத்து ஏற்படுமோ என்ற அச்சம் இருக்கிறது. இப்போது நடந்த விபத்தை மையமாகக் கொண்டு, இதுபோன்று பழுதடைந்திருக்கிற கட்டடங்களை, பயன்பாடு இல்லையென்றால் உடனடியாக, இடித்துவிட்டுப் புதிய கட்டடங்களைக் கட்டுவது போன்ற நடவடிக்கைகளுக்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, உக்கடத்திலே நடைபெற்ற இந்தக் கோர விபத்தால் 13 பேர் உயிரிழந்தும், ஏராளமானவர்கள் அடிபட்டும் இன்றைக்கு மருத்துவமனையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், உடனடியாக அந்தப் பகுதிக்கு நம்முடைய அமைச்சர் அவர்களையும், கூடவே நம்முடைய அரசின் உயரதிகாரிகளையும் அனுப்பி, அவர்களுக்கு ஆறுதல் கூறியும், தேவையான உதவிகளைச் செய்தும் வருகிறார்கள். அதன் அடிப்படையிலே, இன்றைக்கு அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் பாராட்டினாலும், இந்தக் கோர விபத்து இனிவருங்காலங்களில் நடைபெறக் கூடாது என்பதைச் சுட்டிக்காட்டுகிற வகையிலே, இதை ஒரு மிகப்பெரிய எச்சரிக்கையாக நாம் எடுத்துக்கொண்டு, நம்முடைய வீட்டு வசதி வாரியமும், குடிசை மாற்று வாரியமும் கட்டியிருக்கிற வீடுகள், அடுக்குமாடி வீடுகள், அரசுக் குடியிருப்புகள் அனைத்தையும் கண்காணிப்பதற்காக தனியாக ஒரு வல்லுநர் குழுவை அமைத்து, இந்தக் கட்டடங்களின் வாழ்நாளை நிர்ணயிப்பதற்கு, அந்தக் குழுவின் பரிந்துரையில் எத்தனை ஆண்டுகள் இந்தக் கட்டடங்கள் இருக்க வேண்டும்; அந்தக் கட்டடங்கள் இத்தனை ஆண்டுகளுக்கு மேல் இருக்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அதேபோன்று, அங்கே இருந்தவர்கள்—விபத்திலே இறந்ததற்கான காரணத்தையும் எனக்கு முன்பாகப் பேசிய அண்ணன் திரு. கோவிந்தசாமி அவர்கள் சொன்னதைப்போல, அங்கேயிருக்கிற மக்கள்—எங்களுக்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது; அந்தக் குடியிருப்புகளை எங்களுக்கு வழங்குவதற்கு என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற கட்டடங்களிலே குடியிருந்தவர்களுக்கு மீண்டும் அதே இடத்திலே வீடுகளைக் கட்டிக் கொடுப்போம் என்ற உறுதியையும் நம்முடைய அரசாங்கம் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய கட்சியின் சார்பிலும், ஐயா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி எங்களுடைய தலைவர் அண்ணன் திரு. கோ.க. மணி அவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கிற இடங்களையெல்லாம் பார்த்து ஆறுதல் கூறி வந்திருக்கிறார்கள்.

முற்பகல் 11–25

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும், குடிசை மாற்று வாரியமும் கட்டியிருக்கிற வீடுகள் நிறைய இடங்களிலே இதுபோன்ற நிலையிலேதான் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றன. இதுபோன்ற உயிரிழப்புகளும், பொருள் இழப்புகளும் ஏற்படாதவண்ணம் தடுப்பதற்காக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக, போர்க்கால அடிப்படையிலே ஒரு குழு அமைத்து இதையெல்லாம் கண்டறிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





எங்களுடைய மறைமலைநகர் பகுதியிலேகூட ஒரு சுகாதார நிலையம் இருக்கிறது. அந்த சுகாதார நிலையம்கூட இடிந்துவிழுகிற நிலையிலே இருக்கிறது. இதையெல்லாம் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம்; இது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சார்பிலே கட்டப்பட்ட மருத்துவமனை; மோசமான நிலையில் இருக்கிறது. இதையெல்லாம் கண்டறிந்து, உடனடியாக அரசு, மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிற வகையிலே—அதுவும் குறிப்பாக குடியிருப்பு வீடுகளிலே வாழ்கிறவர்களுக்கு—ஒரு நல்ல உத்தரவாதத்தைத் தரவேண்டும்.

அதுமட்டுமல்லாமல், மும்பையிலே கடந்த மாதம் ஒரு விபத்து ஏற்பட்டது. ஏழடுக்கு மாடிக் கட்டடம் இடிந்து விழுந்தது தெரியும். அதுபோன்று, நம்முடைய சென்னை மாநகர் போன்ற பெரு நகரங்களிலே ஏராளமான அடுக்குமாடி வீடுகளைத் தனியார்களும் கட்டியிருக்கிறார்கள். அந்த வீடுகளையும் கண்காணிப்பதற்கான ஒரு குழுவை நம்முடைய அரசு அமைக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, உக்கடம் பகுதியிலே குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு இடிந்து விழுந்ததிலே 13 பேர் உயிர்பலியான செய்தி மிகுந்த வேதனையளிக்கக்கூடியது. சுமார் 20 பேருக்குமேல் காயமுற்றிருக்கிறார்கள். இதற்குரிய நிவாரண உதவித் தொகைகளை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அறிவித்து, அவர்களுக்கு ஆறுதலைத் தெரிவித்திருக்கிறார்கள். இதில் பாதிக்கப்பட்ட மக்கள் கிட்டத்தட்ட ஐந்து முகாம்களிலே தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, இப்படிப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுகிறபொழுது இதற்குரிய கட்டுமானப் பணிகள் தரமாக இருக்கின்றனவா என்பதைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. இப்படிப்பட்ட அரசுக் கட்டடங்களைக் கட்டுகிறபொழுது அதற்கு யார் பொறுப்பானவர்கள் என்ற கேள்வி எழுகிறது. ஆகவே, இதற்குரிய ஒப்பந்ததாரர்கள், இதற்குரிய அலுவலர்கள் அதற்குப் பொறுப்பாக்கப்பட வேண்டிய அவசியம் இருப்பதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. இல்லையென்று சொன்னால், இப்படிப்பட்ட கட்டடங்கள் கட்டுகிறபொழுது தரமற்றவையாக

மாற்றப்பட்டுவிடுகிற கொடுமை நிகழ்கிறது. 100 ஆண்டுகாலம் அந்தக் கட்டடம் நிலைத்து நிற்பதற்குரிய உறுதி தேவைப்படுகிறது. பல்வேறு தொழில்நுட்பங்கள் வளர்ந்திருக்கிற இந்த நிலைமையில் இப்படிக் கட்டப்படுகிற கட்டடங்கள் சரிந்து விழுந்து, உயிர்பலி ஆவதென்பது தடுக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. தொழில்நுட்ப வசதி இல்லாத காலத்திலேயே கட்டப்பட்ட கட்டடங்கள்—இன்றைக்கும் நாம் பேசிக்கொண்டிருக்கிற — இந்தச் சட்டமன்றக் கட்டட வளாகமே இன்னும் உறுதியோடு இருக்கிறது! ஆனால், இதற்குப் பின்னாலே 75 அல்லது 100 ஆண்டுகள் கடந்து கட்டப்பட்டக் கட்டடங்கள் இப்படிச் சரிந்து விழுகிறதென்று சொன்னால், இந்தக் கட்டுமானப் பணிகளுடைய தரம் என்பது மிகக் குறைந்ததாக இருக்கிறதென்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே, இவற்றை உறுதி செய்வதற்கு நமது அரசு ஒரு புதிய திட்டத்தை அல்லது சட்டத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே பலியானவர்களைக் காலி செய்யச் சொல்லி, முன்பே அரசு எச்சரிக்கை செய்திருக்கிறது. ஆனால், அந்த எச்சரிக்கையை ஏற்றுக்கொள்ளாத மக்கள் இப்படி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதிலே விழிப்புணர்வு இல்லை என்பது ஒரு வருத்தத்திற்குரிய செய்தி. அதற்குரிய காரணத்தைக் கேட்கிறபொழுது அவர்கள் பொருள்களை இழப்பதற்கு மனம் இல்லாதவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆகவே, பொருள்களை எப்படியாவது பாதுகாக்க வேண்டும் என்பதற்குரிய முயற்சியாக அந்தக் காரியத்திலே ஈடுபட்டவர்கள்தான் இந்த உயிர்பலிக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று செய்தி வருகிறது. ஆகவே, இன்னொரு நிலையிலிருந்து பார்க்கிறபொழுது பொருள் தேவையாக இருக்கிறது. அது இல்லாதவர்களாக ஆகிவிடுவோமோ என்ற அச்சத்தின் காரணத்தினாலேயே இப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11–30

ஆகவே, இந்த நிலைமைகளையெல்லாம் கருத்திலே கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களுக்கு உரிய நிவாரணத்தை வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னாலும்கூட, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, அவர்களுக்கு மாற்று இடம் ஏற்பாடு செய்வதற்கு ஒரு கால அவகாசம் தேவைப்படுகிறது. அதற்கு பல மாதங்கள்கூட ஆகலாம். ஆகவே, அவர்கள் தங்குவதற்குரிய ஒரு அவசர ஏற்பாட்டைச் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது என்று இந்திய



கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. சுனாமி ஏற்பட்டபோது அவர்களை பாதுகாப்பதற்குரிய முயற்சி எடுத்து, பாதிக்கப்பட்டவர்கள் தங்குவதற்கு அவசரமாகக் குடிசைகளை அமைத்துக் கொடுத்ததைப்போல, ஒரு அவசரத் திட்டமாக பாதிப்பிலே இருக்கக்கூடிய அந்த மக்களுக்கு ஒரு மாற்று ஏற்பாடு என்ற அடிப்படையிலே எல்லா வசதிகளுடன்கூடிய, ஒரு மாற்று இடத்தை அல்லது குடிசைகளை ஏற்பாடு செய்வதற்குரிய முயற்சியை அருகிலே செய்ய முடியுமா என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்றும் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்று இடம் ஏற்பாடு செய்வதற்குரிய அந்தத் தொகை போதாது என்று திரு. கோவை தங்கம் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதையும் பரிசீலிப்பதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தி, மாற்று இடத்தினை நமது அரசே ஏற்பாடு செய்து, கழிப்பறை வசதிகளோடு அவர்களைத் தங்க வைப்பதற்குரிய வாய்ப்பை ஏற்பாடு செய்வதற்குரிய முயற்சியை மேற்கொண்டால் வீட்டை இழந்துள்ள அந்த மக்களுக்கு உதவியாக இருக்கும். அதையும் நம்முடைய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்று ஏற்பாட்டிற்கு *5* ஆயிரம் ரூபாய் தருவதாகவும், அது குறைவாக இருப்பதாகவும் மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்களும் குறிப்பிடுகிறார்கள். நான் அவர்களுக்கு விளக்க விரும்புவது, உடனடியாக அவர்கள் மாற்றி கொண்டு செல்ல, ஏற்படுகின்ற செலவுகளை ஈடுகட்டத்தான் இந்த *5* ஆயிரம் ரூபாயே தவிர, மாற்று இடம் கட்டுவதற்காக இந்த *5,000* ரூபாய் அல்ல. அவர்களுக்காக மாற்று வீடுகள் கட்டித் தரக்கூடிய ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. மாற்று இடம் ஏற்பாடு செய்து தரப்படும் என்ற அந்த நன்றி. மாற்று இடம் ஏற்பாடு செய்து தரப்படும் என்ற அந்த வாக்குறுதிக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உணர்வுகளின் அடிப்படையிலே அந்தப் பகுதி மக்களைப் பாதுகாப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

[2007 அக்டோபர் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்பு கோவை, உக்கடம் பகுதியிலே வின்செண்ட் சாலையில் குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான குடியிருப்பு இடிந்து விழுந்து, 13 பேர் இறந்திருக்கிறார்கள், இருபதுக்கு மேற்பட்டவர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள் என்ற செய்தியைக் கேட்டு உடனே நம்முடைய தமிழக அமைச்சர் பெருமக்கள், தமிழக முதலமைச்சர் அவர்களின் · உத்தரவின்பேரிலே அங்கே நிவாரணப் பணிகளைத் துரிதமாக மேற்கொண்டார்கள் என்பதை நாம் ஊடகங்கள் வாயிலாகப் பார்த்தோம். ஆனால், கடந்த ஆட்சியாளர்கள் இந்தக் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளைச் சரியாகப் பராமரிக்காமல், பழுதுபார்க்காமல், இது யார் கொண்டு வந்தத் திட்டம், இந்தத் திட்டத்தில் நமக்கு என்ன பயன் இருக்கிறது என்ற பாகுபாட்டோடு அதைப் பாதுகாக்கத் தவறிவிட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழையெளிய மக்கள் எல்லாம் குடிசைப் பகுதிகளிலே வசிக்கக்கூடாது; அவர்களுக்குரிய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே நம்முடைய முத்தமிழ் அறிஞர் முதலமைச்சர் அவர்கள், தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் முதன்முதலிலே ஒடுக்கப்பட்ட மக்களுக்கு குடிசைகளை மாற்றி ஒரு வாரியத்தை அமைத்து, நீங்களும் அடுக்குமாடிகளிலே குடியிருக்கலாம் என்ற ஒரு பாதுகாப்பை அளித்தார்கள். ஆனால், கடந்த கால ஆட்சியாளர்கள் இந்த ஏழையெளிய மக்கள் வசிக்கின்ற குடிசை மாற்று வாரிய வீடுகளைப் பழுதுபார்க்காமல், அதைக் கண்டுகொள்ளாமல் புறம்தள்ளியதுதான் இன்று இடிந்து விழுந்ததற்குக் காரணம். ஆக, நம்முடைய சிமென்ட்டைப் பற்றி வல்லுநர்கள் எல்லாம் சொல்லும்போது, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற சிமென்ட் ஆலையை நான் பார்த்தபோது, அங்கே என்ன சொல்லுகிறார்கள் என்றால், சிமென்டிற்கு ஆயுள் 25 வருடம் என்று குறிப்பிடுகிறார்கள். ஆக, சிமென்டால் கட்டப்பட்ட இப்படிப்பட்ட குடியிருப்புகளை. 25 வருடங்களுக்கு மேலான இந்தக் கட்டடங்களை நாம் கண்காணிக்க வேண்டும். சென்னையின் சில பகுதிகளில் இப்படி அபாயகரமான நிலையிலே குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் இருந்துகொண்டிருக்கின்றன. அதையும் உடனே கருத்தில்கொண்டு நாம் அவர்களுக்கு மாற்று ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இறந்தவர்களுக்கு மூன்று இலட்சம் ரூபாயும், காயம் அடைந்தவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாயும், அவர்கள் உடனே வேறு இடம் செல்வதற்கு



V211,31 P07 P07.38

2007 அக்டோபர் 22] [திரு. கு. செல்வம்]

5 ஆயிரம் ரூபாயும் அளித்திருக்கிறார்கள். இந்தப் பணிகள் எல்லாம் நிறைவேறுவதற்கு 6, 7 மாத காலமாகும் என்று நம்முடைய அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த 6, 7 மாத காலத்திற்குள் பாதிக்கப்பட்டவர்கள் குடியிருப்பதற்கான அனைத்து வசதிகளையும் நம்முடைய தமிழக அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–35

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, உக்கடம், வின்சென்ட் தெருவிலே 19–10–2007 அன்று அடுக்குமாடிக் குடியிருப்பு இடிந்து விழுந்ததிலே 13 பேர் உயிரிழப்பும், 14 பேர் காயமடைந்த சம்பவம் குறித்து நம்முடைய பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 5–வது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற உடனே, தமிழகத்திலே ஏழைகளுக்காக வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட பழுதடைந்த வீடுகளையெல்லாம் மீண்டும் புதுப்பித்து, புதிய வீடுகளாகக் கட்டுவதற்கு தேர்தல் அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகள் எல்லாம், சென்னை, மதுரை, கோவை மற்றும் அனைத்து நகரங்களிலேயும் தொடர் நடவடிக்கையை அரசு எடுத்து வருகின்றது. இந்த நிலையிலே நம்முடைய குடிசை மாற்று வாரியத்தினுடைய அமைச்சர் அவர்கள் 2007 ஆம் ஆண்டு கோவை, உக்கடம், வின்சென்ட் தெருவிலே இருக்கின்ற அடுக்குமாடிக் கட்டடங்களை, ஏறத்தாழ 24 குடியிருப்புகளையும் நேரில் பார்வையிட்டு, பழுதடைந்த குடியிருப்புகளிலே இருக்கின்றவர்கள் காலி செய்து கொடுத்தால், ஜவஹர்லால் நேரு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உடனே அந்த வீடுகளைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து, விரைவிலே அவர்களுக்குத் தரப்படும் என்ற உத்தரவாதத்தை வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு குடிசை மாற்று வாரியத்தினுடைய அமைச்சர் அவர்களும், ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களும் ஒவ்வொரு வீடாக நேரிலே சென்று, அவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து தருகின்றோம், அதோடு மட்டுமல்லாமல், அந்த வீட்டைக் காலி செய்து போய்விட்டால், மீண்டும் வீடு கிடைக்குமா என்ற ஐயப்பா[illegible] அவர்களைப் [illegible]த்து, புகைப்படம் எடுத்து, அவர்க[illegible]கு

228093
சென்னை-600 009

[திரு. இ. பெரியசாமி] [2007 அக்டோபர் 22

அவர்களுக்கே மீண்டும் வழங்குவதற்குரிய உத்தரவாதத்தையும் நேரடியாக அவர்கள் தந்திருக்கிறார்கள். இப்படி இருக்க, எதிர்பாராமல் இந்தச் சம்பவம் நடந்த தினத்தன்று நம்முடைய வருவாய்த் துறையினுடைய அலுவலர்கள் மற்றும் வீட்டு வசதித் துறையினுடைய அலுவலர்கள் எல்லாம் நேரடியாகச் சென்று, மழை பெய்துகொண்டிருக்கின்ற நேரத்திலே இந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்திருக்கிறது, ஒருவேளை, இந்தக் கட்டடம் சேதமடையலாம் என்று குடியிருப்பவர்களிடத்திலே தெரிவித்த நேரத்திலே பெரும்பாலானவர்கள் வீட்டைக் காலி செய்துவிட்டார்கள். நீங்கள் இந்த இடத்தைக் காலி செய்துவிட்டு, தற்காலிகமாக திருமண மண்டபத்திற்குச் செல்லுங்கள், உங்களுக்கு மாற்று ஏற்பாடு செய்கிறோம் என்று வருவாய்த் துறை அலுவலர்களும், ஏனைய மாவட்ட நிர்வாகம் மற்றும் வீட்டு வசதித் துறையினுடைய அலுவலர்களும் தெரிவித்தும்கூட, ஒரு சிலர் அதைத் தடுத்திருக்கிறார்கள்; நீங்கள் காலி செய்துவிட்டீர்கள் என்றால், வீடே கிடைக்காது என்று தடுத்திருக்கிறார்கள். இதுதான் உண்மையிலேயே நடந்தது. இந்தக் குடியிருப்பிலே இருக்கக்கூடிய 24 வீடுகளிலே இறந்தவர்கள் 5 பேர்தான். ஆனால், அதே சமயத்தில் மேலே யாரும் இருப்பார்களோ என்று அவர்களைக் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்யப் போனவர்களில் 8 பேர் இறந்திருக்கிறார்கள். காப்பாற்றப் போனவர்கள்தான் பெரும்பாலும் இறந்திருக்கிறார்கள். குடியிருப்பவர்கள் பெரும்பாலும் வெளியேறிவிட்டார்கள். அதிலே 5 பேர்தான் சிக்கி இருக்கிறார்கள். உண்மையிலேயே அவர்களுக்கு விழிப்புணர்ச்சி இல்லாததே இதற்குக் காரணம். அங்கிருந்த மற்றவர்கள், பெரும்பாலானவர்கள் வெளியேறிவிட்டார்கள். அங்கே குடியிருந்த பெரும்பாலானவர்களில் 5 பேர்தான் மரணம் அடைய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இங்கே பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் 6 மணிக்கு இந்தச் சம்பவம் நடந்த உடனே, நானும், நம்முடைய ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களும் நேரடியாகச் சென்று பார்க்க வேண்டுமென்று தெரிவித்த உடனே, நாங்கள் 7 மணிக்கு வானூர்திமூலம் நேரே போய்விட்டோம். ஒரு மணி நேரத்திலே நேரடியாக அந்த இடத்திற்குப் போய்ப் பார்த்தோம். அங்கே என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன; எத்தனை பேர் இறந்திருக்கிறார்கள் என்று இரவு 11½ மணி வரை தொலைபேசியிலே கேட்ட ஒரு முதலமைச்சர்



2007 அக்டோபர் 22] [திரு. இ. பெரியசாமி]

இருக்கிறார் என்றால், அது தலைவர் கலைஞராகத்தான் இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று யாரோ இது அரசினுடைய மெத்தனப் போக்கு என்று சொல்கிறார்கள். ஒருவேளை இடி விழுந்து, மின்னல் தாக்கி இறந்தால்கூட தலைவர் கலைஞர் அரசுதான் பொறுப்பு என்று சொல்லக்கூடிய காலகட்டம் தமிழ்நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இரவு 11½ மணி வரை அவர்களுக்கு என்னென்ன வேண்டுமோ, அரசு மருத்துவமனையிலே இருக்கின்றவர்களுக்கு தனியார் மருத்துவமனையிலே சிகிச்சை தரவேண்டுமென்றாலும், அவர்களுக்கு முழு அளவிலே சிகிச்சை தரவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டார்கள்.

முற்பகல் 11–40

இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல எவ்வளவு அதிகபட்சம் மருத்துவ வசதி செய்து தரவேண்டுமோ அந்த அளவிற்குக் காயம்பட்டவர்களுக்கு மருத்துவ வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, நிவாரணத் தொகையான ரூ.5,000 என்பது தற்காலிகமாக அவர்கள் மாறிச் செல்வதற்காகத்தான் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. மதுரை, சென்னை அனைத்து இடங்களிலும் பழுதுபட்ட கட்டடங்களைப் புதுப்பிப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுரைப்படி இன்றைக்கு மாலையே தமிழகத்தில் இருக்கிற வீட்டு வசதித் துறையினுடைய அலுவலர்களையெல்லாம் அழைத்து, பழுதுபட்டிருக்கிற இடங்களில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து உடனே நடவடிக்கை எடுக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேலான கருத்துகளை நாங்கள் சிரமேற்கொண்டு, அவற்றின்மீது நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். குறிப்பாக, உக்கடம் வின்சென்ட் சாலை குடியிருப்பிலே இருந்த மக்களுக்கும் மற்றும் ஏனைய குடியிருப்புகளிலே இருக்கிற மக்களுக்கும் புதிய வீடுகளைக் கட்டித் தருவதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து அமைகின்றேன்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) கடலூர் சிப்காட் பகுதியில் குடிநீரில் கழிவுநீர் கலந்ததால் மர்ம நோய்

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Nothing. உட்காருங்கள். கடலூர் சிப்காட் பகுதியில் உள்ள சாசன் நிறுவனம் விஷக் கழிவு நீரை வெளியிடுவதால், அது குடிநீரில் கலந்து மர்ம நோய் ஏற்பட்டுள்ளதால் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் 55–வது விதியின்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார். தகவல் கோரல் என்ற முறையிலே அதை எடுத்துக்கொள்கிறேன். அதுகுறித்துச் சுருக்கமாக அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

### (இ) கடலூர், தனியார் கிறித்தவ பள்ளி மாணவி மரணம்

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு இன்று காலை நடந்த ஒரு சம்பவம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். அந்தக் கருத்தை நான் வலியுறுத்திய பிறகு இந்தப் பிரச்சினை குறித்து நான். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. முதலில் இதுகுறித்துச் சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** முதலமைச்சர் அவர்களிடத்தில் காலையில் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி கொடுத்திருப்பது இதற்குத்தான். இதுகுறித்து பேசுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** Zero hour-ல் இது முக்கியமான பிரச்சினை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதைப் பேசுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** ஒரே வரியில் அந்தக் கருத்தைச் சொல்லிவிட்டு திரும்ப இந்தப் பிரச்சினைக்கு வருகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை 4–30 மணியளவில் கடலூரில் இருக்கிற மிகப் புகழ் பெற்ற ஒரு தனியார் கிறித்தவ சிறுபான்மை



அமைப்பு நடத்துகின்ற பள்ளி; அங்கு மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட அனைத்து மக்களுக்கும் கல்வியை ஊட்டி வருகிறது. அந்த நிறுவனம் மிகப் பெரிய கல்விப் பணியை, அரும் பணியை ஆற்றி வருகிறது. அந்தப் பள்ளியில் என்னுடைய தொகுதியைச் சார்ந்த என்னுடைய உறவினர் பெண் ஆனந்தவல்லி, 12 ஆம் வகுப்புப் படித்து வந்தவர் மர்மமான முறையில் இறந்து கிடக்கிறார். ஆதலால் அந்தப் பள்ளியைச் சுற்றி அவர்களுடைய உறவினர்களும், என்னுடைய உறவினர்களும், எப்படி அந்தக் கொலை நடந்தது என்கிற நிலையில் அங்கு மிகப் பெரிய ஒரு பதட்டமான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. என்னைத் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு உடனே புறப்பட்டு வாருங்கள் என்று சொன்னபோது, நான் வெளியே வந்தவுடனே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் நம்முடைய அவைக்கு வந்தார். நான் நேரடியாக அவரிடத்தில் சென்று இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது, தாங்கள் விசாரணைக்கு உத்தரவிட்டு நியாயம் வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்தேன். உண்மையிலேயே அந்தப் பள்ளி மிகப் பழமைவாய்ந்த பள்ளி. சிறப்பான கல்விப் பணி ஆற்றி வருகிற பள்ளி. அந்தப் பள்ளியினுடைய பெயருக்கும், புகழுக்கும் எந்தவித களங்கமும் ஏற்படக்கூடாது என்பது என்னுடைய ஆசை. அதேவேளையிலே அங்கு ஒரு பெண் மர்மமான முறையில் வேறு இரண்டு துப்பட்டாக்களோடும், வாயில் துணி வைக்கப்பட்டும் இறந்து கிடக்கிறார் என்ற ஒரு செய்தி வருகிறது. இதில் அங்கு என்ன நடந்திருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விசாரணைக்கு உத்தரவிட்டு, அந்த உண்மையை இந்த நாட்டுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, உயிரிழந்த அந்த மாணவியினுடைய குடும்பத்தாருக்கு—கருணை உள்ளத்தோடு இருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள், அது கொலையா, தற்கொலையா என்பது தங்கள் உத்தரவிற்குப் பிறகு நாட்டு மக்களுக்குத் தெரிய வரும். ஆனால், தவித்துக் கொண்டிருக்கிற அந்த ஏழை குடும்பத்திற்கு—ஏதாவது ஒரு தொகையை நீங்கள் முன்வந்து அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அவர்கள் இங்கே எழுப்பியுள்ள பிரச்சினை உருக்கமானது. அதேநேரத்தில் விசாரித்து, உண்மை என்ன என்று தெரிந்துகொள்ளப்பட வேண்டியது. இந்தச் சூழ்நிலையில் அந்தக்

குடும்பத்தாருக்கு உதவித் தொகை கொடுங்கள் என்று சொல்வதும், உடனடியாக உண்மையைக் கண்டறிந்துச் சொல்லுங்கள் என்று கூறுவதும் அவ்வளவு பொருத்தமானதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், அந்த வேண்டுகோளில் சாரம் இருப்பதை நான் உணர்கிறேன். உணருகிற காரணத்தால், ஏற்ற வகையில் விசாரணை நடத்தி என்ன குற்றம் விளைவிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வேல்முருகன் அவர்கள் அந்தக் குடும்பத்தைப் பற்றிச் சொல்லி, உடனடியாக இப்போதே ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். உதவி செய்வது என்பது எல்லோரும் செய்யலாம். அமைச்சர்களும் செய்யலாம், அல்லது தொகுதியினுடைய உறுப்பினரும் செய்யலாம். எனவே, அவசர உதவியை, நண்பர் வேல்முருகன் அவர்கள் உடனடியாக ஏற்றுக்கொண்டு, பிறகு அரசிடமிருந்து அதைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முதலில் அந்த உதவியை அவர் செய்து, அரசுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–45*

### (ஆ) கடலூர் சிப்காட் பகுதியில் குடிநீரில் கழிவுநீர் கலந்ததால் மர்ம நோய்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் சிப்காட் வளாகத்தில், மிகப் பெரிய கெமிக்கல் நிறுவனங்கள் உருவாகியுள்ளன. இந்தச் சட்டப் பேரவைக் கூட்டத்தொடரில் நான் கடந்த ஏழு ஆண்டு காலமாக பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்களையும், சிறப்புக் கவன ஈர்ப்புகளையும் கொண்டு வந்து, ஏற்கெனவே நமது முதலமைச்சரிடத்திலேயும் கோரிக்கை வைத்துப் பேசியிருக்கின்றேன். நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, இந்தப் பிரச்சினையை நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அன்றையதினம் நம்முடைய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் எழுந்து, என்னுடைய தலைமையில், சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்து, அங்கு ஓர் ஆய்வுப் பயணம் மேற்கொண்டு, நிச்சயம் இதற்கு ஒரு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்கள்.





குழுவின் சார்பாக அனைத்துக்
ன்கூட அரசு உறுதிமொழிக் குழுவின் சார்பாக அனைத்துக்
ட்சி சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்துக்கொண்டு,
ந்நிறுவனங்களையெல்லாம் பார்வையிட்டேன். மிக மோசமாகச்
ற்றுச்சூழல் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றது. நிலத்தடி நீருக்கு மிகப்
பரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதோடு காற்றின்மூலமாக
ிஷத்தன்மை பாவி, அவ்வப்போது அவர்களுக்கு மயக்கம் ஏற்பட்டு,
ாந்தி ஏற்பட்டு, பீதியடைந்து, அவர்கள் மிகவும் அச்சத்தோடு
ாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால்,
னெஸ்கோ கொரியர் என்ற நிறுவனம் உலகத்திலேயே 12 நாடுகளை
ிகப் பெரிய அளவில் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தக்கூடிய
ாடுகளாகக் கண்டறிந்திருக்கிறது. அந்த 12 நாடுகளில் இந்தியாவும்
ரு நாடாக இருக்கின்றது. இந்திய நாட்டிலேயே, தமிழ்நாட்டில்
ூற்காடு மற்றும் இராணிப்பேட்டைபோன்ற சிப்காட் வளாகங்களும்
தில் இடம் பெற்றிருப்பதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.
றிப்பாக, பல்வேறு பத்திரிகைகளில் 'பெண்ணையாற்றில் செத்து
ிதக்கும் மீன்கள்' என்ற தலைப்பிலும், 'இலட்சக்கணக்கான மீன்கள்
செத்து மிதக்கின்ற காட்சி' என்று அனைத்துப் பத்திரிகைகளிலும், இந்து,
இந்தியன் எக்ஸ்பிரஸ், தினத்தந்தி, தினமணி, தினமலர் போன்ற
அனைத்துப் பத்திரிகைகளிலும் செய்தியாக வந்திருக்கின்றது. நான்
அதை இந்த அவையின் கவனத்திற்கு மாண்புமிகு போவைத்
தலைவரின் அனுமதியோடு காண்பிக்க விரும்புகின்றேன்.

அதேபோன்று அந்த விஷத்தன்மையான காற்றை உள்வாங்கி
சுவாசிக்கின்ற காரணத்தாலும், அங்குள்ள நிலத்தடி நீரில் மாசு ஏற்பட்டு
விஷநீராக மாறியதன் காரணத்தாலும், அங்குள்ள கைப்பம்புகள்மூலம்
வரும் நீர் மற்றும் வீட்டுக் கிணறுகளில் உள்ள நீரை அவர்கள்
அருந்தியதன் காரணத்தாலும், 300–க்கும் மேற்பட்ட அப்பகுதி மக்கள்
விஷக் கிருமிகளால் பாதிக்கப்பட்டு, வாந்தி ஏற்பட்டு, அவர்களுக்கு
என்ன ஜுரம் என்றுகூடக் கண்டுபிடிக்க முடியாத ஒரு கொடிய
நோய்க்கு உள்ளாகி, கடலூர் அரசுப் பொது மருத்துவமனையில்
அனுமதிக்கப்பட்டு, தற்போது சிகிச்சைப் பெற்று வருகின்றார்கள். ஆக,
பல்வேறு காலகட்டங்களில் நான் இந்த அரசின் கவனத்தை ஈர்த்தும்,
கவனத்திற்குக் கொண்டு வந்தும், உலகளவில் சுற்றுச்சூழலுக்கு மிகப்
பெரிய பங்கம் ஏற்படுத்துகின்ற தொழிற்சாலைகள் அங்கு இயங்கிக்
கொண்டிருக்கின்றன. அதுபோன்ற தொழிற்சாலைகளை, அது எந்தத்
தொழிற்சாலையாக இருந்தாலும், அதை மாண்புமிகு முத்தமிழறிஞர்
நம்முடைய கலைஞர் அவர்களின் அரசு–நாங்கள் உறுதிமொழிக்
குழுவின் சார்பாக கடலூர் சிப்காட் வளாகத்திற்குச் சென்று ஆய்வு

செய்தபோது பார்த்தோம். — இந்த நாட்டிலே மிகவும் செல்வாக்கு படைத்த ஒரு நிறுவனத்தால், பல்வேறு மாசுக் கேடுகளை அனுபவித்த, மக்களுக்கு கொடிய நச்சுக் காற்றைப் பரப்பிய அந்த நிறுவனத்தின்மீது தயவுதாட்சண்யமின்றி நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து, அந்த நிறுவனத்திற்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருப்பதாகத் தகவல் வருகிறது. இப்படி யாருக்கும் தயவுதாட்சண்யம் பார்க்காமல், அப்பகுதி மக்களுடைய வாழ்வியல் ஆதாரத்தை, உயிரைப் பாதுகாக்கின்ற, குழந்தைகளுடைய பிறப்புரிமையில் எந்தப் பங்கமும் ஏற்படாத அளவு, பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கின்ற நம்முடைய அரசு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய கடந்தகால ஆட்சியில் முதல்வர் அவர்களுடைய செயலாளராக இருந்த திரு. சுந்தரத்தேவன், ஐ.ஏ.எஸ். என்கின்ற நேர்மையான Chairperson அவர்களுடைய தலைமையில் இயங்கி வந்த இந்தச் சுற்றுச்சூழல் இயக்ககம் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** அவருடைய தலைமையில் நேரடியாகச் சென்று ஒரு திடீர் ஆய்வை, அமைச்சரோ, சட்டமன்ற உறுப்பினர்கள், அடங்கிய குழுவோ சென்றால், அதற்கான தயாரிப்பு முன்னேற்பாடுகளை இந்நிறுவனங்கள் செய்து பூசி மழுப்பிவிடுகின்றன. ஆதலால் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவுக்கிணங்க, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய அதிகாரிகளும், அதேபோன்று நீரியல் துறை அதிகாரிகளும், கடல்சார் நிறுவனத்தின் அதிகாரிகளும், மீன்வளத் துறை அதிகாரிகளும் கூட்டாக ஆய்வு செய்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய அதிகாரிகள் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அப்பகுதிக்கு திடீர் ஆய்வு மேற்கொண்டு, இதுபோன்று மாசு ஏற்படுத்துகின்ற நிறுவனங்கள், அவர்கள் எவ்வளவு பெரிய செல்வாக்கு படைத்தவர்களாக இருந்தாலும், அவற்றை நிரந்தரமாக மூடுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பகுதி மக்களுடைய வாழ்வாதாரத்தையும், குடிநீர் ஆதாரத்தையும் பாதுகாக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக சம்பந்தப்பட்ட துறையினுடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்தையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தையும் ஈர்த்து அமைகின்றேன், வாய்ப்புக்கு நன்றி.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குற்றச்சாட்டுகள் இன்றையதினம் கடலூர் சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள 20 தொழிற்சாலைகளில், 15 சிவப்பு, பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, கடலூரைப் பொறுத்த அளவில், குறிப்பாக சாசன் கெமிகல் நிறுவனத்தில் அவர்கள் zero discharge தான் செய்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் மற்ற நிறுவனங்களெல்லாம் சேர்ந்து Cusecs என்ற நிறுவனம்மூலமாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் கடலுக்கு வெளியேற்றப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் முழு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அந்த நிறுவனத்தில் இதுவரை 10 தடவைகள் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. ஆய்வு செய்யப்பட்ட குழுவிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தலைமையேற்றிருக்கிற உறுதிமொழிக் குழுவும், பல இதர அதிகாரிகளும், மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத் தலைவரும், கிட்டத்தட்ட 10 தடவைகள் ஆய்வு செய்திருக்கிறார்கள். இன்னும் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(முற்பகல் 11–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன திரு. வேல்முருகன்? அடுத்த நிகழ்ச்சிக்குப் போக வேண்டும்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கேள்வி ஒன்று. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது உண்மை. நான் ஏற்றுக்கொள்கிறேன். அரசு உறுதிமொழிக் குழு சென்ற போதும் சரி அல்லது அமைச்சர், அவர்களுடைய அதிகாரிகள் பெருமக்களுடன் ஆய்வுகள் செய்கின்றபோதும் இந்த zero discharge என்கிற அந்தச் சுழல் முயற்சியால், முறையான சுத்திகரிப்பு நிலையங்கள் ஒரு மாதத்திற்கு பல இலட்ச ரூபாய் மின்சார வாரியத்திற்கு

கட்டவேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், அந்த 20 யூனிட்டுகளும் சேர்ந்துகொண்டு அதை இயக்காமலேயே நேரடியாக அப்படியே ஆற்றின்மூலம் கடலில் கலக்கவிடுகின்றார்கள். இதைக் குழுவின் சார்பாக அனைத்துக் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களும் கையுங்களவுமாக நாங்கள் பிடித்தோம், இது ஒன்று. இரண்டாவது, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் எந்தெந்த மாத்திரைகளை, எந்தெந்த உயிர் காக்கும் மருந்துகளைத் தயாரிப்பதற்கு அனுமதி தந்திருக்கிறதோ அதற்கு நேர்மாறாக 100 மடங்கு அதிகமாக, T.D.S.-ன் அளவு 2100 மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் அனுமதிக்கப்பட்டது. ஆனால் அங்கு இருக்கிற தொழிற்சாலைகளிலிருந்து, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய அளவுகளை மீறி 12,000 T.D.S. வரை வெளியேறுகிறது; குழுவின் நேரடி ஆய்வில் கண்டுபிடித்திருக்கிறோம். உங்கள் மாசுக் கட்டுபாட்டு வாரியத்தினுடைய அதிகாரிகளும் அதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கிருக்கிற அந்த நிறுவனங்களெல்லாம் அனுமதியே பெறாமல் பல்வேறு பொருட்களை அங்கு உற்பத்தி செய்துவருகிறார்கள். சம்பந்தப்பட்ட அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய B.D.O.-வினுடைய ஒப்புதல் கிடையாது; அனுமதிச் சான்றிதழ் கிடையாது. கட்டுப்பாட்டு அதிகாரிகளுடைய அனுமதியேயில்லாமல் சட்டத்திற்குப் புறம்பாக இதுபோன்று உற்பத்திகளைச் செய்வதால் மக்கள் அபாயத்திற்குள் தள்ளப்படுகிறார்கள். இதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. எல்லா நிலைகளிலும் நாங்கள் ஆய்வு செய்தபோது, அவர்களை கன்ட்ரோல் செய்வதற்கு, கட்டுப்பாட்டு வாரிய விதிகளுக்கு உட்பட்டு, அவர்கள் கழிவுநீரை வெளியேற்றுவதற்கு யாராலும் உத்தரவிடமுடியாமல், சர்வாதிகாரம் பெற்றவர்கள்போல் அந்த நிறுவனங்கள் அங்கு செயல்பட்டு வருகின்றன. அந்த நிறுவனங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அரசு அனுமதியில்லாமல் இயங்கி வருகின்ற எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும், அதை மூடுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்தி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு முறையாக நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## 4. கவன ஈர்ப்பு

### (அ) வாகன விபத்துகளால் ஏற்படும் இறப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம் அவர்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தினமும் ஏற்படும் அதிகமான வாகன விபத்துகளால் ஏராளமானவர்கள் இறப்பதால் மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

தமிழகத்தில் நடந்துள்ள மொத்த சாலை விபத்துகளை கடந்த 2000 ஆம் ஆண்டிலிருந்து நோக்கும்போது பொதுவாக சாலை விபத்துகள் சற்றுக் கூடுதலாக உள்ளன.

**தமிழ்நாட்டில் நிகழ்ந்த மொத்த சாலை விபத்துகள்**

| வருடம் | உயிரிழப்பு விபத்துகள் | உயிரிழந்தோர் எண்ணிக்கை |
|---|---|---|
| (ஜனவரி-டிசம்பர்) | | |
| 2000 | 8,269 | 9,300 |
| - | - | - |
| - | - | - |
| - | - | - |
| 2006 | 10,055 | 11,009 |

[திரு. கே.என். நேரு] [2007 அக்டோபர் 22

ஆனால் தமிழகத்திலுள்ள ஏழு போக்குவரத்துக் கழகங்களை உள்ளடக்கிய 18,330 பேருந்துகளின் இயக்கத்தில் ஏற்படும் உயிரிழப்பு விபத்துகள் மேற்கண்ட காலகட்டத்தில் கணிசமாகக் குறைந்துள்ளன. இவ்விவரம் பின்வருமாறு:

| வருடம் | உயிரிழப்பு விபத்துகள் | உயிரிழந்தோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 2000–2001 | 1,401 | 1,706 |
| – | – | – |
| 2006–2007 | 1,360 | 1,558 |

மேற்கண்ட காலகட்டங்களில் போக்குவரத்துக் கழகங்களில் பேருந்துகளின் எண்ணிக்கை 17,033–லிருந்து தற்போது 18,330 என உயர்ந்துள்ளது.

1) போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் பயிற்சி பெற்ற ஓட்டுநர்களுக்கு முன்னுரிமை கொடுத்துப் பணியில் அமர்த்தப்படுகிறார்கள். ஓட்டுநர்கள் தேர்வு செய்யப்பட்டவுடன் போக்குவரத்துக் கழகங்களில் (Induction Training) பயிற்சி கொடுத்து, பின்னரே பணியில் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

2) விபத்துகளுக்குக் காரணமான ஓட்டுநர்கள்மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதுடன் விபத்துத் தடுப்பு ஆலோசனை முகாமில் பயிற்சி பெற்ற பின்னரே மீண்டும் பணிக்குச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

3) பொதுவாக எல்லா ஓட்டுநர்களுக்குமே சுழற்சி முறையில் புத்தாக்கப் பயிற்சிகள் (Refresher Courses) கொடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கென ஏழு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள மண்டலங்களில் கடந்த காலத்தில் மூடப்பட்டிருந்த பதினேழு (17) — அத்தனை பயிற்சிப் பள்ளிகளும் இப்பொழுது தொடங்கப் பெற்று நடைபெற்று வருகின்றன.

விபத்தில்லாமல் பணிபுரியும் ஓட்டுநர்களை ஊக்கப்படுத்துவதற்கு ரொக்கப் பணமும் பரிசாக வழங்கப்படுகிறது. பொதுவாக சாலை விபத்துகளை ஆராயும்போது கீழ்க்கண்ட புள்ளிவிவரங்கள் ஒரு முக்கியத் தகவலை நமக்குத் தருகிறது:



2007 அக்டோபர் 22] [திரு. கே.என். நேரு]

2000 ஆம் ஆண்டிலிருந்து 2006 வரையில் பெருகியுள்ள வாகனங்கள் பற்றிய விவரம்:

| விவரம் | எண்ணிக்கை 2000 (வருடம்) | 2006 (வருடம்) | சதவிகித உயர்வு |
|---|---|---|---|
| போக்குவரத்து வாகனங்கள் Transport Vehicles (அனைத்து பேருந்துகள் ஆட்டோக்கள், வாடகை சீருந்துகள், கனரக வாகனங்கள் உள்ளடக்கிய) | 3,99,300 | 5,81,106 | 45% |
| சொந்த சீருந்துகள், இருசக்கர வாகனங்கள் உள்ளடக்கிய (Non-Transport Vehicles) | 42,07,929 | 76,40,624 | 81% |

இரு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை மட்டும் மேற்கண்ட காலகட்டங்களில் இரு மடங்காகியுள்ளது.

இவ்வாறு வாகனங்கள் எண்ணிக்கை அதிகரித்திருப்பது வாகன நெரிசலை உருவாக்கியுள்ளது. இதுவும் சாலை விபத்துகள் அதிகரிக்க ஒரு காரணமாகும். கடந்த ஒரு வருட காலத்தில் அனைத்து சாலைகளும் அகலப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் எதிர்காலத்தில் விபத்துகள் வெகுவாகக் குறைவதற்கு வாய்ப்புள்ளது.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதிலே பல்வேறு நல்ல கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக 2000 ஆம் வருடத்திலிருந்து 2006 வரை பார்க்கின்றபோது ஏறக்குறைய நான்கு சக்கர வாகனங்கள் 45 சதவீதமும், இரு சக்கர வாகனங்கள் 81 சதவீதமும் அதிகமாகப் பதிவுபெற்றிருக்கின்றன என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கேற்ப இப்போது சாலைக் கட்டமைப்புகள் அதிகமாக இல்லை என்பதை நாம் கண்டறிகிறோம். அதனாலும் அதிகமான வாகன விபத்துகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இன்னொரு பக்கம் பார்த்தால், வாகனத்தை ஓட்டுபவர்கள் குடித்துவிட்டு ஓட்டுகிறார்கள் என்ற செய்தி நம் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஏனென்று சொன்னால், இப்போது சாலையோரங்களில் அதிகமான மதுக் கடைகள் இருக்கின்றன. வாகன ஓட்டிகள் அதைப் பார்த்தவுடனே உடனடியாக இறங்கிக் குடிக்கிற ஒரு வாய்ப்பிருக்கிறது. இதைக்

[திரு. கி. ஆறுமுகம்] [2007 அக்டோபர் 22

கட்டுப்படுத்த வேண்டுமென்று சொன்னால், இந்த வாகன ஓட்டிகளுக்குக் கடுமையான சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். குடித்துவிட்டு ஓட்டுகின்றவர்களுடைய உரிமத்தை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும். இதைச் செய்தால்தான் ஓரளவுக்கு வாகனக் கட்டுப்பாட்டைக் கொண்டுவர முடியும். குடித்துவிட்டு ஓட்டுகின்றவர்களுக்கு உதாரணம், நம்முடைய அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுனர் ஒருவர் வழித்தடம் 18A — தாம்பரத்திலிருந்து பாரிமுனைக்குச் செல்கின்ற பேருந்தை, குடித்துவிட்டு ஓட்டியதாலே கடந்த வாரம் ஒரு மிகப் பெரிய பிரச்சினை ஏற்பட்டது. அதிலே பயணம் செய்தவர்களே தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள் அந்த ஓட்டுனரை. மீனம்பாக்கத்தில் நிறுத்தி அவரை உடனடியாக காவல் துறையினரிடம் அழைத்துச் சென்று அவர்மீது வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். இது ஓர் உதாரணம்.

*முற்பகல் 11–55*

அதேபோன்று, குடித்துவிட்டு வாகனம் ஓட்டுபவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு நம்முடைய அரசு மிகப்பெரிய அளவிலே முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், நின்று கொண்டிருக்கின்ற வாகனங்களின்மீது மோதுகின்ற வாகனங்கள்தான் அதிகமாக இருக்கின்றன. விபத்துகளில் சம்பந்தப்பட்ட வாகனங்களோ அல்லது பழுதுபட்டு நின்றுகொண்டிருக்கின்ற வாகனங்களோ சாலையின் நடுவிலே நிறுத்தப்படுகின்றன. அதனால் பின்னாலே வருகின்ற வாகனங்கள், வேகமாக வருகின்றபொழுது, முன்னால் வாகனம் ஊர்ந்து செல்வதாக நினைத்துக் கொண்டு, அந்த வாகனங்களின் பின்னாலே இடித்துவிடுகிறார்கள். அதனாலே மிகப் பெரிய விபத்துகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் தடுப்பதற்கு ஒரு குழு அமைக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இப்பொழுது புதிதாகப் போடப்படுகின்ற சாலைகளின் ஓரங்களிலே வாகனங்களை நிறுத்துவதற்கு இடங்கள் இருக்கின்றன. நீண்ட தூரம் செல்கின்ற வாகன ஓட்டுனர்களில் ஒருசிலர்தான் அங்கே தங்குகிறார்கள். எஞ்சியோர் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறையிலே இன்னும் அதிகமான இடங்களிலே இதுபோன்ற வாகன நிறுத்துமிடங்களை ஏற்படுத்துவதோடு, இரவு நேரங்களிலோ அல்லது பகல் நேரங்களிலோ ஓட்டுநர்களுக்கு உடல்நிலை சரியில்லை என்றாலோ அல்லது தூக்கம்



2007 அக்டோபர் 22] [திரு. கி. ஆறுமுகம்]

வருகிறது என்றாலோ வாகனங்களை நிறுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு நம்முடைய துறை முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் செய்தால்தான் ஓரளவிற்கு வாகன விபத்துகளைக் குறைக்க முடியும். உயிரிழப்பைக் குறைக்க முடியும் என்ற என்னுடைய கருத்தைச் சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலை விபத்துகளைப் பற்றி இங்கே அளிக்கப்பட்டுள்ள விவர அறிக்கைக்கு மேலும் சில விவரங்களைக் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தச் சாலை விபத்துகள் நடக்கக்கூடாது என்பதற்காகப் அவர்கள் இந்தச் சாலை விபத்துகள் நடக்கக்கூடாது என்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை ஆட்சிப் பொறுப்பேற்ற இந்தக் குறுகிய காலத்திலேயே எடுத்து இருக்கிறார்கள்.

பொதுவாக, சாலைகள் செப்பனிடப்பட்டிருக்கின்றன. சாலைகள் செப்பனிடப்பட்டது மட்டுமல்ல. சாலையிலே ஆங்காங்கு விபத்து ஏற்படாமல் தடுப்பதற்காகவும் 100 இடங்களிலே சிகிச்சை அளிப்பதற்காகவும் மருத்துவமனைகளும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு அளவிலே இருக்கின்ற மொத்த இடங்களில் உடனடியாக சாலை விபத்துகள் நடக்கக்கூடிய ஆபத்தான பகுதிகள் எவை என்று கண்டறியப்பட்டு, அந்த இடங்களைச் சரி செய்வதற்காக, நிதியொதுக்கப்பட்டிருக்கிறது. அடிப்படை வசதிகளைச் செய்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருக்கின்ற ஓட்டுநர்களைத் தரமான ஓட்டுநர்களாக உருவாக்க வேண்டுமென்பதற்காக கடந்த காலத்தில் இருந்த அந்தப் போக்குவரத்து ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் எல்லாம் மீண்டும்—புதிதாக 17 இடங்களில்— உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஓட்டுநர்களுக்கு, அவர்கள் விபத்து ஏற்படுத்தாமல் இருக்க மூன்று மாதங்களுக்கு ஒரு முறை புத்தாக்கப் பயிற்சி தரப்படுகிறது. இப்படியெல்லாம் அடிப்படையிலேயே ஓட்டுநர்களுக்கு உரிய முறையிலே பயிற்சி அளிக்கப்படுகிறது. சாலைகள் சரிசெய்யப்பட்டிருக்கின்றன. வாகனங்கள் புதிதாக வாங்கப்பட்டிருக்கின்றன. சாலைகளும் புதிதாகப் போடப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு குழுக்களை அமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மாவட்ட அளவிலே, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே குழு அமைப்பதற்கு

அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இவ்வளவு பணிகள் நடைபெற்றபோதும், வாகனங்களினுடைய எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டும் கிட்டத்தட்ட 10 இலட்சம் அளவில் கூடுதலாக வந்து கொண்டே இருக்கின்றன. அதனால்தான் இந்த விபத்துகள் நடைபெறுகின்றன. அதைத் தடுப்பதற்குரிய முயற்சிகளை தொடர்ந்து அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற கருத்துகளையும் நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். மேலும், ஓட்டுநர்கள் எல்லாம் குடித்துவிட்டு ஓட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். அதைத் தடுப்பதற்குரிய முயற்சியையும் நாங்கள் எடுத்து வருகிறோம். அவர்கள் குடித்துவிட்டு ஓட்டுகிறார்களா என்பதைக் கண்டறிய காவல் துறையினருக்கு அதற்கான ஒரு கருவி தரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே விபத்து ஏற்படுத்திய ஓட்டுநர்கள்—முதல் தடவை விபத்து என்று சொன்னால், 6 மாத காலம் அவர்களுடைய ஓட்டுநர் உரிமம் இரத்து செய்யப்படுகிறது. இரண்டாவது முறை என்று சொன்னால், முழுமையாக அவர்களுடைய ஓட்டுநர் உரிமத்தை இரத்து செய்யக்கூடிய அளவிற்குக் கடுமையான நடவடிக்கைகளும் துறையின் சார்பாக எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்து, உறுப்பினர் அவர்களுடைய கருத்துகளையும் ஏற்று இந்தத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) வால்பாறை, குடியிருப்புகள் மற்றும் கடைகள்மீது வன விலங்குகளின் தாக்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை பகுதியில் ஒரு மாத காலமாக யானைகள் மற்றும் வன விலங்குகள் குடியிருப்புகளையும், கடைகளையும் தொடர்ந்து இடித்து வருவதால் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:





### அறிக்கை

வால்பாறைக்கு அருகில் உள்ள வனப் பகுதிகளில் அக்டோபர் முதல் மார்ச் மாதம் வரை நீர் ஆதாரம் மற்றும் உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு அதிக அளவில் ஏற்படுவதால் இக்காலங்களில் வால்பாறைப் பகுதியில் யானைகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படும். வால்பாறையில் யானைகள் வனப் பகுதியை விட்டு வெளியே வந்து, பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாவண்ணம் கீழே கொடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன:

(1) யானைகள் நடமாட்டத்தைக் கண்காணிக்க தனிக் குழு அமைத்து ரோந்து மேற்கொள்ளப்பட்டு, யானைகள் நடமாட்டம் கண்காணிக்கப்படுகிறது.

(2) பழக்கப்பட்ட துறை யானைகளைக் (கும்கி) கொண்டு காட்டு யானைகள் அருகிலுள்ள வனத்திற்கு விரட்டப்படுகின்றன.

(3) வால்பாறைப் பகுதியில் 2006–2007 ஆம் ஆண்டில் 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டது. 2007–2008 ஆம் ஆண்டில், 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

2. வால்பாறைப் பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக யானைகள் வனப் பகுதியைவிட்டு வெளியே வந்துள்ள நிலையில் கீழ்க்கண்ட 14 சிறு சம்பவங்கள் நிகழ்ந்து உள்ளன:

| தோட்டத்தின் பெயர் | சேதங்களின் விவரம் | நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1) கவரக்கல் | கட்டடங்கள் மற்றும் உள் கட்டமைப்பு | 2 |
| | நியாய விலைக் கடை | 1 |
| 2) பார்லே | நியாய விலைக் கடை | 1 |
| 3) புதுத்தோட்டம் | கட்டடங்கள் | 1 |
| 4) ஸ்டான்மோர் | மனிதருக்கு சிறு காயம் | 1 |

| | | |
|---|---|---|
| 5) கஜமுடி | கட்டடங்கள் மற்றும் உள் கட்டமைப்பு | 1 |
| | நியாய விலைக் கடை | 1 |
| 6) தாய்முடி | கட்டடங்கள் மற்றும் உள் கட்டமைப்பு | 1 |
| | நியாய விலைக் கடை | 2 |
| 7) தோணிமுடி | கட்டடங்கள் மற்றும் உள் கட்டமைப்பு | 1 |
| 8) இஞ்சிப்பாறை | கட்டடங்கள் மற்றும் உள் கட்டமைப்பு | 1 |
| 9) ஸ்ரீ முருகன் எஸ்டேட் | கட்டடங்கள் | 1 |

**ஆனால் எந்த உயிர்ச் சேதமும், பயிர்ச் சேதமும் ஏற்படவில்லை. விண்ணப்பித்தவருக்கு நிதி உதவி வழங்க வனத் துறை மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.**

**வால்பாறைப் பகுதியில் காட்டு யானைகள் மதிய உணவுக் கூடங்களையும், நியாய விலைக் கடைகளையும் அடிக்கடி தாக்கி வருகின்றன. நியாய விலைக் கடைகளில் யானைகளுக்கு மிகவும் பிடித்தமான பண்டங்கள், அதாவது உப்பு, சர்க்கரை மற்றும் வெல்லம் ஆகியவற்றைச் சேகரம் செய்து வைத்திருப்பதால், இத்தாக்குதல்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, மண் சுவரினால் கட்டப்பட்டுள்ள கட்டடங்களில் மேற்படி பொருட்கள் சேமித்து வைக்கப்படுவதால் யானைகளால் எளிதில் சேதப்படுத்தப்படுகின்றன. எனவே, சம்பந்தப்பட்ட நிர்வாகிகளுக்கு நடமாடும் நியாய விலைக் கடைகளை நடத்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், நியாய விலைக் கடைகள் தொழிலாளர் குடியிருப்புகளுக்கு அருகில் இல்லாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டு உள்ளன. மேலும், இது சம்பந்தமாகப் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.**

3. பொதுவாக, மாநில அளவில் யானைகள் மற்றும் வன உயிரின நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன:



**(i) சூரிய மின்வேலி அமைத்தல்:**

இந்தப் பணி துரிதப்படுத்தப்பட்டு 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.100.00 இலட்சம் செலவில் 62.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்ட நிலையிலிருந்து 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.424.00 இலட்சம் செலவில் 262.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டும், மேலும் 2007–2008 ஆம் ஆண்டில் ரூ.485.20 இலட்சம் செலவில் 303.25 கிலோ மீட்டர் தூரத்திற்கு 20 வனக் கோட்டங்களில் சூரிய மின்வேலி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(ii) நிவாரணம் வழங்குதல்:**

யானைகள் மற்றும் புலிகளால் ஏற்படுத்தப்படும் உயிர்ச் சேதம், பயிர்ச் சேதம் மற்றும் இதர வகைகளுக்கு மத்திய அரசு அளித்து வந்த நிதி உதவியைக் கொண்டே பெரும்பாலும் நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், 2006–2007 மற்றும் 2007–2008 ஆண்டுகளில் மட்டும் மாநில அரசு தமது நிதியிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ.50.00 இலட்சம் வீதம் ஒப்பளிப்பு வழங்கி, நிவாரணத் தொகை உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் பொருள் மற்றும் பயிர்ச் சேதங்களுக்கு விவசாயிகளிடமிருந்து வரப்பெற்ற மனுக்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகையின் விவரம் பின்வருமாறு:

| வரிசை எண் | ஆண்டு | வழங்கப்பட்ட நிவாரணத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 2003–2004 | 7.84 |
| 2. | 2004–2005 | 7.21 |
| 3. | 2005–2006 | 3.92 |
| 4. | 2006–2007 | 58.94 |

**(iii) வனத் துறை மேற்கொள்ளும் மற்றைய நடவடிக்கைகள்:**

1) துரத்துதல், பட்டாசு வெடித்தல், சப்தம் எழுப்புதல், ஒளி பாய்ச்சுதல் மற்றும் பழக்கப்பட்ட யானைகளைக் கொண்டு துரத்துதல்.

2) வலை மற்றும் கூண்டு மூலம் பிடித்தல்.

3) பழக்கப்பட்ட யானைகளைக் கொண்டு இடர்பாடுகளில் உள்ள வன விலங்குகளை மீட்டல்.

4) வன உயிரினங்களின் நடவடிக்கைகள் குறித்த கல்வியினை மக்களுக்குப் புகட்டுதல் மற்றும் தடுப்பு முறைகளைப் பேணுதல்.

மேற்கண்டவாறு தொடர்ந்து யானைகள் மற்றும் வன உயிரினங்கள் நடமாட்டத்தைக் கண்காணித்துப் பொதுமக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் வகையில் அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு மாதத்தில் மட்டும் யானைகள் வால்பாறையிலே கடைகளையும், வீடுகளையும், சத்துணவுக் கூடங்களையும் 14 இடங்களில் இடித்திருக்கின்றன. சோலையாறு, தாய்முடி, தோணிமுடி, இஞ்சிப்பாறை, ஸ்ரீ முருகன் எஸ்டேட், புதுத் தோட்டம், வெள்ளைமலை, கவரக்கல், அய்யர்பாடி, பார்லே, கருமலை போன்ற பகுதிகளில் வீடுகளையும், கடைகளையும் சத்துணவுக் கூடங்களையும் இடித்திருக்கின்றன. இப்போதுகூட சோலையாறு அணைப் பகுதியிலே யானைகள் இருந்து கொண்டு மக்களைப் பீதியடையச் செய்து கொண்டிருக்கின்றன. கடந்த 2006–2007 ஆம் ஆண்டு மட்டும் 88 இடங்களிலே யானைகள் சிறு சிறு தாக்குதல்களை நடத்தியிருக்கின்றன. 2007–2008 ஆம் ஆண்டில் 57 இடங்களிலே யானைகள் சிறிய சிறிய வீடுகளையும் கடைகளையும் இடித்துச் சின்னச் சின்னச் சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

*நண்பகல் 12–00*

மேலும், வால்பாறையிலே உள்ள குடியிருப்புப் பகுதிகளிலே யானைகள் இப்போதும் சுற்றிச் சுற்றி வருவதால் மக்கள் இரவு நேரங்களிலே உறக்கம் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே, நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக கும்கி யானைகளை நிரந்தரமாக அங்கே நிறுத்தி வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்



பொறுப்பேற்றதற்குப் பிறகு வால்பாறையிலே முள் வேலி அமைத்து இருக்கின்றார்கள். அதற்காக வால்பாறை மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் பாராட்டுதலை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வால்பாறையிலே கடந்த ஆண்டு, மாரிமுத்து என்பவர் யானை மிதித்து இறந்து இருக்கிறார். அதற்காக ரூ.25,000 உடனடியாக தமிழக அரசு உதவி புரிந்து இருக்கிறது. அதற்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், யானை மிதித்து இறந்தால் ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது. தமிழக அரசு ரூ.25,000–மும் மத்திய அரசு ரூ.75,000–மும் வழங்குகின்றன. மத்திய அரசிடமிருந்து அந்த ரூ.75,000 வருவதற்கு மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், தமிழக அரசே அந்த ரூ.75,000–ஐயும் சேர்த்து, ரூபாய் ஒரு இலட்சத்தைக் கொடுத்துவிட்டு, மத்திய அரசு பணம் வழங்கும்போது அதை எடுத்துக்கொள்ளலாம் என்பதை இந்த நேரத்திலே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேலும், வீடுகளையும், கடைகளையும் யானைகள் இடிக்கின்றபோது, ரூ.1,000, ரூ.2,000, ரூ.3,000 என்று அரசு சிறிய தொகை வழங்குகிறது. இது அந்த மக்களுக்குப் போதவில்லை. ஆகவே வீடுகளை இடித்தால், கடைகளை இடித்தால், கூடுதலாகத் தொகையை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் வால்பாறைக்கு வந்து அந்த மக்களைச் சந்தித்து, அங்கு ஓர் ஆலோசனைக் கூட்டத்தைப் போட்டு, ஓர் ஆய்வு நடத்தி, குடியிருப்புப் பகுதிகளுக்கு யானைகள் வாராமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வனத் துறை அமைச்சர் அவர்கள் வால்பாறையைப் பொறுத்தவரையில் முழுக் கவனம் செலுத்தி, சிறப்பாகப் பணியாற்றியதால்தான் அங்கே யானைகளினுடைய தொந்தரவுகள்—வீடுகளையும், கடைகளையும், சத்துணவுக் கூடங்களையும் இடிப்பது—கொஞ்சம் தவிர்க்கப்பட்டு இருக்கின்றன. அவர் எடுத்த நடவடிக்கைக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய வால்பாறை தொகுதியிலே உள்ள கவரக்கல், பார்லே, புதுத்தோட்டம், ஸ்டான்மோர், தாய்முடி, தோணிமுடி, கஜமுடி, இஞ்சிப்பாறை, ஸ்ரீ முருகன் எஸ்டேட் போன்ற பகுதிகளிலே நடந்த 14 நிகழ்வுகளை இங்கே சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள். அதிலே 5 இடங்களிலே நியாய விலைக் கடைகள் சேதப்படுத்தப்பட்டு இருப்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். பொதுவாக, அக்டோபர் முதல் மார்ச் மாதம் வரை, ஏனென்றால் தென்மேற்கு பருவ மழை முடிந்ததற்குப் பிறகு, நீர் ஆதாரம் குறைந்து போகின்ற காரணத்தால், நீர் ஆதாரத்திற்காகவும், உணவுப் பண்டங்களுக்காகவும், யானைகளின் நடமாட்டம் அந்தப் பகுதிகளிலே அதிகமாக இருக்கிறது. அதனால் அவை வருகின்ற நேரத்தில், அதைக் கண்காணிப்பதற்காகக் கண்காணிப்புக் குழு, சரகர், வனக் காவலர், வனக் காப்பாளர் இவர்களைக் கொண்டும், அதைப்போல, தினக்கூலி அடிப்படையில் சிலரை அமர்த்தியும் அங்கே குழுக்கள் அமைக்கப்பட்டு யானைகளினுடைய நடமாட்டம் கண்காணிக்கப்படுகிறது. மீறி அந்த யானைகள் வெளியே வருமேயானால், அவை பழக்கப்பட்ட கும்கி யானைகளைக் கொண்டு விரட்டி அடிக்கப்படுகின்றன. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட இங்கே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

பொதுவாக, நியாய விலைக் கடைகளிலே, யானைகள் விரும்பிச் சாப்பிடுகின்ற உப்பு, சர்க்கரை, வெல்லம் போன்ற பொருட்கள் இருக்கின்ற காரணத்தினால், அந்தக் கடைகளைக் குறி வைத்து யானைகள் தாக்குகின்றன. மேலும், அந்தக் கடைகள் எல்லாம் பெரும்பாலும் மண் சுவராலே கட்டப்பட்டு இருப்பதால், அவற்றுக்கு எளிதாகப் போய்விடுகின்றன. அதனால் நடமாடும் நியாய விலைக் கடைகளை அமைக்க வேண்டும் என்று அங்கேயுள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஏனென்றால், கடை எப்படியிருந்தாலும் அது தாக்கப்படுகின்ற காரணத்தால், அதைத் தடுப்பதற்காகச் சம்பந்தப்பட்டவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 12-05*

அதுமட்டுமல்லாமல், குடியிருப்புப் பகுதிகளில் நியாய விலைக் கடைகளை முடிந்த அளவிற்குத் தவிர்த்திடுமாறும், கொஞ்ச தூரத்திலே அவற்றை அமைக்குமாறும் சொல்லப்பட்டிருக்கிறது.





இவற்றையெல்லாம் மீறி யானைகள் வெளியே வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள், ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் விவசாயிகள்மீது அக்கறை கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள், அவர்களுடைய கடன்களை இரத்து செய்த தலைவர் கலைஞர் அவர்கள், விவசாயிகளுடைய பயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டும், விவசாயிகளுடைய நலன்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக முன்பெல்லாம் எவ்வளவு மின் வேலி அமைத்தார்கள் என்றெல்லாம் கணக்குப் பார்க்காமல், சென்ற ஆண்டு மட்டும் 2006–2007 –லே 262.5 கி.மீ. மின் வேலி 4 கோடியே, 24 இலட்சம் ரூபாய் செலவிலே அமைக்கப்பட்டது. இந்த ஆண்டு 303.25 கி.மீ. மின் வேலி அமைப்பதற்கு அவர்கள் 4 கோடியே, 85 இலட்சத்து 20 ஆயிரம் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அந்த வகையில் சென்ற ஆண்டு வால்பாறை பகுதியிலே 8 கி.மீ. மின் வேலி 12.85 இலட்சம் செலவிலே அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 10 கி.மீ. 16 இலட்சம் செலவிலே அமைக்கப்படவிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்னும் அதிகமாக வேண்டுமென்றுதான் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள், என்னை அனுப்பி, அங்கே மத்திய அமைச்சரோடு நான் கடந்த மாதம் 24 ஆம் தேதி டெல்லியிலே அமைச்சரைச் சந்தித்துப் பேசியதோடு, தேசிய வன உயிரின வாரியத்தினுடைய தலைவரையும் சந்தித்து இந்த மின் வேலி அமைப்பதனுடைய முக்கியத்துவத்தை அவர்களுக்கு வலியுறுத்தி—ஏனென்றால், வன உயிரினங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமேயானால் அவை வனத்திலிருந்து வெளியே வருமேயானால் அதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் அவற்றைப் பழி தீர்க்க முயற்சி செய்வார்கள். அதுமட்டுமல்லாமல் அவை வெளியே வருகின்ற நேரத்தில் சில கெட்ட எண்ணம் உள்ளவர்கள் அவற்றைத் தாக்குவதற்கு முயல்வார்கள். எனவே, இவை எல்லாம் தடுக்கப்பட வேண்டுமேயானால்—மின் வேலி அமைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, இன்னும் அதிகமான தூரத்திற்கு நீங்கள் அனுமதி தர வேண்டுமென்று; அவர்களிடம் நாங்கள் சொல்லி வந்திருக்கிறோம். அவர்களும் அதன் உண்மையை உணர்ந்து, தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு, எல்லாம் உரிய தொகை வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகை போதாது என்று சொன்னார்கள். வருவாய்த் துறை அந்தப் பாதிப்பிற்கு இழப்பீடு பற்றி என்ன தொகை நிர்ணயிக்கிறதோ அந்தத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. தலைவர்

[திரு. என். செல்வராஜ்] [2007 அக்டோபர் 22

கலைஞர் அவர்கள்தான் இதற்கும், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு பயிர்ப் பாதுகாப்பிற்கு, பயிர்களுக்கு இழப்பீடாக, சென்ற ஆண்டு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்டி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) என்ன? திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கவன ஈர்ப்பிலே ஒரே ஒரு வரியில் கருத்தைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. இப்போதும் யானைகள் சோலையாறு பகுதியில் இருப்பதால் கும்கி யானைகளை அங்கே நிரந்தரமாக நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வரும் நிதியாண்டில் மின் வேலிக்கு வால்பாறையில் கூடுதலாக நிதியொதுக்கி அதிகமான தூரத்திற்கு மின் வேலி போட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஈ) மேட்டூர் அணையின் உபரிநீர் கடலில் கலப்பதைத் தடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) என்ன திரு. மணி சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. அதை நம்முடைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பாசனத்தில் தமிழ்நாடு பற்றாக்குறை மாநிலமாக இருந்து வருகிறது. நமக்கு ஒரு பக்கம் ஆந்திர அரசு பாலாற்றில் அணை கட்டி நம்முடைய பங்கை எடுத்துக்கொள்கிறது. கர்நாடக மாநிலம் தொடர்ந்து நம்முடைய உரிமையை மறுத்து வருகிறது. கேரள அரசு முல்லைப்பெரியாற்றின் அணை உயரத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்துவதற்குத் தடையாக இருந்து வருகிறது. இப்படி சுற்றிலும் தடையாக இருந்து



2007 அக்டோபர் 22] [திரு. ஜி.கே. மணி]

வருகிற வேளையில் நாம் இருக்கிற தண்ணீரையாவது முறையாகப் பயன்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை அரசுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். உதாரணத்திற்கு இப்போது காவிரி மன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்பு 205 டி.எம்.சி., இறுதித் தீர்ப்பு 192 டி.எம்.சி. வித்தியாசம் 13 டி.எம்.சி. தான். பாலாற்றிலே குப்பத்தில் அணை கட்டுவதனாலே நமக்கு ஒரு டி.எம்.சி. தண்ணீர் குறைவு. முல்லைப் பெரியாற்றிலே 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தினால் 1½ டி.எம்.சி. தண்ணீர்தான் கூடுதலாகத் தேக்கி வைக்க முடியும். ஆக, இப்படிப் பார்த்தால் ஒட்டுமொத்தமாக, 15 டி.எம்.சி. தண்ணீருக்காக நாம் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறோம். ஆனால்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, முதலில் இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கத் தயாராக இருக்கிறார்களா என்று தெரிந்துகொண்டுதான் நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் திடீரென்று இந்தக் கேள்வியைக் கேட்டால் எப்படி?

**திரு. ஜி.கே. மணி:** சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட பிரச்சினையில் மழைக் காலங்களிலே நீர் வரத்து அதிகரித்து மேட்டூர் அணை நிரம்பி வழிகிறது. இந்த ஆண்டு மட்டும் மேட்டூர் அணை 6 முறை நிரம்பி, நிறைய நீர் வீணாகக் கடலில் கலந்திருக்கிறது. உதாரணத்திற்கு 2005 ஆம் ஆண்டு எடுத்துக்கொண்டால் 142.569 டி.எம்.சி. தண்ணீர் வீணாகக் கடலுக்குச் சென்றிருக்கிறது. அதைப்போல 2006 ஆம் ஆண்டில் 6.12 டி.எம்.சி. தண்ணீர் வீணாகக் கடலுக்குச் சென்றிருக்கிறது. இந்த ஆண்டு ஏறக்குறைய 67.15 டி.எம்.சி. தண்ணீர் வீணாகச் சென்றிருக்கிறது. ஆகவே, நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவது, இப்படி மேட்டூர் அணையிலிருந்து வீணாகச் செல்லக்கூடிய தண்ணீரை, கடலில் கலக்கக்கூடிய தண்ணீரை, நாம் முறையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுதான். சேலம் மாவட்டம், மேட்டூர் அணையை உள்ளடக்கி இருக்கிற மாவட்டம். அது பாசன வசதி இல்லாத மாவட்டம். ஆகவே, மேட்டூர் அணையின் உபரி நீரை சேலம் மாவட்டம் முழுவதும் பயன்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே அந்த மாவட்டத்தில் 150 ஏரிகள் இருக்கின்றன. இன்னும் கூடுதலாக புதிய ஏரிகளை உருவாக்கலாம். ஆக, குறைந்த செலவுத் திட்டத்திலே, சேலம் மாவட்டம் முழுவதும் பயன்படக்கூடிய

வகையிலே இந்த உபரி நீரைப் பயன்படுத்துவதற்கான திட்டத்தை அரசு நடப்பு ஆண்டிலே நிறைவேற்றுமா, அதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திடீரென்று இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தாலும், எனக்கு ஞாபகத்தில் இருப்பதை நான் தெரிவிக்கிறேன். முதலில் காவிரியிலே மழைக் காலங்களில் மிகையாக ஓடி வருகின்ற நீர் கடலிலே கலக்கிறது, எந்தெந்த ஆண்டு எவ்வளவு கலக்கிறது என்று புள்ளிவிவரங்களைச் சொன்னார். இந்த அரசு அந்தப் புள்ளிவிவரத்தை அறியும். ஆனால், எவ்வளவுதான் தண்ணீர் கடலிலே கலந்தாலும் அதை ஒன்றும் செய்ய முடியாது. காரணம், காவிரியினுடைய வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் தண்ணீரை நீங்கள் எங்காவது கட்டித் தடுத்தால் அதைக் கர்நாடகம் objection செய்யும். இன்னும்கூட இப்போது சொல்கிறேன்; நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேகூட தலைவர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள்; இந்த அரசு தெரிவித்திருந்தது. இராமநாதபுரத்திற்குக் குடி தண்ணீருக்காக எடுத்துக்கொண்டு போகிறோம் என்று சொன்னோம். ஆனால், இப்போது அதற்கே கர்நாடக அரசு என்ன கடிதம் எழுதியிருக்கிறது தெரியுமா? இன்னும் 1924 ஆம் ஆண்டு agreement நடைமுறையில் இருக்கிறது. காரணம், நடுவர் மன்றம் தீர்ப்பு கொடுத்தது; தீர்ப்பின் மீது நாம் மறுபடியும் விளக்கம் கேட்டிருக்கிறோம், Notification வந்த பிறகுதான், 1924 ஆம் ஆண்டு agreement காலாவதி ஆகுமே தவிர, அதுவரையில் அது இருக்கும் என்றுதான் தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது, ஆக, இன்றைக்குப் பார்த்தாலும் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கிறது, நடைமுறையிலே இருக்கிற காலத்தில் எங்களைக் கேட்காமல் நீங்கள் எதையும் கட்டக்கூடாது, ஆகவே, நீங்கள் எடுத்தது எப்படி என்று கடிதம் எழுதியிருக்கிறது. ஆனால், தண்ணீரை எப்படியாவது வறண்ட பகுதிக்குக் கொண்டுபோக வேண்டும் என்பதற்காகத்தான் முதல்வர் அவர்கள் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். இதிலே பெரும் பகுதி என்ன என்று கேட்டால்—இன்னும் கொஞ்சம் நான் விளக்கமாகச் சொல்வேன், ஆனால் சொல்லக்கூடாது. சொன்னால், இன்னும் அது கர்நாடகத்திற்குச் சாதகமாகப் போய்





முடியும். ஆனால், தீர்ப்பு ஒன்று இறுதியான நிலைக்கு வந்த பிறகுதான், இதற்குத் திட்டவட்டமான முடிவுகளை எந்த அரசாக இருந்தாலும் எடுக்க முடியும். அதற்கிடையில் என்ன செய்வது என்பதில், சில விஷயங்களில் இந்த அரசு சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதை நான் விளக்கமாக இந்த அவையில் நாட்டு நலனைக் கருதிச் சொல்லக்கூடாது.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் சார். உட்காருங்கள் முதலில். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து இரண்டாவது முதல் அறுபத்து ஏழாவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் ஏழாவது முதல் பன்னிரண்டாவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2007–2008 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் பத்தொன்பதாவது முதல் இருபத்து நான்காவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

[2007 அக்டோபர் 22

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு கிறித்தவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்தவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்தவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



2007 அக்டோபர் 22]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஈ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2007). மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2007)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன், என்ன சொல்லுங்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக இந்த நிதி ஒதுக்கச் சட்டத்தை வரவேற்கிற அதே வேளையில், சில கருத்துகளைச் சொல்ல நான் விழைகிறேன்.

---

@ 10-10-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது

[திரு. சி. ஞானசேகரன்] [2007 அக்டோபர் 22

நம்முடைய தமிழகத்தில் இப்பொழுது விலைவாசி மிக விரைவாக உயர்ந்துகொண்டே போய்க்கொண்டிருக்கிற காரணத்தினாலே, கட்டுமானப் பணிகள் நடைபெறாமல் பல இடங்களிலே, ஏன் அரசுப் பணிகள் கூட இன்று நிறைவேற்றப்படாமல் தவிக்கின்ற நிலை பற்றி ஏற்கெனவே இந்த அவையில் விவாதித்திருக்கிறோம். குறிப்பாக, சிமெண்ட் விலை இன்று மூட்டை 250 ரூபாய், 255 ரூபாய் என்று உயர்ந்துகொண்டே போய்க்கொண்டிருக்கிறது. உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்கூட, அரசு சிமென்டை இப்போது இறக்குமதி செய்து மூட்டை 230 ரூபாய்க்குக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று இந்த அவையிலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். இருந்தாலும், அந்த 230 ரூபாய் என்பதுகூட (குறுக்கீடு) அரசாங்கப் பணிகளுக்கே பொதுவாக rate of schedule போடுகிறபோது சிமெண்ட் விலை 150 ரூபாய்தான் ஒரு மூட்டைக்கு என்று வைத்து இன்று கணக்கிட்டு ஒப்பந்தத்தை விடுகிறார்கள். ஆகவே, சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும். அதேபோல, மணல் விலை. பொதுவாக இயற்கையாகக் கிடைக்கக்கூடிய மணலைக்கூட இன்று மக்கள் வாங்க முடியாத ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. அரசாங்கமே அதை விற்பனை செய்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் மணல் விலையைக் கொஞ்சம் குறைத்துக் கொடுத்தாவது இந்தக் கட்டுமானப் பணிகளுக்கு நீங்கள் வழிவகை காண வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கம்பி விலை என்று பல்வேறு பொருட்களின் விலைகளைப் பார்த்தால் இன்று விஷம்போல ஏறிக்கொண்டிருக்கின்றன. ஆகவே, நான் பல முறை இந்த அவையிலே சுட்டிக்காட்டியதைப்போல, இந்த விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு துறையையே ஏற்படுத்திக்கூட, காய்கறி விலையிலிருந்து எல்லா விலையையும் கட்டுப்படுத்துவதற்கு அவ்வப்போது நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் காற்று சரியாக அடிக்காத காரணத்தாலே காற்றாலைகள் இப்போது ஓடவில்லை; Windmill-கள் ஓடாத காரணத்தினாலேதான் மின்வெட்டு அடிக்கடி ஏற்படுகிறது என்கிற கருத்தை இந்த அவையிலே சொன்னார்கள். காற்றாலைகள் ஓட காற்று அடிக்கச் செய்வதற்கு நாம் எந்தவிதமான உபாயத்தையும் கடைப்பிடிக்க முடியாது. இப்போது



2007 அக்டோபர் 22] [திரு. சி. ஞானசேகரன்]

எங்களுடைய வேலூரை எடுத்துக்கொண்டால் 15 முறை ஒரு நாளைக்கு டப் டப் என்று current போய்க்கொண்டே இருக்கிறது. சிலநேரங்களில், எட்டு மணி நேரம்கூட current இல்லை.

பிற்பகல் 12–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது Finance சம்பந்தப்பட்ட Bill. மின்சாரத் துறை பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, பொதுவாக consolidate செய்து, we can discuss, விவாதம் இன்றி நாம் எடுத்திருக்கிறோம். விவாதத்தை short –ஆக முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, நாம் மின்சாரத்தை மின்வெட்டு இல்லாது கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். Transformer-களைப் பொருத்துவதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். Sub-Stations பல இடங்களிலே இல்லாததுதான் பெரும்குறை. அந்த Sub-Station போடுவதற்கு இடப் பிரச்சினை வந்துவிடுகிறது. ஒன்று, நம்முடைய வருவாய்த் துறையிடம் நிலம் இருக்கிறது. இல்லை என்று சொன்னால், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் அந்த நிலம் இருக்கிறது. அந்த நிலத்திற்கு guideline value மட்டும் போட்டு அவர்கள் proposal அனுப்புகிறார்கள். ஆனால் இவர்கள் guideline value-வை நாங்கள் ஒத்துக்கொள்ளமாட்டோம், market rate கொடுத்தால்தான் நாங்கள் கொடுப்போம் என்று சில நேரங்களிலே சொல்வதால் file திரும்பிக்கொண்டிருக்கிறது. ஆகவே, வேலூரை எடுத்துக்கொண்டால்கூட சத்துவாச்சாரியிலே ஒரு Sub-Station போடுவதற்கு, ஐந்து ஏக்கர் நிலத்திற்கு proposal அனுப்பினால் உடனே அதற்கு என்ன சொல்கிறார்கள் என்றால், guideline value-வை நாங்கள் ஒத்துக்கொள்ளமாட்டோம், market rate value வேண்டும் என்று file-ஐ இப்போது நகராட்சித் துறை திருப்பி அனுப்பிக்கொண்டிருக்கிறது. ஆகவே, இப்போது எங்கு பார்த்தாலும் இந்த Sub-Station போட முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அந்த மார்க்கெட் விலையைக் கொடுப்பாரோ (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Sub-Station போடுவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக guideline value–வோ, market value–வோ, முதலிலே நீங்கள் enter upon permission கொடுத்துவிடுங்கள். அதன்பிறகு நீங்கள் மின்

[திரு. சி. ஞானசேகரன்] [2007 அக்டோபர் 22

துறையிடமிருந்து பணத்தினை வாங்கிக்கொள்ளுங்கள். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Ration-ஐப் பொறுத்த அளவில் இப்போது கோதுமை அதிக அளவிலே கிடைக்கவில்லை; அதாவது இரண்டு கிலோதான் கொடுக்கிறார்கள். முன்பெல்லாம் ஐந்து கிலோ, ஆறு கிலோ ரேஷன் கடைகளிலே கொடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்போது ரேஷன் கடைகளிலே இரண்டு கிலோ கோதுமை மட்டும்தான் கொடுக்கிறார்கள். எங்களுடைய வேலூர் பகுதியை எடுத்துக்கொண்டால் பச்சரிசி கிடைக்கவில்லை. ஆகவே ration-ல் அவற்றைக் கொடுப்பதற்கும் நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேலூரை மாநகராட்சியாக மாற்றுவதற்கு எங்களுடைய பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே பல கருத்துகளை வேலூரிலே அறிவித்தார்கள். ஆகவே, நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்வதெல்லாம், எங்களுடைய பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுடைய ஆதரவோடு காட்பாடி போன்ற பகுதிகளை எல்லாம் வேலூரோடு இணைத்து உடனடியாக வேலூரை மாநகராட்சியாக நீங்கள் அறிவிக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை தர்மபுரி மாவட்டத்திற்கு மட்டும் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் கொண்டுவருவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய வேலூர் மாவட்டம் தற்போது கடுமையான குடிநீர்ப் பஞ்சத்தில் இருக்கிற காரணத்தினாலே, ஒகேனக்கல் திட்டத்தை ஜப்பான் நிதியுதவியோடோ அல்லது நபார்டு நிதியுதவியோடோ நீங்கள் பணத்தைப் பெற்று வேலூர் மாவட்டத்தையும் அதிலே இணைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அது ஒரு பக்கம், இது ஒரு பக்கம் என்று சேர்த்தே செய்வதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூரில் ஒரு I.T. Park-ஐயும், அதுபோல Airport-க்கு நிலத்தினைக் கையகப்படுத்தி ஒரு பெரிய Airport-ஐயும் உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2007 அக்டோபர் 22] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2007 அக்டோபர் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 12–25

# 8. அரசினர் தீர்மானங்கள்

## (அ) அலுவல் வரிசையில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். பேரவை அலுவல் வரிசையில் மாற்றம். பேரவை விதி 30 (3)–ன்கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள வரிசையை மாற்றுவது குறித்த மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 30 (3)–ன்கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள இனம் 6 மற்றும் இனம் 7(1), இனம் 5(1)–க்குப் பிறகு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



2007 அக்டோபர் 22]

## (ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்தவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின்கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2007), 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2007), 2007 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2007) மற்றும் 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2007) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு கிறித்தவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்தவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2007), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்தவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2007)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாநிலத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின்கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை*

---

@ 22-10-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





*பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான ஒதுக்கீடான 30 சதவீதத்திற்கு உள்ளாக தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள கிறித்தவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் தலா 3½ விழுக்காடு ஒதுக்கீடு செய்ததற்கு வகை செய்வதற்கான சட்டமுன்வடிவினை அறிமுகம் செய்து, சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து இன்றுவரை பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு அமைப்புகளால் வைக்கப்பட்ட சிறுபான்மை மக்களின் கோரிக்கைக்கு அங்கீகாரம் தந்து, அதற்கு வடிவம் தந்து, அதனை உரிமையாக்கித் தந்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சருக்கு தமிழகத்திலே வாழ்கின்ற ஏறக்குறைய 1¼ கோடி சிறுபான்மை மக்களின் சார்பாக என் நெஞ்சம் நிறைந்த நன்றியினை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*சில நேரங்களிலே உணர்வுகளின் பெருக்கால், உணர்ச்சிகளின் பெருக்கால் வார்த்தைகள் தோற்றுவிடுவது உண்டு. நெஞ்சில் தேங்கி நிற்கின்ற நன்றியைச் சொல்வதற்கான நல்ல வார்த்தைகளை நான் தேடித் தேடி வளம் மிகுந்த தமிழ் மொழியில்கூட அத்தகைய நன்றியினைச் சொல்வதற்கான வார்த்தை எனக்கு இன்று கிடைக்காமல், வார்த்தைகளிலும், தமிழிலும் நான் தோற்றுப் போனேன் என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். இது எனது நிலைமை மட்டுமல்ல, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் அதற்கு முன்பாகவும் தேர்தல் காலங்களிலும் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே ஒரு நல்லாட்சி அமைய வேண்டும் என்பதற்காக தேவாலயங்களிலே பிரார்த்தனை செய்தவர்கள், பள்ளிவாசல்களிலே துவா செய்தவர்கள், இந்த ஆட்சி வருமா என்று காத்திருந்தவர்களுக்கு அவர்கள் வயிற்றில் பால் வார்ப்பதைப்போல, ஓர் அற்புதமான சட்டமுன்வடிவிற்கு இங்கே வடிவம் தந்து, அதை உரிமையாக்கித் தந்திருக்கிறார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

*பிற்பகல் 12–30*

*கடந்த காலங்களிலே மதமாற்றத் தடைச் சட்டம் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, சிறுபான்மை மக்கள் ஒவ்வொரு நாளும் பயத்திலும், பீதியிலும் வாழ்ந்த காலங்கள் உண்டு. அது சிறுபான்மை மக்களின் போதாத காலம். இன்று சிறுபான்மை மக்களின் பொற்காலம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட கால மாற்றத்திற்கு வழி செய்திருக்கிற தமிழக முதல்வருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2007 அக்டோபர் 22

15 நாட்களுக்கு முன்பு இந்த இடஒதுக்கீட்டை எதிர்த்து, தமிழகத்தினுடைய தலைநகரிலே சென்னையிலேகூட ஒரு போராட்டம் நடந்தது. சிறுபான்மை மக்களுக்கான இடஒதுக்கீட்டை எதிர்த்து, போராட்டம் நடத்தியவர்கள் யார்; அதற்கு தலைமையேற்றவர்கள் யார் என்கிற முகவரிகளைப் பார்த்தாலே அந்தப் போராட்டத்தின் கணைகள் எங்கேயிருந்து புறப்பட்டு வந்தன என்று தெரியும். அந்தப் போராட்டத்திற்குத் தலைமையேற்றவர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருந்தாலும்கூட, தங்கள் அரசியல் கட்சிகளினுடைய வர்ணங்களை மறைத்துக்கொண்டு, ஒரு பொது நல அமைப்பின்சார்பில் அந்தப் போராட்டத்தை நடத்துவதாக விளம்பரப்படுத்திக்கொண்டு போராடினார்கள். அந்தப் பொது நல அமைப்பு என்கிற போர்வையை விலக்கிவிட்டு, அந்தப் போராட்டத்திற்குத் தலைமையேற்றவர்கள் எங்கேயிருந்து வருகிறார்கள் என்று பார்த்தாலே, அவர்கள் காலங்காலமாக சமூக நீதிக்கும் சிறுபான்மை மக்களுக்கான இடஒதுக்கீட்டிற்கும் எதிராக வாழ்ந்தவர்கள் என்பதை அவர்களது கடந்தகால வரலாறு சொல்லும். இந்த இடஒதுக்கீடு என்பது எங்களுக்கு யாரும் வழங்கிய தர்மம் அல்ல. சிறுபான்மை மக்களுக்கு இடஒதுக்கீடு என்பது அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற சலுகை அல்லது இனாம் என்று சிலர் அரசியல்ரீதியாகத் தவறாக நினைக்கிறார்கள். இந்த இடஒதுக்கீடு என்பது இந்த மக்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய தார்மீக உரிமை என்பதை, இந்தியாவிலேயே தமிழகத்தில் முதன்முதலாக அங்கீகரித்த பெருமை டாக்டர் கலைஞர் அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) நான் அதை இந்த அவையிலே பதிவு செய்ய ஆசைப்படுகிறேன்.

இன்று ஜனநாயகம் என்பது வாக்குச் சீட்டோடு முடிந்துவிடுவது அல்ல. வாக்குச்சாவடிக்கு வந்த, இந்தியாவிலே இருக்கின்ற ஏறக்குறைய 100 கோடி மக்களுக்கும், யாருக்கெல்லாம் வயதும், அரசியல் சாசனச் சட்ட தகுதிகளும் இருக்கின்றனவோ, அவர்களுக்கெல்லாம் வாக்குரிமை கொடுத்திருக்கிறோம் என்பதால் மட்டுமே ஜனநாயகம் நிறைவு பெற்றுவிடாது. ஜனநாயகம் என்பது முழுமையான அதிகாரப் பங்கீடு; ஒவ்வொருவருடைய தகுதிக்கேற்ப, அவர்கள் சமூகத்தில் இருக்கின்ற நிலைக்கேற்ப, அவர்களுடைய பங்களிப்புக்கேற்ப அவர்களுக்கும் அதிகாரத்திலே பங்கீடு வேண்டும் என்பதுதான், முறையான அதிகாரப் பங்கீடு. அந்த முறையான பங்கீடு மட்டும்தான் ஜனநாயகத்தினுடைய தரத்தினை—the quality of democracy என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். அத்தகைய தரத்தினை—உயர்த்தும். இந்த தேசத்திலே,



2007 அக்டோபர் 22] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

அதுவும் குறிப்பாக, தமிழகத்திலே ஒரு கோடி மக்களுக்கு, சமூக வாழ்வில், அரசியல் வாழ்வில், பொருளாதாரத்தில், அரசின் அங்கீகாரம் பெற்ற பதவிகளிலே அவர்களுக்கு நியாயமான ஒதுக்கீடு இல்லையென்று சொன்னால், இந்த ஒரு கோடி மக்களும் சமூகத்தினுடைய விளிம்பு நிலைக்கு வெளியே நிற்கக்கூடிய வாய்ப்பைத்தான் பெறுவார்கள். இன்று பாரதத்தினுடைய பிரதமருக்கும், இன்று மத்திய அரசை வழிகாட்டுகின்ற அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும் இந்த நல்ல நேரத்திலே நான் என்னுடைய நன்றியைப் பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். ஏனென்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, இங்கேயிருக்கின்ற நம்முடைய இடதுசாரி பொதுவுடைமைக் கட்சிகளைச் சார்ந்த நண்பர்களாக இருந்தாலும் சரி, சமூக நீதிக்காகத் தொடர்ந்து பல்லாண்டுகளாகப் போராடி வருகின்ற பல்வேறு அரசியல் இயக்கங்களைச் சார்ந்தவர்கள், நம்மைப் பார்த்து என்ன சொன்னார்கள் என்று சொன்னால், எப்பொழுதெல்லாம் சிறுபான்மை மக்களுக்கு ஆதரவாக ஒரு நடவடிக்கை எடுக்கிறோமோ, அப்பொழுதெல்லாம் நம்மைப் பார்த்து அவர்கள் கொச்சைப்படுத்தினார்கள். சிறுபான்மை மக்களுடைய ஓட்டுப் பொறுக்கிகள் என்று சொன்னார்கள். சிறுபான்மை மக்களுடைய வாக்குகளை வாங்குவதற்காக இவர்கள் எல்லாம் இத்தகைய இந்த appeasement politics, அவர்களுடைய ஆசைக்குத் தீனி போடுகின்ற ஒரு கீழ்த்தரமான அரசியல், என்றெல்லாம் நம்மைக் கொச்சைப்படுத்தினார்கள். ஆனால் மத்திய அரசு நியமனம் செய்த நீதியரசர் சச்சார் கமிட்டியினுடைய அறிக்கை இந்த நாட்டிலே, உள்ளபடியே சிறுபான்மை மக்களுடைய நிலை என்ன என்பதை விளக்கிச் சொல்லியிருக்கிறது. அதிலும் இந்த நாட்டிலே பெரும்பான்மையாக வாழ்கின்ற, சிறுபான்மையிலே பெரும்பான்மையாக வாழ்கின்ற இஸ்லாமிய மக்களுடைய, சமூக, பொருளாதார நிலையை எடுத்துப் பார்த்தால், நீதியரசர் சச்சார் கமிட்டியினுடைய அறிக்கை சொல்கிறது. சில ஊர்களில், சில நகரங்களில் ஒடுக்கப்பட்ட பட்டியலின மக்களைவிட, அவர்களைவிட, இவர்கள் கேவலமான சூழ்நிலையிலே வாழ்கிறார்கள் என்று. இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், ஐயாயிரம் ஆண்டுகளாக சமூக அதிகாரத்தால் பழிவாங்கப்பட்ட, பட்டியலின மக்கள், உரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள் பல்வேறு காலகட்டங்களிலே அவர்களுக்கு எந்தவிதமான உரிமைகளும் கொடுக்காமல், ஐயாயிரம் ஆண்டுகளாக, ஆறாயிரம் ஆண்டுகளாக சமூக நீதிக்காகப் போராடியவர்கள், அவர்களுடைய சமூக நிலைமையும்—ஏறக்குறைய

இந்திய நாட்டினுடைய ஆட்சியையும், அதிகாரத்தையும் 400, 500 ஆண்டுகள் கையிலே வைத்திருந்த—இஸ்லாமிய மக்களுடைய நிலைமையும் ஒரே தட்டிலே இருந்தது; அதைவிடக் கேவலமாக இருக்கிறது என்று சொன்னால், அதற்கு என்ன காரணம்? குடிநீர் வசதிகூட அவர்களுக்குச் சரியாகக் கொடுக்கப்படவில்லை. ஒவ்வொரு பதவி நியமனங்களாக பட்டியல் வைத்திருக்கிறார்கள். உயர் நீதிமன்ற நீதிபதிகளிலே, மாநில ஆளுநர்களிலே, வெளிநாட்டுத் தூதுவர்களிலே, இராணுவத்திலே, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளிலே, இந்த நாட்டில் அதிகார ஊற்றுகள் எங்கெல்லாம் பெருக்கெடுக்கிறதோ, அங்கெல்லாம் இந்த தேசத்திலே சிறுபான்மை மக்களுக்கு என்ன பிரதிநிதித்துவம் இருக்கிறது என்று சொன்னால், அவர்களுடைய ஜனத் தொகைக்கேற்ப, அவர்கள் பங்கேற்பிற்கேற்ப, ஐம்பதில் ஒன்றுகூட, இருபதில் ஒன்றுகூட வழங்கப்படவில்லை என்பதை ஆதாரங்களோடு, யாரும் மறுக்க முடியாத ஆதாரங்களோடு, தந்திருக்கிற நீதிபதி சச்சார் கமிட்டி அறிக்கை வந்திருக்கிற நேரத்திலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அந்த அதிகாரத்தின் வாசலைத் திறந்து, உனக்கும் நான் திறந்துவிடுகிறேன், இந்த நாட்டின் அதிகாரத்திலே நீயும் பங்கேற்கலாம் என்று அவர்கள் சொல்லியிருப்பது, எங்களுக்கெல்லாம் இந்த நாட்டினுடைய வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பெரிய பங்கு இருக்கிறது என்கிற உண்மையைத் தந்திருக்கிறது.

*பிற்பகல் 12–35*

நான் அடிக்கடி சொல்வேன்; நம்முடைய முதலமைச்சரைப் பார்த்துப் பொறாமைப்படுவேன் என்று சொல்வேன்; சில நேரங்களிலே கோபப்படுவேன் என்றுகூடச் சொல்வேன். ஏன் சொல்வேன் என்று சொன்னால், அடுத்த தலைமுறைக்குச் செய்வதற்கான எந்த நல்ல காரியங்களையும் அவர் விட்டு வைக்கமாட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா நல்ல காரியங்களையும், சமூக நீதிக்கான எல்லா முன்னெடுப்புகளையும், சமூக நீதிக்கான எல்லா முயற்சிகளையும் அவரே செய்துவிடுகின்ற அந்தப் பேராசை, அந்த வேகத்தைப் பார்த்து, நான் சில நேரத்திலே பொறாமைப்படுவேன். அடுத்த தலைமுறைக்கு சிலவற்றை விட்டு வையுங்கள் என்றுகூட அவரிடம் வேடிக்கையாகக் கேட்பேன். அவர்கள் சமூக நீதியின் காவலராக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள். தமிழகத்திலே வாழ்கின்ற ஏறக்குறைய ஒன்றேகால் கோடி, சட்டத்தினுடைய கணக்கீடு—





இன்னும் முழுமையான கணக்கீடு வர வேண்டும் — சிறுபான்மையின இஸ்லாமிய மக்கள் தமிழ்நாட்டில் 35 இலட்சம் என்கிற அளவிலே அவர்களை நாம் மதிப்பீடு செய்திருக்கிறோம். அரசு வேலைவாய்ப்புகள் குறுகிக்கொண்டே வருகின்றன. ஆனால், கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, கடந்த 3, 4 மாதங்களாக அரசு வேலைவாய்ப்பிற்கான வாய்ப்புகளைப் பார்க்கின்றபோது, பல்லாயிரக்கணக்கான ஆசிரியர் பணியிடங்கள், இன்று காலையிலேகூட நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே பொறியாளர்களுக்கு வேலைவாய்ப்பு, நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய துறையிலே ஏராளமான கல்லூரி விரிவுரையாளர்கள் பணி, காவல் துறையிலே காவல் துறை துணை ஆய்வாளர்கள், காவலர்கள், நம்முடைய மாண்புமிகு அண்ணன் நேரு அவர்களுடைய தலைமையிலே கேட்டவர்களுக்கு எல்லாம், கண்டக்டர், டிரைவர் என்று ஏறக்குறைய பத்தாயிரம், பன்னிரண்டாயிரம் பதவிகள், (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு வேலைவாய்ப்புகள் வருகிற நேரத்திலே, இந்த ஆணை வந்திருக்கிறது; இந்த ஒதுக்கீடு வந்திருக்கிறது. இவ்வளவு வேலைவாய்ப்புகளிலும் இந்த ஒதுக்கீட்டினுடைய பயன் கிடைக்க வேண்டும்.

கலைஞர் அவர்களுடைய சீரிய அரசியல் தலைமைக்கு இன்னொரு வேண்டுகோளையும் நான் வைக்க ஆசைப்படுகிறேன், சிறுபான்மை மக்களின் சார்பாக. மதம் மாறிய ஆதி திராவிட மக்கள், கிறித்தவ மதத்திற்கும் மாறியிருக்கிறார்கள், இஸ்லாமுக்கும் மாறியிருக்கிறார்கள். ஆனால் நாட்டினுடைய அரசியல் சாசனச் சட்டம் அவர்களை தாழ்த்தப்பட்ட, பட்டியலின மக்களாக, இந்து மதத்திலிருந்து பௌத்தத்திற்கு மாறியவர்களை அங்கீகரிக்கிறது, இந்து மதத்திலிருந்து சீக்கிய மதத்திற்கு மாறியவர்களை அங்கீகரிக்கிறது. ஆனால் இங்கே இவர்கள் கிறித்தவ மதத்திற்கு மதம் மாறியிருக்கிறார்களேயொழிய, அவர்களின் சமூக அடையாளங்கள் அழிக்கப்படவில்லை என்பதை நான் இந்த அவையிலே ஒத்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் மதம்தான் மாறியிருக்கிறார்களேயொழிய, அவர்கள் ஏற்றுக்கொண்ட மதங்களுடைய மனம் இன்னும் மாறவில்லை என்பது மிகத் தத்ரூபமான உண்மை. அவர்கள் இன்னும் ஆதி திராவிடர்களாகத்தான் வாழ்கிறார்கள். அவர்களை ஆதி திராவிடர்களாகவே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நாட்டிலே இருக்கின்ற பல்வேறு

தலைவர்கள், even நம்முடைய பாராளுமன்றத்திலே இருக்கின்ற நம்முடைய ராம் விலாஸ் பாஸ்வான் போன்ற அமைச்சர்கள்கூட — இந்தக் கோரிக்கையை—வலுவாக வைத்திருக்கிறார்கள். டாக்டர் கலைஞர் அவர்களுடைய செல்வாக்கு இன்று தமிழகத்திலே இருந்து அவர்கள் என்ன சொன்னாலும் மத்திய அரசு கேட்கும் என்கிற அந் நிலை இருக்கிற நேரத்திலே, அதையும் நான் பதிவுசெய்ய வேண்டும். அரசியல்ரீதியான அதிகாரப் பங்கீட்டிற்கும், நாம் இதை ஒரு முன்னெடுப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். இந்த அவையிலே நான் ஏற்றுக்கொள்கிறேன், இந்த அவையிலே 234 சட்டமன்ற உறுப்பினர்கள், ஏறக்குறைய 15, 17 விழுக்காடு சிறுபான்மையின மக்கள் இருக்க வேண்டுமென்று சொன்னால், இந்த அவையிலே, ஏறக்குறைய இஸ்லாமியர்களும், கிறித்தவ உறுப்பினர்களும் 30, 32 பேர் இருக்க வேண்டும். அத்தகைய பிரதிநிதித்துவம் இருக்கிறதா என்பதை நாம்தான் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். ஏழை, எளிய மெலிந்துபோன மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது அரசியல் சாசன சட்டத்தினுடைய கடமை. மெஜாரிட்டி, பெரும்பான்மை ஆள வேண்டும், சிறுபான்மை வாழ வேண்டும். அவ்வாறு வாழ்வதற்கு அவர்களுடைய பிரதிநிதித்துவத்தை உரிமைப்படுத்திக் கொடுக்கின்ற முன்னெடுப்பாக, முன்னுரையாக இந்த இடஒதுக்கீடு அமைந்திருக்கிறது. அந்த வகையிலே இந்த இடஒதுக்கீட்டை காங்கிரஸ் கட்சியின் சார்பாக வரவேற்று, வாழ்த்தி அமைகின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

(திரு. மா. ராஜசேகரன் மற்றும் திரு. கு. ஹசன் அலி ஆகியோர் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களாலே கொண்டுவரப்பட்ட 42/2007 ஆம் ஆண்டின் சட்டமுன்வடிவின்மீது





பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சிலவற்றை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–40*

இந்தியத் திருநாட்டில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார்தான் சமூக நீதிக்கு வழிகாட்டினார் என்ற கூற்று தமிழ் மண்ணிலே, இந்திய நாட்டிற்குப் பெருமையளிக்கிற வேளையில், தந்தை பெரியார் அவர்கள் வழியிலேதான் தமிழகம் நடந்து கொண்டிருக்கிறது. இதோ பாருங்கள்; எல்லா நிலைகளிலும் சமூக நீதி காக்கப்படுகிறது என்பதன் அடையாளம்தான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கிறித்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் வழங்கப்பட்ட இடஒதுக்கீடு என்பதை நான் இங்கே முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அந்த வகையில், நம்முடைய தமிழ்நாட்டில் மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டுவந்த நேரத்தில், அந்தச் சட்டத்தையெல்லாம் உடைத்தெறிந்து, அந்தத் தடைகளைத் தூளாக்கிவிட்டு, 'இதோ இஸ்லாமியர்களே, கிறித்தவர்களே, நீங்கள் சிறுபான்மையினர் என்பது பெயராலே; நீங்கள் மக்கள் தொகையிலே பெரும்பான்மையினர்; உங்களுக்கு இடஒதுக்கீடு காத்திருக்கிறது' என்று தொடர்ந்து சொல்லி வந்த முதலமைச்சர் கலைஞர் அவர்களால்தான், இன்றைக்கு இஸ்லாமியர்களுக்கும், கிறித்தவர்களுக்கும், கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், 3.5 விழுக்காடு இடஒதுக்கீடு என்ற நிலையை எட்டியிருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரியது என்பதை நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையிலே எதிர்பார்த்துவந்த இந்த இடஒதுக்கீட்டை, இந்தச் சட்டமுன்வடிவின்மூலம் வாரி வழங்கிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் மனதாரப் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புவது. நீங்கள்தான் இந்தியத் திருநாட்டில் சமூக நீதியைக் காத்த முதல்வர்; தந்தை பெரியார் வழியிலே இயங்கிக் கொண்டிருக்கிற சமூக நீதிப் போராசான் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் உங்களை மனதாரப் பாராட்டுகிறேன். காரணம், தமிழகத்தில் இதற்கு முன்னாலே பல்வேறு இடஒதுக்கீட்டுப்

[திரு. ஜி.கே. மணி] [2007 அக்டோபர் 22

போராட்டங்கள் நடந்து வந்த நிலைகளையெல்லாம் உணர்ந்து பார்த்து, பிற்படுத்தப்பட்டவர் பட்டியலிலே இருந்த, மிகப் பெரும்பான்மை மக்களாக இருந்த சமூகத்தவர்களை, வன்னியர்கள் உள்ளிட்ட 108 சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை, மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று பட்டியலிட்டு, 20 விழுக்காடு வழங்கிய பெருமை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தமிழ்நாட்டின் வரலாற்றில் நிலைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அப்படி மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 விழுக்காடு வழங்கியபிறகு, இங்கே சிறுபான்மையின மக்களுக்கு இடஒதுக்கீடு இல்லையே என்ற ஏக்கம் இருந்த வேளையில், மீண்டும் அதை, 7 விழுக்காட்டாக இரண்டு சமூக மக்களுக்கும் வழங்கிய பெருமை தங்களுக்கே உண்டு. ஆகவேதான், சமூக நீதி காத்த முதல்வர் என்று நான் உங்களைப் பாராட்டுகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, இந்த இஸ்லாமியர்களும், கிறித்தவர்களும் வேறு எங்கிருந்தும் வந்தவர்கள் அல்ல; வேற்று நாட்டவர்கள் அல்ல. இங்கேயே பிறந்தவர்கள்; இங்கேயே வளர்ந்து கொண்டிருப்பவர்கள்; வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்; இந்த மண்ணின் மைந்தர்கள் என்பதைத் தாங்கள் உணர்ந்தாலும்கூட, இந்த இட ஒதுக்கீட்டை வழங்கினால் பிரச்சினைகள் ஏதும் வந்துவிடுமோ என்ற தயக்கத்தால்தான், காலம் தாழ்த்தினீர்கள் என்பதை எல்லோரும் அறிவர். அந்த வகையிலேதான், சமூக நீதியிலே அக்கறை உள்ளவர்கள் எல்லாம் உங்களுக்குப் பின்னாலே இருக்கிறார்கள்; சமூக நீதிக்காகக் குரல் கொடுத்து வருகிறார்கள்.

மதமாற்றத் தடைச் சட்டத்தை இந்த மண்ணிலே கொண்டு வந்தார்கள். நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அதை உடைத்தெறிந்தீர்கள். ஆகவே, உங்கள் பின்னாலே இருக்கிற இந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணி என்பது, சமூக நீதியிலே அக்கறையுள்ள அணி. சமூக நீதியிலே அக்கறை உள்ளவர்கள், உங்கள் பின்னாலே இருக்கின்ற காரணத்தால், நீங்கள் சமூக நீதிக்காகத் தொடர்ந்து செய்யுங்கள்; அதிலே வெல்லுங்கள்; நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்பதை நான் இங்கே மீண்டும் ஒருமுறை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



2007 அக்டோபர் 22] [திரு. ஜி.கே. மணி]

குறிப்பாக, எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்கள்கூட, பாட்டாளி மக்கள் கட்சி என்ற பேரியக்கம் தொடங்கிய காலத்திலேயிருந்து, இந்தச் சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீடு கேட்டு வந்தார்கள். சமீபத்திலே, தமிழ்நாட்டினுடைய பல்வேறு இடங்களிலே மாநாடுகள்; அந்த மாநாடுகளிலே பேசிய இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள் எல்லாம் சொன்னார்கள். "இல்லை, இல்லை; கிடைக்காது; நாங்கள் போராடுவோம்" என்று சொன்னார்கள். ஆனால், அங்கே பேசிய சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்கள் சொன்னார்கள்; 'இல்லை, இது சமூக நீதியைக் காக்கிற அரசு; கலைஞர் அரசு. கட்டாயம் கிடைக்கும்; காலம் கனிந்து கொண்டிருக்கிறது; விரைவில் சட்டம் வரும்; ஆகவே, முதலமைச்சர் அவர்களே, இதற்கான ஒரு சிறப்புக் கூட்டத்தை, சட்டமன்றக் கூட்டமாகக் கூட்டுங்கள்; சட்டத்தை நிறைவேற்றுங்கள்; அல்லது வரக்கூடிய கூட்டத் தொடரிலே நிறைவேற்றுங்கள்' என்று கோரிக்கை வைத்தார்கள். ஆகவே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கோரிக்கை, சிறுபான்மை மக்களின் கோரிக்கை, மருத்துவர் அய்யா அவர்களின் கோரிக்கை, இந்தக் கூட்டத் தொடரிலே நிறைவேறியிருக்கிறது என்ற பெருமை, ஒட்டுமொத்தச் சிறுபான்மை மக்களுக்குக் கிடைத்த பெருமை; (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்குக் கிடைத்த வெற்றி. இது யாருக்கும் கிடைத்த வெற்றி அல்ல; நம்முடைய சமூக நீதிக் காத்த முதல்வர் கலைஞர் அவர்களுக்குக் கிடைத்த வெற்றி, வெற்றி, வெற்றி என்று நான் இங்கே பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-45

நம்முடைய அன்பிற்குரிய திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்தியத் திருநாட்டில் வட மாநிலங்களிலே தலித் சமுதாயத்தைச் சார்ந்த கிறித்தவர்கள், தலித் கிறித்தவர்களுக்கு, தலித் புத்தர்களுக்கு, தலித் இஸ்லாமியர்களுக்கு தலித் இடஒதுக்கீட்டிலே உரிமை இருக்கிறது. (குறுக்கீடு) தலித் இஸ்லாமியர்கள், தலித் கிறித்தவர்கள், தலித் புத்தர்கள், தலித் சீக்கியர்கள். ஆகவே, தலித் சீக்கியர்களுக்கும் இந்த இடஒதுக்கீட்டிலே உரிமை இருக்கிறது. ஆனால், தென்னகத்திலே அந்தத் தலித் இடஒதுக்கீட்டிலே தலித் கிறித்தவர்களுக்கு உரிமை இல்லை. இது எந்தவகையிலே நியாயம் என்பது எல்லோருடைய கேள்வி. ஆகவே, இதை நிறைவேற்றுவது மத்திய அரசாக இருந்தாலும், நம்முடைய முதலமைச்சர் அவர்களே, சமூக நீதியிலே அக்கறை இருக்கின்ற காரணத்தால், அதை நிறைவேற்றுவதற்கு நீங்கள்தான் முயற்சிக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2007 அக்டோபர் 22

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைப்போல ராஜிந்தர்சிங் சச்சார் அவர்கள் தன்னுடைய குழு அறிக்கையிலே படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். இஸ்லாமியர்களுடைய வாழ்க்கை நிலை என்ன? அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது சச்சார் குழு அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல, ரங்கநாத் மிஸ்ரா குழு அறிக்கை கிறித்தவர்களுக்கான வாழ்வாதாரங்களைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது. ஆகவே, இவையிரண்டும் நிறைவேற்றப்பட வேண்டுமானால் மத்திய அரசை வழிநடத்துகிற, மத்திய அரசுக்கு அரிய ஆலோசனைகள் வழங்கிக்கொண்டிருக்கிற கலைஞர் அவர்களே, நீங்கள்தான் முயற்சிக்க வேண்டும். அதுவும், முயற்சித்தால் தங்கள் காலத்திலே நிறைவேறும் என்ற நம்பிக்கை ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கும் இருக்கிறது. இந்தியா முழுவதும் வாழக்கூடிய சிறுபான்மை மக்களுக்கு இருக்கிறது. அதையும் நிறைவேற்றுவதற்கு முன்வரவேண்டுமென்று நான் இங்கே வேண்டுகோளை வைக்கிறேன். இந்தக் கிறித்தவர்கள் கோரிக்கை வைக்கிறார்கள். நீங்கள் இடஒதுக்கீட்டை வழங்கியிருக்கிறீர்கள், மகிழ்ச்சி. ஆனால், அவர்கள் தொடர்ந்து வைத்திருக்கிற கோரிக்கை "நாங்கள் பல்வேறு மாவட்டங்களிலே, கல்லறைத் தோட்டங்கள் அமைப்பதற்கு இடம் கேட்கிறோம், கிடைக்கவில்லை. தேவாலயங்கள் கட்டுவதற்கு இடம் கேட்கிறோம். நீண்ட நாள் இல்லாத நிலை இருக்கிறது. மசூதி அமைப்பதற்கு இடம் கேட்கிறோம், கிடைக்கவில்லை" என்ற இந்தக் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று சிறுபான்மை மக்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போல, கிறித்தவக் கல்வி நிறுவனங்களுக்குக் கடந்த காலங்களிலே மானியம் வழங்கப்பட்டு வந்தது. அந்த மானியம் இப்போது குறைக்கப்பட்டுவிட்டது. இன்னும் தரமான கல்வி நிறுவனங்கள், நன்கொடை இல்லாத கல்வி நிறுவனங்கள் கிறித்தவக் கல்வி நிறுவனங்களாக இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட கல்வி நிறுவனங்களுக்குப் போதிய ஆசிரியர்கள் பற்றாக்குறை, மானியக் குறைகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தினாலே, தேவையான ஆசிரியர் பணியிடங்களை வழங்க வேண்டும். கூடுதலாக அவர்களுடைய கல்விச் சேவைக்கு நிதி ஒதுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



2007 அக்டோபர் 22] [திரு. ஜி.கே. மணி]

அதைப்போல, உள்ளாட்சி மன்றங்களிலே கிறித்தவர்களும், இஸ்லாமியர்களும் கூடுதலாக வாழக்கூடிய பகுதிகளிலே போட்டியிடுவதற்கு எங்களுக்கு தனி இடங்கள் வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கோரிக்கைகளை சிறுபான்மை மக்களின் அரசாக இருக்கிற, ஒட்டுமொத்த சமூக நீதி காக்கிற அரசாக இருக்கிற காரணத்தினாலே முதலமைச்சர் அவர்களே, நீங்கள் இதையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி, ஒட்டுமொத்த கிறித்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும், கல்வியிலேயும், வேலைவாய்ப்பிலேயும் இடஒதுக்கீடு வழங்கியிருக்கிற முதலமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் மீண்டும் மீண்டும் பா.ம.க. சார்பிலே வரவேற்றுப் பாராட்டி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி. (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**: பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் 13 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. பேசுகின்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டமுன்வடிவைப் பற்றி மட்டும் பேசி விரைவிலே முடித்தால் மற்ற சட்டமுன்வடிவுகளும் இங்கே நிறைவேற்றப்படும். அதற்கு அனைவரும் ஒத்துழைக்கும்படி தாங்கள் கேட்டுக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சுருக்கமாகப் பேசுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில், இஸ்லாமிய பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், கிறித்தவப் பிற்படுத்தப்பட்டவர்களுக்குமான தனியார் கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட கல்வி வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு வாய்ப்புகளை, முன்னுரிமையை வழங்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டி வரவேற்கின்றது. மற்ற சட்டமுன்வடிவுகளுக்கும், இந்தச் சட்டமுன்வடிவுக்கும் வேறுபாடு இருக்கிறது. ஆகவேதான், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது 'சுருக்கமாகப் பேசுங்கள்' என்று சொன்னாலும், அந்தச் சட்டமுன்வடிவுகளுக்கும் இந்தச் சட்டமுன்வடிவுக்கும் கொள்கைரீதியாகவும், சித்தாந்தரீதியாகவுமே வேறுபாடு இருக்கிறது. ஆகவே, இதற்கான நேரம் ஒதுக்குவதில் ஒன்றும் தவறில்லை என்பது என்னுடைய கருத்து. இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றுவதற்கு

முன்முயற்சி எடுத்து, இதைக் கொண்டு வந்த நமது தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியையும் பாராட்டுதல்களையும் இந்த நேரத்திலே சமர்ப்பித்துக் கொள்கின்றோம். ஏனென்றால், பல்வேறு கூட்டங்களில் பல்வேறு அமலாக்கத்தில் பல பாராட்டுகள் கிடைத்திருக்கும். ஆனால், இது ஒரு கொள்கைபூர்வமான நடவடிக்கை. இன்றைக்கு இந்திய நாட்டில் இருக்கக்கூடிய மத வெறி சக்திகளுக்கு மத்தியில் எடுத்த முடிவைப் பின்வாங்காமல் தமிழகத்திலே இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், கிறித்தவ பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கக்கூடிய இந்த இட ஒதுக்கீடு சட்டம் என்பது மிகப் பெரிய வெற்றிகரமான நடவடிக்கை என்ற முறையிலே தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டுகளையும், நன்றிகளையும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மீண்டும் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

*பிற்பகல் 12–50*

இன்னொன்று, ஏற்கெனவே அ.தி.மு.க. ஆட்சியின்போது இதே போன்ற குளிர்காலக் கூட்டத் தொடரில் தீபாவளிக்கு முன்பாக மதமாற்றத் தடைச் சட்டம் என்பது கொண்டுவரப்பட்டு நாங்கள் எல்லாம் கடுமையாக எதிர்த்தோம். இன்றைக்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில் அதே தீபாவளிக்கு முன்பாக குளிர்காலக் கூட்டத் தொடரில் சிறுபான்மை மக்களுக்கான இடஒதுக்கீடு சட்டம் வருவது என்பது ஒரு வேறுபட்ட சூழ்நிலையை, வேறுபட்ட அரசியல் நடவடிக்கையை நமக்குக் காட்டுகின்றது.

அன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் 'அ' என்ற எழுத்து அமங்கலம் என்பதற்கான வேறுபாடு என்று குறிப்பிட்டார்கள். அந்த வேறுபாட்டோடு, இந்தச் சட்டத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் அன்றைக்குச் சிறுபான்மை மக்களுக்கு எதிரான மதமாற்றத் தடைச் சட்டத்தை அ.தி.மு.க. ஆட்சியிலும், சிறுபான்மை மக்களுக்கான உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், வளர்ப்பதற்குமான சட்டத்தை தி.மு.க. ஆட்சியிலும் கொண்டுவந்தது என்பது (மேசையைத் தட்டும் ஒலி) அதன் வேறுபாட்டை எங்களுக்கு உணர்த்துகிறது.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக, இந்தச் சட்டமுன்வடிவைக் கொள்கை உடன்பாட்டோடு நாங்கள் வரவேற்கின்றோம். ஏனென்றால், பிற்படுத்தப்பட்ட மக்களில் இஸ்லாமிய மக்களும், கிறித்தவ மக்களும் கடைகோடியில்





இருக்கிறார்கள். கல்வியும் வேலைவாய்ப்பும் என்பது முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்ட ஒரு சூழ்நிலை; அன்றாடங் காய்ச்சிகளாக இருக்கிறார்கள். பழைய பேப்பர், பழைய இரும்பு இவற்றை விற்றால்தான் அவர்களுக்கு வாழ்க்கை. இரவு நேரங்களில் பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் ஆவி பறக்கக்கூடிய வேர்கடலையைத் தள்ளுவண்டியில் வியாபாரம் செய்பவர் சாதாரண இஸ்லாமியப் பெரியவர்களாக இருப்பார்கள், இளைஞர்களாக இருப்பார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் பீடி சுற்றக்கூடிய தொழிலில், தோல் பதனிடக்கூடிய தொழிலில் இன்றைக்கும் கல்வியை இழந்து, அரசு வேலைவாய்ப்பை இழந்து இருக்கக்கூடிய இவர்களைக் கண்டறிந்து, இந்தச் சட்டம் கொண்டுவருவது என்பது கல்வியை, வேலைவாய்ப்பை அவர்களுக்கு வழங்கக்கூடிய காரியம்.

இன்னும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் சொல்ல விரும்புவது, பொருளாதாரத்தில் மிகவும் முன்னேறிய பிற்படுத்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தாங்களே முன்வந்து இதுவரை அவர்கள் பெற்ற சலுகைகளை, உரிமைகளை ஏழைகளாக, பரம ஏழைகளாக இருக்கக்கூடியவர்களுக்கு விட்டுக்கொடுப்பதற்கு முன்வர வேண்டும். அதைக்கூட அரசு பரிசீலிப்பதில் தவறு இல்லை என்பது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய வேண்டுகோள்.

அதேபோன்று, இந்தச் சட்டம் அமலாகக்கூடிய நேரத்தில் இது சரியாகப் போய்ச் சேர்ந்திருக்கிறதா என்பதைக் கண்காணிப்பதற்கான ஒரு குழுவும், எதிர்காலத்தில் இது எவ்வாறு அமலாகிக்கொண்டிருக்கிறது என்பதை மக்களுக்கும் இந்தச் சபைக்கும் தெரிவிக்கக்கூடிய நடவடிக்கைகளில் தொடர் நடவடிக்கைகளிலே தமிழக அரசு ஈடுபட வேண்டுமென்ற வேண்டுகோளையும் நாங்கள் வைக்கிறோம்.

அதேபோன்று நமது தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய அருமைத் தலைவர், மாண்புமிகு சகோதரர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, சச்சார் குழுவின் பரிந்துரைகள் நாடாளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டு பல மாத காலம் ஆகியும் இன்னும் அமலுக்கு வரவில்லை. ஆகவே, அவர்களுடைய உணர்வுகள் உட்பட இன்றைக்கு இந்திய நாட்டில் சச்சார் குழு பரிந்துரைகளை மத்திய அரசு அமல்படுத்த முன்வந்தால்தான் சிறுபான்மை மக்களுக்கு கல்வியையும் வேலைவாய்ப்பையும் கொண்டு செல்ல முடியும். ஆகவே தமிழக அரசு,

மத்திய அரசை, சச்சார் குழு பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கான தனியான நிதி ஒதுக்கீடு உட்பட செய்து கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும். அப்படிச் செய்து கொடுத்தால்தான் இந்தச் சட்டம் தமிழகத்திலே முழு வீச்சோடு செல்லும் என்ற முறையிலே அதையும் தமிழக அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தமிழக முதல்வர் அவர்களுக்கும், அரசுக்கும் நன்றி கூறி இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு திரு. தி. இராமசாமி.

*பிற்பகல் 12–55*

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நமது சட்டமன்ற வரலாற்றில் மேலும் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படவேண்டியதொரு நிகழ்ச்சியாக, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இன்றைக்கு கிறித்தவ, இஸ்லாமிய சிறுபான்மை மக்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பில், அதுவும் தனியார் உள்ளிட்ட நிறுவனங்களிலும் இட ஒதுக்கீடு அளிக்க வேண்டுமென்ற ஒரு பொற்காலத் திட்டத்தை, சட்டமுன்வடிவை இங்கே தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் முழுமனதோடு வரவேற்று, நமது முதல்வர் அவர்களுக்கும், இந்த ஆட்சிக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஒரு மதத்தைப் பின்பற்றிய காரணத்தால், அந்த மதத்தைப் பின்பற்றினார்கள் என்பதற்காக, தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வந்த ஒரு கொடுமை, இந்திய சமுதாயத்திலும், தமிழகத்திலும் நீடித்தது. அரசமைப்புச் சட்டம், யாரும் எந்த மதத்தையும் பின்பற்றலாம், அவர்கள் விரும்புகிற அனைத்து மதங்களும் சமம் என்று வழிவகுத்துக் கொடுத்திருந்தாலும், இவர் இஸ்லாமியர், இவர் கிறித்தவர் என்ற வேறுபாடுகள் தொடர்ந்து கொண்டேயிருந்தன. அந்த வேறுபாடுகள் தொடர்ந்து கொண்டிருந்த ஒரு காரணம் மட்டுமல்ல, அப்படிப்பட்ட மக்கள் இந்தச் சமுதாயத்தில் முன்னேறுவதில், பல்வேறு தடைகளும் அவர்களுக்கு இருந்தன. இங்கே பேசிய உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப்போன்று, முஸ்லீம் மக்களும், கிறித்தவ மக்களும், இன்றைக்குக் கடுமையாக உழைத்து, கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய மக்கள் பகுதி ஆவார்கள். அவர்களுக்கான இந்த இடஒதுக்கீட்டை, இதுவரை வேறெந்த மாநிலத்திலும் இல்லாமல், தமிழகத்தில் முதன்முதலில் அமல் நடத்தச் சட்டம்



கொண்டுவந்திருப்பது. இடஒதுக்கீட்டுக் கொள்கையில், தந்தை பெரியார் அவர்களுடைய வழியில், எங்களுக்கெல்லாம் ஒருகாலத்தில் அந்தக் கொள்கையில் ஒருவிதமான reservation இருந்தது மாறி, அந்த இடஒதுக்கீடு என்பது காலத்தினுடைய அவசியம், தமிழ்நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு அவசியம் என்பதை நாங்கள் உணர்ந்துகொண்டு, தந்தை பெரியாருடைய கொள்கைக்கு நாங்களும் ஒத்து, அதை அமல் நடத்துகின்ற நம்முடைய முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களுடைய பின்னால், இந்த ஒதுக்கீட்டுக் கொள்கையின் பின்னால் நாங்கள் அணிவகுத்து நிற்கிறோம்.

அந்த அடிப்படையில் ஒரு விஷயத்தை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். சச்சார் குழு அறிக்கையை அமல்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை, இந்தியா முழுவதும் இன்றைக்கு எழுந்து கொண்டிருக்கிறது. அந்தச் சச்சார் குழு அறிக்கையில் இடஒதுக்கீடும் வேண்டுமென்ற ஒரு குறிப்பும் இருக்கிறது. எனவே, அந்தச் சச்சார் குழு அறிக்கை அமலாக்கத்திற்கு ஒரு முன்னோடியாகத் தமிழகத்தில் இன்றைக்கு முஸ்லீம் மக்களுக்கு இந்த இடஒதுக்கீடு என்பது வழங்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே மத்திய அரசு, இன்றைக்கு வேலைவாய்ப்பில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகித இடஒதுக்கீடு இருந்தாலும், கல்வியில் அந்த ஒதுக்கீட்டைக் கொண்டுவரும்போது, அதை எதிர்த்துப் போராட்டங்களும் நடந்தன. உச்ச நீதிமன்றமும் அதற்குத் தடைவிதித்துவிட்டது. இன்றைக்கு நீதிமன்றங்கள் தேவையில்லாமல் பல்வேறு பிரச்சினைகளில் தலையிட்டு, இன்னும் சொல்லப்போனால், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசைக்கூட மிரட்டுகின்ற ஒரு நிலைக்கு, எச்சரிக்கை விடுகின்ற ஒரு நிலைக்குச் சென்றுகொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், நாம் இந்தச் சட்டத்தை இன்றைக்குக் கொண்டுவந்திருக்கிறோம். அப்படிப்பட்ட நிலையில் இந்தச் சட்டம் முழுமையாக அமலாவதற்கான முறையில், சரியான முறையில் இயற்றப்பட வேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் அரசினுடைய கவனத்திற்கு நாங்கள் கொண்டுவர விரும்புகிறோம். அதேபோல, தலித் கிறித்தவர்கள், இன்றைக்கு அவர்கள் கிறித்தவ மதமாக இருந்தாலும், அவர்கள் வாழ்க்கை முறையிலிருந்து, அனைத்து நடவடிக்கைகளிலும் தலித்களாகவே இருக்கிறார்கள். எனவே, மதம் மாறிய காரணத்தினாலேயே, தலித்களுக்குக் கிடைக்கக்கூடிய எந்தவிதமான உரிமையும், சலுகையும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே, அந்தத் தலித் கிறித்தவர்களுக்குரிய அந்தச் சட்டத்தை, தலித்துகளாக அங்கீகாரம் செய்வதற்கான அந்தச் சட்டத்தை, மத்திய அரசு கொண்டு

வருவதற்கான அந்தப் பெரு முயற்சியை நமது தலைவர் கலைஞர் அவர்கள் முயன்றால் முடியும் அதையும் நடத்திக்காட்ட வேண்டுமென்று இந்த நேரத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

இப்படிப்பட்ட ஒதுக்கீடுகள் எல்லாம், இன்றைக்குத் தமிழக மக்கள் மத்தியில் பாகுபாடுகளைப் போக்கி, அனைவரும் சமச்சீரான நிலையில் வளர்ந்து, எந்தவிதமான பிளவும், வகுப்புவாத, அதாவது மதரீதியான பிளவோ அல்லது ஜாதிரீதியான பிளவோ அதையொட்டிய பிரச்சினைகளோ ஏற்படாதவண்ணம் அனைவரும் சமம், ஒற்றுமையுடன் தமிழகத்தில் வாழ்கிறார்கள் என்ற நிலையை மேலும் உறுதிப்படுத்துவதற்கு இப்படிப்பட்ட சட்டங்கள் உதவியாக இருக்கும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த முதல்வர் அவர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மீண்டும் நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வரலாற்றில் தமிழகத்தில் முதல்முதலாக இப்படிப்பட்ட அற்புதமான ஒரு சட்டத்தை, எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று அறிவிக்கின்றவகையில், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை இங்கே இருக்கின்ற அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, வெளியிலே இருக்கின்ற அரசியல் கட்சிகளும் ஆதரிக்கின்றன. அதனாலே இந்தச் சட்டத்தை ஏகமனதாக நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்பதை நீங்கள் இந்த மன்றத்திலே அறிவிக்க வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். அப்துல் பாசித்.

***திரு. எச். அப்துல் பாசித்:** என் அன்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சிறுபான்மை சமுதாயத்திற்கு இட ஒதுக்கீடு



அளிக்கும் மசோதாவை அறிமுகம் செய்து சக உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவு அளித்து அந்தச் சட்டத்தை இன்றைக்குக் கொண்டு வந்திருக்கின்ற இந்த அரசாங்கத்திற்கு நன்றி சொல்வதோடு இந்த அறிவிப்பை ரம்சான் மாதத்தினுடைய முதல் நாளன்றுதான் நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அன்றைக்கே நான் முதல்வர் அவர்களை அவருடைய இல்லத்திலே சந்தித்து, ரம்சான் மாதத்தில் சொர்க்க வாசல்கள் திறக்கப்படும் என்ற அதீத நம்பிக்கை கொண்ட சமுதாயம், இந்த சமுதாயத்தினுடைய உரிமை வாசலை நீங்கள் திறந்திருப்பதற்கு நன்றி என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த இட ஒதுக்கீட்டுக்கான உரிமைப் பிரச்சினை 1921 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தத் தமிழக அரசில், இன்றைக்கு அதற்கு ஒரு முடிவுரை எழுதியிருப்பது நம்முடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மட்டும்தான். அதேபோல், பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பட்டியலில் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்த்த பெருமை முன்கூட்டியே நம் முதல்வர் அவர்களுக்கு மட்டுமே சேரும். ஏதோ எதிர் வரிசையிலே இருக்கக்கூடியவர்கள் இன்றைக்கு இல்லாமல் போனதற்கு மூல காரணம், அவர்கள் இந்தச் சட்டம், இந்த உரிமை, இந்தச் சமுதாயத்திற்குக் கிடைக்கக்கூடாது என்று எதிர்பார்த்தார்கள். எனவே, அது கிடைக்கும்பொழுது அவர்கள் இந்தச் சபையில் இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், நானும் ஓடோடிச் சென்று பிறப்பால் மானிட சமுதாயத்திற்குள் பிளவை ஏற்படுத்திடாத இறைவனிடத்திலே மெக்காவிற்குச் சென்று இந்த நல்லாட்சி தொடர வேண்டும், நம் முதல்வர் அவர்கள் வாழ்க, வாழ்க என வாழவேண்டும் என்று இறைவனிடத்தில் வேண்டினேன். அவரை வாழ்த்துவதற்கு எனக்கு வயது இல்லை, வணங்குவதற்கு என் மதத்திலே அனுமதியில்லை என்றாலும்கூட, அவர் பேணிக்காத்த நன்னெறிகளை என்னுடைய வாழ்க்கையினுடைய வழிமுறைகளாகப் பின்பற்றுவேன் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். வஸ்ஸலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சையது கௌஸ் பாஷா, பேசப் போகிறீர்களா?

**திரு. சையது கௌஸ் பாஷா:** ஆம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமெனக் கோருகிறேன். இதைத் தொடர்ந்து, நெடுநாள் நம்முடைய எதிர்பார்ப்பாக இருந்த, ஒரு பெரிய பரிசை இன்றைக்குப் பெற்ற மகிழ்ச்சியில், இங்கே உரையாற்றிய கட்சித் தலைவர்களுடைய உணர்வுகளோடு, என்னுடைய உணர்வையும் இணைத்து, பாராட்டுரை, வாழ்த்துரை வழங்கிய அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றியை எதிர்பார்த்து இந்த நிலை எடுக்கப்படவில்லையென்பதை நீங்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள். ஒரு உரிமையை நிலைநாட்டுவதற்காக, எடுத்த முயற்சியில் ஜனநாயகத்தினுடைய ஒப்புதலை இன்றைக்கு நாம் பெற்றிருக்கின்றோம். எதிர்ப்பு இல்லாமல் எந்த நல்ல காரியமும் நடைபெறுவதில்லை என்பது வரலாறு. ஒரு 50, 60 ஆண்டுகளுக்கு முன்பு, நீதிக் கட்சி ஆட்சிப் பொறுப்பிலேயிருந்த அந்தக் காலகட்டத்தில், இந்த சமூக நீதிக்கான வித்து ஊன்றப்பட்டது என்பதும், அதனுடைய விளைவாக, சமுதாயத்திலே ஏற்பட்ட மறுமலர்ச்சி, புறக்கணிக்கப்பட்ட மக்கள், மூலையிலே தள்ளப்பட்ட மக்கள், படிப்பறிவு அவர்களுக்குத் தேவையில்லை என்று விரட்டப்பட்ட மக்கள், இவர்கள் சார்பாக எழுந்த குரல், அந்தக் குரல் வலுவாகி, அதன் காரணமாக, நடேசனார் போன்றவர்கள், நாயர் போன்றவர்கள், தியாகராயர் போன்றவர்கள் புரிந்த போர் முழக்கத்தின் காரணமாக, எழுந்த அந்த உணர்ச்சியினுடைய விளைவுதான் இன்றைக்கு இந்த அவையிலே பூத்துக் குலுங்கி, நம்மையெல்லாம் பூரிப்புகொள்ளச் செய்திருக்கின்ற ஒன்றாகும். ஆனால், இதற்கு இடைக்காலத்திலே எத்தனை எத்தனை சோதனைகள், எத்தனை எத்தனை வேதனைகளை நாம் சந்திக்க நேரிட்டது என்பதை விரிவாக இங்கே விளக்கத் தேவையில்லை. இன்னமும்கூட, அந்தக் கட்டத்திலேயிருந்து நாம் முழுமையாகத் தாண்டிவிடவில்லை. இன்னமும் உச்ச நீதிமன்றம் வரையில் நம்முடைய உரிமைகள் என்ன ஆகும் என்பது கேள்விக்குறியாக இருப்பதை நாம் மறந்துவிடவில்லை.

இங்கே இதனை வரவேற்றுப் பேசிய கட்சிகளின் மாண்புமிகு தலைவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல், முழுமை பெற்றுவிடவில்லை; நம்முடைய கோரிக்கை முழுமையாக



நிறைவேறிவிடவில்லை. இன்னமும் சில தேவைகள், கோரிக்கைகள், அவை நிறைவேற்றப்பட வேண்டுமென்ற ஆதங்கங்கள், இன்னமும் நிறைவேற்ற முன்வரவில்லையே என்ற சலிப்புகள், இவைகள் எல்லாம் நாட்டில் சமுதாயத்தில் இருக்கின்றன.

*பிற்பகல் 1–10*

இதற்கிடையில் நம்மால் முடிந்ததைச் செய்வோம் என்பதற்காகத்தான் இதைத் துணிந்து இந்த அரசு எந்த வகையிலே இதைச் செய்ய வேண்டும் என்பதை யோசித்து, அந்த முடிவை இன்றைக்குச் சட்டமுன்வடிவாக இங்கே கொண்டுவந்து, உங்களுடைய அன்பான ஆதரவைப் பெற்றிருக்கிறது. உள்ளபடியே இந்த நாள் நம்முடைய சட்டப் பேரவையினுடைய வரலாற்றில் ஒரு பொன்னாள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) சமூக நீதி வரலாற்றில் ஒரு புரட்சிகரமான நாள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்தச் சமுதாயம் எழுந்து நடமாட முடியாமல், நடமாட முயன்றாலும் அடி எடுத்து வைக்க முடியாமல் ஆயிரம் தடைகள், குறுக்கீடுகள், முன்னால் இருந்து தள்ளுகின்றவர்கள், பின்னால் இருந்து இழுப்பவர்கள், பக்கத்திலே இருந்து உதைப்பவர்கள் என்று இப்படிப் பல நரக வேதனைகளுக்கிடையே ஆட்பட்டு, அடிமைப்பட்டு, உனக்கு உன்னுடைய தலையிலே எழுதியது இதுதான் என்று சபிக்கப்பட்ட ஒரு நிலையிலே உள்ள பொட்டுப் பூச்சிகளாக, புன்மைத் தேரைகளாகத்தான் நாம் இங்கு வாழ வேண்டும் என்ற ஒரு நிலையிலே அமைந்த சமுதாயமாகத்தான் இருந்தது. இதை இன்றைக்கு உணர்ச்சி உள்ள சமுதாயமாக ஆக்கிய பெருமைக்குரிய தலைவர்களையெல்லாம் — அவர்கள் இன்றைக்கு கல்லறைகளாக ஆகியிருக்கிறார்கள் என்று இருந்தாலும்கூட இங்கிருந்தவாறு அந்தக் கல்லறைகளை நோக்கி — நாம் தொழுவோம், வணங்குவோம், நன்றி காட்டுவோம். நீங்கள் பாடுபடாவிட்டால் எங்களுக்கு விழிப்பு வந்திருக்குமா, எங்களுக்கு வேலை கிடைத்திருக்குமா, எங்கள் வாழ்விலே விளக்கேற்றி வைக்கப்பட்டிருக்குமா என்றெல்லாம், இந்தக் கேள்விகளை நாம் அந்தக் கல்லறைகளை நோக்கி இன்றைக்கு கண் கலங்கிக் கேட்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். எந்த ஒரு அரசியல் கட்சியும் இந்தக் காரியத்திற்காக நெஞ்சு நிமிர்த்தி இதை நான்தான் செய்தேன் என்று சொல்லிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இதை யார் செய்தார்கள் என்பதை விளக்க வேண்டிய நிலையும் இன்றைக்கு இல்லை. மனம் என்ற ஒன்று இருக்குமேயானால், உணர்வு என்ற ஒன்று இருக்குமேயானால், நாம் இந்த நாட்டிலே எப்படி பாதிக்கப்பட்டோம், எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தப்பட்டோம்

என்ற பழைய நினைவுகள் அவர்களுடைய நெஞ்சிலே நிழலாடுமேயானால், இதற்கெல்லாம், இந்த விடியலுக்கெல்லாம், யார் காரணம் என்பதை அவர்கள் அறிவார்கள். அந்த உணர்வுகளைத் தட்டி எழுப்பிய உத்தமத் தலைவர்களுக்கு அவர்கள் இருக்கும், இருந்த திக்கை நோக்கி, அவர்களுடைய கல்லறைகள் இருக்கும் திக்கை நோக்கி நாம் நம்முடைய நன்றி கலந்த வணக்கத்தை இன்றைக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்றைய தலைவர்களிலே நான் இங்கே வரிசைப்படுத்த வேண்டுமேயானால், ஒன்றிரண்டு தலைவர்களுடைய பெயர்கள் விடுபட்டுவிடக்கூடும். அதனால் நாம் எல்லோரும் ஒருமித்த குரலில் ஆதரவு நல்கி, ஒரு தீர்மானத்தை, ஒரு முக்கியமான சட்டத்தை, சட்டமுன்வடிவை நிறைவேற்றுகின்ற நேரத்தில், யாருடைய உள்ளத்திலும் சிறு கிலேசமும் வரக்கூடாது என்கின்ற அந்த உணர்வோடு இன்று இருக்கிற இதே நிலை என்றென்றும் நம்முடைய உள்ளத்திலே இருக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு அவர்களைப்பற்றி விவரமாகச் சொல்ல விரும்பவில்லை. அவைகளையெல்லாம் நாம் தாண்டி இன்றைக்கு வந்திருக்கின்றோம் இன்றைக்கு இந்தப் பெருமையைப் பெற்றிருக்கின்றோம், இந்தப் பயனை அடைந்திருக்கின்றோம். ஆனால், இந்தப் பயனை அடைவதற்கு நாம் நீந்தி வந்த காட்டாறுகள், கடந்துவந்த பாதைகள் எவ்வளவு, எவ்வளவு, எவ்வளவு என்பதை எண்ணிப் பார்த்தால்தான் தெரியும்.

*பிற்பகல் 1–15*

எல்லோரும் வந்திருக்கிறோம். ஆனால் சிலபேர் வரவில்லை என்று ஆதங்கப்பட்டார்கள். விளைந்த நெல்லை, அறுத்த நெல்லை களத்துமேட்டிலே குவித்ததைக் காண வேண்டும் என்கின்ற ஆசை உழுதவனுக்கு, உழைத்தவனுக்கு, அந்த வரப்பிலே இருந்து கண்காணித்தவனுக்கு, களை எடுத்தவனுக்குத்தான் இருக்க முடியுமே தவிர, எல்லோருக்கும் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் பிரதிநிதிகளாகத்தான், இங்கே நாம் வீற்றிருக்கின்றோம். அதனால்தான் நமக்கு இதனுடைய கஷ்டம் தெரிகிறது. பாடுபட்டவனுக்குத்தான் கிடைத்த பலனுடைய அருமை தெரியும். அந்தப் பலனைப் பெற நாம் சிந்திய வியர்வை, ஏன் சில நேரங்களில் கொட்டிய இரத்தம் இவைகள் எல்லாம் சாதாரணமானவை அல்ல. அத்தகைய நிலையைப் பொறுத்துத்தான் இந்த வெகுமதியை இன்றைக்கு நாம் பெற்றிருக்கின்றோம்.

ஒரு சட்டமுன்வடிவு, இதற்கு இவ்வளவு நேரம், இத்தனை தலைவர்கள், இவ்வளவு நெகிழ்ச்சியோடு, உணர்ச்சிகரமாகவெல்லாம்



பேச வேண்டுமா என்றெல்லாம் நாளைக்கு பேசக்கூடியவர்கள் எல்லாம் நாட்டில் இருப்பார்கள். அவர்களைப் பற்றி நாம் கவலைப்பட முடியாது. கவலைப்படாத காரணத்தால்தான் இன்றைக்கு நாம் வெற்றிகளை அடுக்கடுக்காகப் பெற்றுவிட முடிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வெற்றி பெறுவதற்கு நம்மால் முடிந்தது என்றால், நாம் அத்தனை கட்டங்களை மீறி—நீதிமன்றங்கள், வீதிமன்றங்கள் அத்தனையிலும் எடுத்துச் சொன்ன அந்த உண்மைகளை மாண்புகளும் ஏற்றுக்கொண்டார்கள், மக்களும் ஏற்றுக்கொண்டார்கள். அப்படி ஏற்றுக்கொண்டவர்களால்தான் இன்று இந்த வெற்றியை நாம் பெற்றிருக்கின்றோம். இன்னும் பல வெற்றிகளுக்கு இந்த வெற்றி அடிப்படையாக அமைய வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசும்போது இங்கே சொன்னார், எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டீர்களே, நாங்கள் செய்வதற்கு என்ன இருக்கிறது என்று சொன்னார். நான் அப்படிச் சொல்வதற்குக் காரணம், எனக்குப் பிறகும் அவர்கள் எல்லாம் இருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு நான் சொல்கின்றேன். நாங்கள் செய்வதற்கு என்ன இருக்கிறது என்று அங்கலாய்த்தார்கள். நான் சொல்லுகின்றேன், எல்லாவற்றையும் நாங்கள் செய்து முடித்துவிடவில்லை. நாம் செய்து முடித்துவிடவில்லை. நாம் இன்னும் செய்ய வேண்டியது ஏராளம் இருக்கிறது. நாம் சிலையைச் செய்துவிட்டோம். உருவத்தை அமைத்துவிட்டோம். அதை வைக்க வேண்டிய இடத்திலே, ஒரு பீடத்திலே வைத்துவிட்டோம். ஆனால், எந்தச் சிலையைச் செய்தாலும், அந்தச் சிற்பி கடைசியாக அந்தச் சிலையிலே அவன் அழகூட்டுவது அதனுடைய கண்ணைத் திறப்பதுதான். இன்னும் தமிழகத்தினுடைய கண் சரியாகத் திறக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கண்ணைத் திறக்கின்ற காரியத்தைச் செய்து முடிக்கிற வரையில், அந்தக் கண் திறக்கப்படுகிற வரையில், சிலை முழுமையாக ஆகிவிட்டது என்று கூற முடியாது. அந்தச் சிலையை முழுமையாக ஆக்குகின்ற முயற்சியிலே நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த அருமையான முடிவை நாம் எடுப்பதற்கு உதவிய ஓய்வு பெற்ற நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்களுக்கு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் புகழேந்தி, பி. வேலுசாமி, பெர்னார்டு மற்றும் பூங்கோதை செல்லத்துரை, பேராசிரியர் வி. சுந்தரம் இவர்களுக்கெல்லாம் நான் இந்த அவையின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வப்போது இதிலே சந்தேகம் வந்து,

[கலைஞர் மு. கருணாநிதி] [2007 அக்டோபர் 22

இதற்கு ஏதாவது குறுக்கீடுகள் வருமோ, சட்டச் சம்மதம் கிடைக்குமோ என்றெல்லாம் நாங்கள் அச்சமுற்ற நேரத்தில், எங்களுக்கு முழு உதவியையும், தைரியத்தையும் ஊட்டியவர், நண்பர், நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் என்பதை மறக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களும், சமூக நீதிக் காவலர்களாக இருக்கின்ற எல்லாத் தலைவர்களும் அளித்த ஆதரவும், இந்த உணர்வை ஊட்டுகின்ற பத்திரிகையாளர்கள் எழுதிய தலையங்கங்களும், கட்டுரைகளும், எங்களுக்கு மேலும் மேலும் நம்பிக்கையை ஏற்படுத்தி, அந்த நம்பிக்கை இன்றைக்கு வெற்றிக் கனியாகக் கிடைத்திருக்கின்றது. நம்பிக்கையூட்டியவர்களுக்கும், ஆதரவளித்தவர்களுக்கும், அரிய யோசனைகளை இடையிடையே வழங்கியவர்களுக்கும் நான் இந்த அவையின் சார்பாக என்னுடைய நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) இதை நிறைவேற்றிக் கொடுத்துள்ள எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களுக்கும், அளித்த ஆதரவுக்கும் மீண்டும் மீண்டும் நன்றியினை வழங்கி, சமூக நீதிக்காகத் தொடர்ந்து பாடுபட இன்றைக்கு நாம் சபதம் எடுத்துக்கொள்வோம் என்று கூறி, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

பிரிவுகள் 2 முதல் 12 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 12 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகின்றது.



2007 அக்டோபர் 22] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்தவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏகமனதாக ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 9. அறிவிப்பு

**தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

